www.gnanam.info www.gnanam.lk

ISSN 2478-0340

ஒக்டோபர் 2018

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

விலை : ரூபா 100/=

221



## அழகியல் படைப்புகளின் அலைவரிசை

## குப்பிழான் ஐ.சண்முகன்

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்

ஒளி:19
சுடர்:05
221

# பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்!

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.


## ஆசிரியர் குழு

**ஆசிரியர், ஸ்தாபகர் : தி. ஞானசேகரன்**

**இணை ஆசிரியர் : ஞானம் ஞானசேகரன்**

**நிர்வாக ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்**

## தொடர்புகளுக்கு

**தொ.பேசி.** ☞ 0094-11-2586013
0094-77-7306506
**தொ.நகல்** ☞ 0094-11-2362862
**இணையம்** ☞ www.gnanam.info
www.gnanam.lk
**தளம்.ஞானம்.இலங்கை**
**மின்னஞ்சல்** ☞ editor@gnanam.info
editor@gnanam.lk
**அஞ்சல்** ☞ 3B-46th Lane, Colombo-6, Sri Lanka
**வங்கி விபரம்** ☞ T. Gnanasekaran
Acc. No. - 009010344631
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX
(**மணியோடர்மூலம் சந்தா அனுப்பு பவர்கள் வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்**)
**சந்தா விபரம்** ☞ Sri Lanka
**ஒரு வருடம்** :ரூ 1,000/=
**ஆறு வருடம்** :ரூ 5,000/=
**ஆயுள் சந்தா** :ரூ 20,000/=

| | **ஒரு வருடம்** |
|---|---|
| Australia (AU$) | 50 |
| Europe (€) | 40 |
| India (Indian Rs.) | 1250 |
| Malaysia (RM) | 100 |
| Canada ($) | 50 |
| UK (£) | 40 |
| Singapore (Sin. $) | 50 |
| Other (US $) | 50 |

*⊙ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.*
*⊙புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி, ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.*
*⊙பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.*
*⊙படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.*


# இதழினுள்ளே.....


⊙ **கவிதைகள்**
*கவிஞர் நிலா தமிழின்தாசன் 09*
*நல்லையா சந்திரசேகரன் 23*
*சத்திராதி 35*
*இ.ஜீவகாருண்யன் 38*

⊙ **சிறுகதைகள்**
*சூசை எட்வேட் 08*
*முஸ்டீன் 18*
*எஸ். கருணானந்தராஜா 30*
*இணுவை ரகு (குறுங்கதை) 36*

⊙ **கட்டுரைகள்**
*த.அஜந்தகுமார் 03*
*பேராசிரியர் செ. யோகராசா 16*
*கலாநிதி சண்முக சர்மா ஜெயப்பிரகாஷ் 26*
*ச. முருகானந்தன் 33*

⊙ **சினிமா**
*பவனீதா லோகநாதன் 24*

⊙ **விமர்சனம்**
*கே. எஸ். சுதாகர் 37*

⊙ **கேள்வி ஞானம்** *39*

⊙ **பத்தி**
*பேராசிரியர் துரை மனோகரன் 40*

⊙ **சமகால இலக்கிய நிகழ்வுகள்**
*கலாபூஷணம் கே. பொன்னுத்துரை 43*

⊙ **வாசகர் பேசுகிறார்** *47*

# ஆசிரியர் பக்கம்

## யுத்த வெற்றியின் கதாநாயகன் யார்?

கடந்த 26–09–2018 அன்று ஐ.நா. பொதுச்சபையின் 73ஆவது கூட்டத்தொடரில் ஜனாதிபதி ஆற்றிய உரை தமிழ் மக்களைப் பெரிதும் ஏமாற்றத்துக்கு உள்ளாக்கியிருக்கிறது.

இந்த உரையில் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், தொடர்பான குற்றச்சாட்டுகளிலிருந்து படையினரையும் இலங்கை அரசாங்கத்தையும் தப்பவைக்கும் நோக்கம் அப்பட்டமாகவே வெளிப்பட்டிருக்கிறது

“இலங்கையர் என்ற வகையில் தீர்த்துக்கொள்ளவேண்டிய பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்வோம். சுயாதீனமான நாடு என்றவகையில் எமது உரிமைகளை உறுதிப்படுத்திக்கொண்டு முன்னேறிச் செல்வதற்கு இடமளியுங்கள்” என்ற வகையில் ஜனாதிபதியின்பேச்சு அமைந்திருந்தது.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் இலங்கையில் ஜனநாயகம், மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்கள் மீறப்பட்டிருந்தன என்பதைச் சுட்டிக்காட்டி சர்வதேச தலைமீடுகள் அதிகரிக்கப்பட்டு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன. ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டன.

அப்போது இருந்த சூழல் இப்போது இல்லை. இலங்கையில் தற்போது முன்னேற்றமான மனிதநேயம் மிகுந்த சூழல் நிலவுகிறது. எனவேதான் எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்ள இடமளியுங்கள் என்ற காரணத்தை முன்வைத்து ஜனாதிபதி உரையாற்றியிருக்கிறார்.

ஜனாதிபதி நியூயோர்க் செல்வதற்கு முன்னர் ஐ.நா.பொதுச் சபையில் அவர் நிகழ்த்தப்போகும் உரை தொடர்பாக சில விடயங்களைத் தெரிவித்திருந்தார். அதனடிப்படையில் படையினருக்கும் தமிழ் அரசியல் கைதிகளுக்கும் பொதுமன்னிப்பு அளித்து அவர்களை விடுதலை செய்வதுதான் அவரது யோசனையாக இருந்தது. ஆனால் அவர் ஐ.நா. வில் ஆற்றிய உரை வேறுவிதமாக அமைந்து விட்டது.

2015இல் தேர்தலில் போட்டியிட்டபோது ஜனாதிபதியால் கொடுக்கப்பட்ட முக்கியமான வாக்குறுதியாக அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் இருந்தது. அதைப்பற்றி ஜனாதிபதி தனது உரையில் எதுவும் குறிப்பிடவில்லை. அதுமட்டுமன்றி சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய போர்க்குற்ற விசாரணை நடத்துவதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் அரசு ஒப்புக்கொண்ட விடயம்பற்றி அவர் பேசுவதைத் தவிர்த்திருக்கிறார். தமிழ் அரசியல் கைதிகள் பற்றியோ காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி பற்றியோ அல்லது தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள இராணுவ ஆக்கிரமிப்பு பற்றியோ அவர் பேசவில்லை.

ஆனால், போரில் ஈடுபட்ட படையினரின் அர்ப்பணிப்பைப்பற்றி ஜனாதிபதி புகழ்ந்துள்ளார். “எமது பாதுகாப்பு படையினரால் உலகின் பிரபல பயங்கரவாதமே தோற்கடிக்கப்பட்டுள்ளது. இன்று எமது நாடு பிரிக்கப்படாத ஒன்றிணைந்த பிரதேசமாகக் காணப்படுவதற்கு எமது இராணுவத்தினரால் நிறைவேற்றப்பட்ட அர்ப்பணிப்புடன் கூடிய பணியே காரணம்” எனவும் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட அந்தப் பணியை தான் கௌரவத்துடன் நினைவு கூருவதாகவும் கூறியுள்ளார்.

சர்வதேசம் கூறுவதுபோல் தமிழ் மக்களுக்கு எதிராகப் போர் நடத்தப்படவில்லை எனவும் ஒரு பயங்கரவாத இயக்கத்துக்கு எதிராகவே போர் நடைபெற்றது எனவும் கூறியுள்ளார்.

இந்த உரையின்பின்னர் நியூயோர்க் நகரில் அமெரிக்கா வாழ் இலங்கையர் மத்தியில் உரையாற்றிய ஜனாதிபதி, இறுதி யுத்தம் நடைபெற்ற வேளையில் புலிகள் சென்னையில் இருந்து விமானம்மூலம் கொழும்பு நகரைத் தாக்கி அழிக்கத் திட்டமிட்டிருந்தார்கள். அதனைத் தெரிந்துகொண்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷ, இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோர் தம்மைக் காப்பாற்ற நாட்டைவிட்டு வெளியேறியிருந்தார்கள். போரின் உச்சக்கட்டத்தில் முக்கியமான மூவரும் ஒரே காலகட்டத்தில் நாட்டைவிட்டு வெளியேறியதற்கான காரணத்தையும் ஜனாதிபதி கூறியுள்ளார். அவ்வேளையில் இரண்டு வாரங்கள் தானே பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்ததாகவும் கூறியுள்ளார். இதன்மூலம் இறுதிப்போரைத் தானே வழிநடத்தியதான ஒரு பிம்பத்தை ஏற்படுத்த முயல்கிறாரா, தானே யுத்தத்தின் கதாநாயகன் என்று கூறுகின்றாரா என்று எண்ணத்தோன்றுகிறது. போர்வெற்றியில் தனது பங்களிப்பை வெளிப்படுத்தி சிங்கள மக்கள் மத்தியில் தனது செல்வாக்கை உயர்த்த முயல்கிறார் ஜனாதிபதி என்ற விமர்சனமும் அரசியல் ஆய்வாளர்களால் முன்வைக்கப் படுகிறது.

இனவாத அரசியல் நடத்துவதற்கு ஜனாதிபதி மைத்திரிபாலாவும் முற்படுகிறாரா?

இப்படியே போனால் இனி தமிழ்மக்களை கடவுள்தான் காப்பாற்றவேண்டும் என்று தந்தை செல்வாவின் கூற்றுத்தான் மீண்டும் ஞாபகத்தில் வருகிறது.

○○○

அட்டைப்பட அதிதி



# அழகியல் படைப்புகளின் அலைவரிசை: குப்பிழான் ஐ.சண்முகன்

அறுபதுகளின் நடுப்பகுதியில் இருந்து எழுதத்தொடங்கி இன்றுவரை முதன்மையான தனித்துவமான இடத்தை வகிக்கும் மூத்த எழுத்தாளர்தான் குப்பிழான் ஐ.சண்முகன்.

அழகியலும் சமூகப்பார்வையும் இணைந்து கைகோர்க்கும் பல தனித்துவமான படைப்புகளின் சொந்தக்காரர். கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இயங்கிய கலை இலக்கிய அமைப்புகளின் செயற்பாட்டாளர். சிறுகதை, கவிதை, விமர்சனம், பத்தி என்ற பல்வேறு வடிவங்களில் இயங்குபவர். பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி, தொலைக்காட்சி, இணையம் எனத் தனது ஊடகங்களை விரித்துக்கொண்டவர். நல்லதொரு பேச்சாளர் என்பதையும் சமய, இலக்கிய நிகழ்வுகளில் நிரூபித்து வருபவர். நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கியவர். ஆளுமையும் இலக்கிய ஆர்வமும் மிக்க இளைஞர் அணியொன்றின் உருவாக்கத்தின் பின்புலமாக ஆர்ப்பாட்டமின்றி இயங்கிவருபவர்.

குப்பிழானில் ஐயாத்துரை இரத்தினம்மா தம்பதியினரின் மூத்த மகனாக 1.8.1946 இல் பிறந்தவர்தான் சண்முகலிங்கம் அவர்கள். தனது ஊர்ப்பற்றின் விளைவால் குப்பிழான் ஐ.சண்முகன் என்று எழுதிவருகின்றார். குப்பிழான் விக்னேஸ்வராக் கல்லூரி, புன்னாலைக்கட்டுவன் மெதடிஸ்த ஆங்கிலப் பாடசாலை, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்றவர். 1966 ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகம் சென்று பொருளியல், தமிழ், ஐரோப்பிய வரலாறு ஆகிய பாடங்களைக் கற்றுத் தேறியவர். பல்கலைக்கழகத்தில் கற்கின்ற காலத்திலேயே எழுதுவினைஞராக நியமனம் பெற்றார். 1968 செப்ரெம்பர் முதல் 1984 மார்ச் வரைக்கும் பரீட்சைத்திணைக்களத்திலும், யாழ்ப்பாணம், கல்முனை கல்வித்திணைக்களங்களிலும் பணிபுரிந்தார். மிக மென்மையானவராக இருந்த போதிலும் 1980இல் இடம்பெற்ற பொதுவேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதால் ஒன்றரை வருடகாலம் தொழிலின்றி இருந்தார். எழுத்தாளர்களான சட்டநாதன், ஆனந்தமயில் ஆகியோரும் இவ்வாறு பாதிக்கப்பட்டிருந்தார்கள். தனது பதினான்கு வருட எழுதுவினைஞர் வேலையைத் துறந்து 1984ஆம் ஆண்டு ஆசிரியப்பணிக்கு வந்து சேர்ந்தார். நெல்லியடி மத்திய கல்லூரியில் நியமிக்கப்பட்டு 2006ஆம் ஆண்டு ஓய்வுபெறும்வரை அப்பாடசாலையிலேயே தனது பணியைக் காத்திரமாக வழங்கியவர். 2001 ஆம் ஆண்டில் இருந்து 2003ஆம் ஆண்டு வரை அவரிடம் கற்கும் பேறு எனக்குக் கிடைத்தது. 1975ஆம் ஆண்டு மயில்வாகனம் தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் மகளான புனிதவதி அவர்களைத் தனது வாழ்க்கைத்துணை ஆக்கிக்கொண்டார். இலக்கிய ஈடுபாடும் எழுத்து ஆர்வமும் மிக்க அவரைத் தனது எழுத்துக்களின் முதல் வாசகியாகவும் ஆலோசகராகவும் பெறும் கொடுப்பினைக்குரியவரானார்.



த.அஜந்தகுமார்

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் கற்கின்ற காலத்திலேயே(1965) அக்கல்லூரி இதழிலே 'இலக்கியத் திறனாய்வு' என்ற தனது முதலாவது கட்டுரையை எழுதி இலக்கிய உலகிற்குள் நுழைந்துகொண்டார். 1966ஆம் ஆண்டு ராதா என்ற இதழில் பசி என்ற தனது முதலாவது சிறுகதையை எழுதினார். தொடர்ந்து இன்றுவரை சுதந்திரன், விவேகி, வீரகேசரி, கற்பகம்,

மல்லிகை, மங்கை, அலை, ஏகலைவன், கலைமுகம், திருவுடையாள், ஈழநாடு, நுட்பம், இளம்பிறை, எழில், ஆகவே, தளவாசல், தீபம் ஆகியவற்றில் எழுதியவர், எழுதிவருகின்றார். கற்பகம் சிறுகதைகள் என்ற தொகுதியிலும் கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ சங்கம் வெளியிட்ட உயிர்ப்புகள் தொகுதியிலும் இவரது சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. ஆயினும் சுதந்திரன் சிறுகதைகள், மல்லிகை சிறுகதைகள், ஈழநாடு சிறுகதைகள் ஆகிய தொகுதிகளில் இவரது சிறுகதைகள் ஏதோ ஒரு வகையில் புறக்கணிக்கப்பட்டிருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

*1966 – 1975* ஆண்டு காலப்பகுதியில் இலங்கை வானொலியில் இளைஞர் மன்றம், கலைக்கோலம் ஆகிய நிகழ்ச்சிகளில் தனது படைப்புகள் மூலம் கவனம் பெற்ற வராகவும் இவர் விளங்கியிருந்தார். வ.இராசையா அவர்களால் வானொலியில் அறிமுகப்படுத்தப்பட்ட இவர் தனது விஞ்ஞான ஆசிரியரான அம்பி, கு.குருசாமி, பேராசிரியர்களான க.கைலாசபதி, கா.சிவத்தம்பி ஆகியோருடன் பல நிகழ்ச்சிகளில் இணைந் திருக்கின்றார். வ.இராசையா அவர்கள் இவருடன் நேர்காணல் ஒன்றை நிகழ்த்தியிருக்கின்றார். மேலும் இளம் எழுத்தாளர் என்று இவரை யும் இளம் விமர்சகர் என்று ஸ்ரீபதி அவர்களை யும் பேராசிரியர் சிவத்தம்பி நேர்கண்டு ஒலிபரப்பியதை இன்று நினைவு கூருகின்றார். தொடர்ச்சியாக தினக்குரல், சரிநிகர், மூன்றா வது மனிதன், புதிய தரிசனம் ஆகிய இதழ் களிலும் டாண் தொலைக்காட்சி, யாழ். பண்பலை மற்றும் நூலக நிறுவனத்தின் ஆவணக் காப்பகத்திலும் இவரது விரிவான நேர்காணல் கள் பதிவாகியுள்ளன.

ஈழத்து எழுத்தாளர்களுடனும் தமிழகத்து எழுத்தாளர்களுடனும் இவர் நெருக்கமான தொடர்புகளைப் பேணி வந்திருக்கின்றார். அசோகமித்திரன், தஞ்சைப் பிரகாஸ் போன்ற வர்கள் எழுதிய கடிதத்தை இன்றும் பாதுகாத்து வருகின்றார்.

> 'கோடுகளும் கோலங்களும் நானும் படித் தேன். என் குடும்பத்தாரும் படித்தார்கள். இன்ப வேதனைகளின் இழையொன்று எல்லாக்கதைகளிலும் தென்படுகின்றது. …தங்களுக்கு இயல்பாகவே சிறுகதை உருவம் அழகாக அமைந்துவிடுகின்றது. தங்களுடைய நடை, கதைகளின் தொடக்க மும் விரிவடைதலும், தாங்கள் கதை சொல்லத் தேர்ந்தெடுக்கும் விஷயங்கள் இவையெல்லாம் குறையற்றே காணப் படுகின்றன. (ஜூன் *27, 1977*)

என்று அசோகமித்திரன் இவருக்கு எழுதிய விரிவான கடிதத்தில் எழுதியுள்ளார். பாலம் இதழின் ஆசிரியராக விளங்கிய தஞ்சைப் பிரகாஸ், தான் நடாத்திய பாலம் இதழ், ஈழத்து இலக்கியம், சண்முகனின் கோடுகளும் கோலங்களும் தொகுதி பற்றியும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். யோகேஸ்வரி சிவப்பிகாசம் அ.யேசுராசா, நட்சத்திரன் செவ்விந்தியன், இமையவன், ரஞ்சகுமார் என்று ஈழத்தின் முக்கியமான பல எழுத்தாளர்களுடனான கடிதங்களைப் பாதுகாத்து வருகின்றார். அவற்றை ஒரு நூலாக்கும் திட்டமும் உள்ளது. உண்மையில் அது நூலாக வெளிவந்தால் ஒரு காலம் பற்றிய ஆவணமாகவும் சிந்திப்பாகவும் அமையும்.

இவருடைய படைப்புகள் கோடுகளும் கோலங்களும் (சிறுகதை *-1976*) சாதாரணங்களும் அசாதாரணங்களும் (சிறுகதை *– 1982*), அறிமுகங்கள் விமர்சனங்கள் குறிப்புகள் (பத்தி எழுத்துகள் *- 2003*), உதிரிகளும்… (சிறுகதை *– 2006*), ஒரு பாதையின் கதை (சிறுகதை *– 2012*), பிரபஞ்ச சுருதி(கவிதை *-2014*) என்கின்ற ஆறு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. கோடுகளும் கோலங்களும் தொகுதிக்கு சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்த போதிலும் அக்காலத்தில் எழுந்த கோரிக்கையை ஏற்று பரிசை நிராகரித்தவர். விருதுகளுக்கும் பரிசில்களுக்கும் மண்டியிடாத எழுத்தாளர் என்பதைச் செயல்களால் அமைதியாக நிரூபித்தவர். இன்றைய இளம் எழுத்தாளர்கள் இவரிடம் கற்க வேண்டிய பாலபாடங்களில் இதுவும் ஒன்று.

கிராமம், நகரம் என்ற இரு முரண்களிலும் வாழக்கிடைத்த சண்முகன் வாழ்வின் கொண்டாட்டத்தையும் வலியையும் தன் படைப்புகளால் மனதில் பரவவிடுவதில் வல்லவர். அழகான பேச்சுமொழிப்பதிவும் இவரின் பலமாக உள்ளது. கடிதமாய் பேச்சாய் உரையாடலாய், ஒரு கவிதையின் தெறிப்பாய் இவரின் சிறுகதைகள் தமது களங்களை விரித்துக்கொள்கின்றன. இயற்கை ஈடுபாடும், காட்சி விவரிப்பும், பெண்ணின் அழகு மீதான ஈர்ப்பும், வாழ்வின் மீதான வசியமும் இவரை ஒரு குழந்தைபோல கதைவெளியெங்கும் ஆசையொடு நடத்திச் செல்வதை இரசிக்க முடியும். கோபமும்,

தவிப்பும், வலியும், இரசிப்பும், புரட்சியும் மௌனமாயும் இறுக்கமாயும் மறைமுகமாயும் வெளிப்படையாகவும் தேவைக்கேற்றவாறு கலந்து பயணிக்கின்றன. மொழியின் கவித்துவம், அதைப் பின்னிச் செல்லும் இலாவகம், கதையின் முடிவில் தெறிக்கும் புதுக்கதைத் தொடக்கம் இவரின் பலங்கள் என்று துணிந்து சொல்லலாம். இவரின் நெஞ்சுக்கு நெருக்கமான எழுத்தாளர்களில் ஒருவராக விளங்கும் இராகவன் இவரது சிறுகதைகளைப் பற்றி கூறுவது முக்கியமானது.

> 'வாய்ப்பாட்டு ரீதியிலான (Formula) கதைகளை சண்முகனிடம் இருந்து எதிர் பார்க்க முடியாது. மாறாக சண்முகனின் கதைகளில் அலாதியான புனைகதைப் பெரு வெளியினை அவதானிக்கக் கூடியதாக இருப் பதும், ஆழ்ந்த வாசிப்பில் அப்பெரு வெளிக்குள் பிரவேசித்து அலைவதனூ டாகப் பரவசமெய்த முடிகின்றது என்பதும் முக்கியமானது'

இன்றைய சிறுகதைகளில் துருத்திக்கொண்டு கட்டுரைத்தனமாக நிற்கும் குறியீட்டுப் போக்கு எதுவுமற்று சாதாரண சிறுகதைத் தோற்றத்திற்குள் ஆழ்ந்த கதைக்கிறுக்கத்தை, பன்முக வாசிப்பிற்குரிய தொனியை இவரது சிறுகதைகள் பல பொதிந்துள்ளன. காலத்தைத் தாண்டிய வாசிப்பை அவை தூண்டி நிற்கின்றன. நாற்பதைத் தாண்டும் சிறுகதைகளையே இன்று வரை எழுதியுள்ள போதிலும் கலைத்துவமிக்க ஈழத்துச் சிறுகதைகளில் இவருக்கு ஒரு இடம் இருக்கவே செய்கின்றது. ஒரு றெயில் பயணம், அரியரத்தினக்கா முதலிய சிறுகதைகள் இவருக்கு மிகப்பிடித்த சிறுகதைகள் என்று கூறுகின்றார். செ.யோகநாதன் அவர்கள் இந்த நூற்றாண்டின் ஈழத்துச் சிறுகதைகள் என்று தொகுத்த ஒரு கூடைக்கொழுந்து, வெள்ளிப்பாதசரம் ஆகிய தொகுதிகளில் இவரது சிறுகதைகள் புறக்கணிக்கப்பட்டமை கவலைக்குரியதாகும். எனினும் புறக்கணிப்புகள் நடுவே தனது அமைதியான இலக்கிய ஊழியத்தையே இவர் நேசிக்கின்றார் என்பதும் மிக ஆறுதலான விடயமாகும்.

இவர் பற்றிய சித்திரத்தை உருவாக்கும் வல்லபம் மிக்க விமர்சனங்கள் எழவில்லை என்பதும் ஒரு குறைபாடாக உள்ளது. எனினும் தெளிவத்தை ஜோசப், கே.எஸ்.சிவகுமாரன், மு.புஸ்பராஜன், முல்லைமணி, எம்.கே.முருகா னந்தன், இராகவன், அருண்மொழி வர்மன், அனோஜன் பாலகிருஷ்ணன் முதலியோர் இவரது சிறுகதைகளைப் பற்றி எழுதியுள்ளனர். பல்கலைக்கழக இளமாணி முதுமாணி ஆய்வுத் தேவைகளுக்காக நான்கு மாணவர்கள் இவரது சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்திருக்கின்றார்கள். சுனிதா இராஜேஸ்கண்ணன், செல்வமோகன் ஆகியோரைத் தனது ஞாபகத்தில் இருந்து பதிவு செய்துள்ளார். இவரது கோடுகளும் கோலங்களும் தொகுதியின் அட்டைவடிவமைப்பும் கவனத்திற்குரியது. முகப்பு ஓவியத்தை வரைந்தவர் ரமணி. இதுவே நவீன ஓவியத்துடன் வெளிவந்த முதற்தொகுதி என்று ரமணி அவர்கள் கூறியதாக நினைவு கூறுகின்றார்.

சிறுகதை மட்டுமல்ல குறுநாவல் முயற்சியிலும் இவர் ஈடுபட்டிருக்கின்றார். மத்தாப்பு, சதுரங்கம் போன்ற நாவல் கூட்டுமுயற்சி போலத் தொடங்கிய செவ்வானம் என்ற குறுநாவலை இவரே இறுதியில் எழுதி முடித்தார். இந்தக் கூட்டுமுயற்சியில் சிலோன் விஜேந்திரன், பூ.செல்லத்துரை, மகாதேவன், மாவை நித்தியானந்தன் ஆகியோர் ஈடுபடுவதாக இருந்தது என்று தனது ஞாபகத்தில் இருந்து குறிப்பிடுகின்றார். முதல் வருடம் தானே ஆசிரியராக இருந்த 'இலக்கிய இன்பம்' என்ற கையெழுத்துச் சஞ்சிகையில் இந்தக் குறுநாவல் தொடர்ச்சியாக வெளிவந்தது. இன்னொரு கையெழுத்துச் சஞ்சிகைக்காக கொண்டு செல்லப்பட்ட குறுநாவல் அப்படியே தொலைந்து போய்விட்டதை இன்றும் கவலையோடு குறிப்பிடுகின்றார்.

விமர்சனத்துறையிலும் இவருடைய பங்களிப்பு முக்கியமானது. அறிமுகங்கள், விமர்சனங்கள், குறிப்புகள் என்ற நூல் இதற்குச் சாட்சியாக விளங்குகின்றது. ஈழத்தின் மிக முக்கியமான இதழாக விளங்கிய 'அலை' இதழின் முதல் பன்னிரண்டு இதழ்களுக்கும் ஆசிரியர் குழுவில் ஒருவராக இவர் செயற்பட்டு இருக்கின்றார். திரைப்படம், ஓவியம், இசை போன்ற பல்வேறு கலைகளிலும் ஈடுபாடு கொண்ட வராக இலயித்திருக்கின்றார். கொழும்பு இலக்கிய நண்பர்கள் கழகத்தின் ஒரு செயற் பாட்டாளராய் இருந்திருக்கின்றார். திரைப் படப் பிரியராய் இருந்ததால் கொழும்பு லயனெல் வென்ற் அங்கத்தவராக இருந்து உலகின் தலைசிறந்த திரைப்படங்களைப் பார்த்து இரசித்திருக்கின்றார். நல்ல புத்தகங்களைத் தேடித் தேடிப் படிக்கும் சேகரிக்கும் தேர்ந்த வாசகராக விளங்கியிருந்திருக்கின்றார். இந்த

# அரச இலக்கிய விருது வழங்கல் 2018



| | |
|---|---|
| **சாகித்தியரத்னா** : | மு.பொன்னம்பலம். (மு.பொ) |
| **சுய நாவல் இலக்கியம்** : | ஒரு கிராமத்து அத்தியாயம் - எஸ். ஜோன்ராஜன். |
| **சுய கவிதை இலக்கியம்** : | மண்கோழி - சோலைக்கிளி. |
| **சுய சிறுகதை இலக்கியம்** : | உயிருதிர் காலத்தின் இசை -பதுளை சேனாதிராசா. |
| **சுய நானாவித இலக்கியம்** : | 1915 கண்டிக் கலவரம் - என்.சரவணன். |
| **சுய புலமைத்துவ மற்றும் ஆய்வுசார் படைப்பு** : | இந்தியஅறிவாராய்ச்சியியல் - பேராசிரியர் ஞா. ஞானக்குமாரன். |
| **சுய சிறுவர் இலக்கியம்** : | வில்லூரானின் சிறுவர் பாடல்கள் -வில்லூரான் (க.முரளிதரன்) |
| **சுய இளையோர் இலக்கியம்** : | பாலர் விருத்தி பாடற் பனுவல் - ச.இ.ஐங்கரலிங்கம். |
| **சுய பாடலாக்கம்** : | சிறகு முளைத்த சிந்துகள் -அக்கரையூர் அப்துல் குத்தூஸ். |
| **மொழிபெயர்ப்பு** : | எனது தேசத்தை மீளப்பெறுகிறேன்-எம்.ரிஷான் ஷெரிப் |
| **மொழிபெயர்ப்பு நானாவித. இலக்கியம்** : | சைமன் காசிச் செட்டியின் “தமிழ் புளூறாக் ரூ தமிழ் விபரப்பட்டியல் -சா.திருவேணிசங்கமம். (ஆங்கிலம்) |
| **மொழிபெயர்ப்பு நாவல் இலக்கியம்** : | உச்சிமலை முகடுகள்-திக்குவல்லை கமால்.(மூலம்: உஷ்கந்துபாய-கமல் பெரேரா- சிங்களம்) |
| **மொழிபெயர்ப்பு கவிதை** : | தென்னாசியக் கவிதைகள் -சோ.பத்மநாதன் (சோ.ப) SAARC POETRY (ஆங்கிலம்) |
| **நாடக இலக்கியம்** : | மானிடப்புயல்- ரா.தனஞ்செயன். |

**விருது பெற்றவர்களை ஞானம் வாழ்த்தி மகிழ்கிறது**




# வேல் அமுதன் திருமண சேவை

- விண்ணப்பதாரியின் கோவையைப் பார்த்த மாத்திரத்தே சம்பந்தப்படுபவரை நீங்கள் விரும்புகிறீர்களா? அது பொருந்தக் கூடியதுதானா என்பனவற்றை முடிவு செய்யக்கூடிய இலகு வழிமுறை.
- சுமார் கால்நூற்றாண்டு கால தொழில் அனுபவம்.
- செவ்வாய், வியாழன் தினங்கள் மாத்திரம் தவிர்ந்த அனைத்து நாட்களில் காலை 11.00 மணிக்கோ, திங்கள், புதன், வெள்ளி மாலை 4.30 மணிக்கோ முன்னேற்பாட்டு ஒழுங்குமுறையில் வேல்அமுதன் திருமண ஆலோசனையகத்தில் சந்திப்பு.
- தொலைபேசி: 011 2360488, 076 8520108
- முகவரி: 8-3-3மெற்றோ மாடிமனை (33ஆம் ஒழுங்கை வழி) 55ஆம் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு 06.



நிலையான – திருப்திகரமான திருமணத்தின் அத்திவாரம் "இலக்கியச் செல்வர்" வேல்அமுதன் திருமண ஆலோசனையக சேவை!

அடிப்படைகளிலேயே படைப்பாளியாகவும் இருந்து கொண்டு சவாலான விமர்சனத் துறையிலும் தனது பெயரினை நிலைநாட்ட முயற்சி செய்துள்ளார். நாசூக்கான கேலி இவரது எழுத்துகளில் கசிவதை அவதானிக்கலாம். இது அவரது மென்மையின் இயல்பாயும் எழுத்து வன்மையின் இயல்பாயும் அமைந்துள்ளது.

இவர் கவியரங்குகளிலும் வானொலியிலும் பத்திரிகைகளிலும் இதழ்களிலும் கவிதைகளை வெளிப்படுத்தியிருக்கின்றார். மரபார்ந்த சந்தம் இயைந்த அழகான கவிதைகளுக்கு இவர் சொந்தக்காரராக விளங்குகின்றார். முல்லைமணியுடன் 1984 இல் செய்த கவிய ரங்கம் ஒன்றை இன்றும் சிலாகித்துக் கூறுகின்றார். 1965 – 1975 காலப்பகுதியில் எழுதப்பட்ட கவிதை கள். இவர் கொஞ்சமும் எதிர்பாராத வேளையில் 2014 இல் சித்தம் அழகியார் வெளியீடாக 'பிரபஞ்ச சுருதி' என்ற கவிதைத்தொகுதி வெளிவந்தது. கூத்து போன்ற தத்துவம் பொதிந்த அரிய கவிதைகளும் மனஎழுச்சிக் கவிதைகளும் இத்தொகுதி முழுவதும் நிறைந்து கிடக்கின்றன. மரபும் நவீனமும் சேர்ந்து பின்னப்பட்ட படைப்பாளி என்பதற்கு இக்கவிதைத்தொகுதி சான்றாக அமைகின்றது.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பல இலக்கியக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கு பவராய், மதிப்புரை செய்பவராய், வெளியீட் டுரை நிகழ்த்துபவராய் விளங்குகின்றார். சந்நிதியான் ஆச்சிரமத்தில் இருபது வருடங் களாக வருடந்தோறும் 'குருட்டு ஆத்மிகம் இல்லாத' இலக்கியப் பின்னணியுடனாக சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்தி வருகின் றார். இலக்கியக் கருத்தரங்குகளில் ஆய்வுக் கட்டுரைகளையும் சமர்ப்பித்து வருகின்றார்.

தான் ஆசிரியராகப் பணி செய்ததை நினைத்து இன்றும் மகிழ்வடைகின்றார். உயிருள்ள மனிதர்களுடன் பிள்ளைகளுடன் பழகும் வாய்ப்பும் அவர்களை முன்னேற்றும் சந்தர்ப்பமும் வரம் என்றே நம்பிச் செயற்பட்டவர். தன்னிடம் கற்ற மாணவர்களின் விசாரிப்புகளில் இன்றும் குழந்தையாகிவிடுகின்றார். தனது சிந்தனைகளை உயிர்ப்பிக்கும் மையங்களாக மாணவர்களைக் கருதினார். பொருளியல், தமிழ் ஆகிய பாடங்களை உயர்தர வகுப்புக்கும் சைவசமயத்தை இடைநிலை வகுப்புகளுக்கும் கற்பித்தவர். அவரிடம் கற்கக் கிடைத்த வாய்ப்பே என்னையும் இலக்கியக்காரன் ஆக்கியது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவிக்கின்றேன். அவருடைய முதல் வகுப்பு ரஞ்சகுமாரின் கோசலை கதையுடன்தான் ஆரம்பமாகியது. கதையைப் பற்றி விமர்சனமும் எழுதிவரச் செய்தார். மாணவர்களிற்குள் வாசகனையும் விமர்சகனையும் படைப்பாளியையும் உயிர்ப் பிக்கும் ஆளுமையான ஆசிரியராக இவர் விளங் கினார். படிக்கின்ற காலத்திலே இராஜேஸ் குமாரின் நாவல்களைப் பற்றி கேட்பேன். அமைதியாகச் சிரித்து நான் அவரது நாவல் களைப் படிப்பதில்லை என்பார். எதுகை மோனை களுடன் துள்ளி விளையாடும் எனது கட்டுரை களை வகுப்பில் வாசித்துக்காட்டி ஊக்கு விப்பார். ஒருவனுக்குள் இருக்கும் ஆர்வத்தை உடனே கருக்கி விடாது சரியான பாதையில் வழிநடத்தும் ஆசிரியத்துவத்தின் உயர்ந்த இலட்சியம் இவரிடம் சுவறி இருந்தது.

இவரின் படைப்பாற்றலைக் கௌரவித்து கலாபூஷணம், வடக்கு மாகாண ஆளுநர் விருது, வடமராட்சி வலயக் கல்வித்திணைக்களத்தின் கலைவாரிதி விருது, கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் கலைஞான வாரிதி விருது, குப்பிழான் விக்னேஸ்வரா மன்றத்தினரின் செம்மண் சுடர், பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கத்தின் சங்கச் சான்றோன் முதலிய விருதுகள் வழங்கப்பட்டுள்ளமை கவனத்திற்குரியது.


விரைவில் தனது புதிய சிறுகதைத் தொகுதியொன்றை வெளியிடும் எண்ணமும் இவரிடம் உண்டு. தொடர்ந்து வாசிக்கவேண்டும், நல்ல திரைப்படங்களைப் பார்க்கவேண்டும், இலக்கியக் கூட்டங்களுக்கு செல்ல வேண்டும், மனதுக்கினிய நண்பர்களுடன் மெய்மறந்து உரையாடவேண்டும் என்ற எண்ணங்களுடன் மனதால் இளமை பெற்றுள்ளார்.

ஈழத்துப் படைப்பாளிகளின் பெயர்களை வரிசைப்படுத்தும் ஆய்வுமரபும், மேலெழுந்த வாரியான விமர்சனப்போக்கும் தொடர்கதையாகி வருகின்றன. ஆளுமைகளின் படைப்புகள் குறித்த தனியான விமர்சன அரங்குகள் நடாத்தப்படும்போது தான் படைப்பின் கூர்மைகள் வெளிப்படுத்தப்படும் வாய்ப்பு இருக்கின்றது. குப்பிழான் ஐ.சண்முகன் என்ற ஆளுமையின் படைப்புகள் குறித்த ஆழமான ஆய்வுகள் இடம்பெறுவதே நாம் அவருக்கு வழங்கும் கௌரவமாகும். அவரது இலக்கியப் பணி தொடரவும் வாழ்வு இன்னும் சிறக்கவும் வாழ்த்துவோமாக.

❍❍❍

சிறுகதை

# "கடவுளைக் காண்கிறார்......!"



**சூசை எட்வேட்**

அது ஒரு அழகான வீடுவளவு. இல்முன் பூமரங்கள் அழகாக பூத்துச்சிரிக்கின்றன. அழகு தேவதைகள் நின்று கண்சிமிட்டி சிரிப்பைச் சிந்தி களிப்பை ஊட்டி வரவேற்பது போலிருக்கும்! வீட்டின் சுற்றுச் சூழல் எங்கணும் பயன்தரும் மரங்கள் பழமரங்கள் கொலுவாக நின்று காற்றில் அசைந்தாடி வரவேற்புக் கூறும், வாரீர் பயனைப் பெறுவீர் என்பதாக இருக்கும்! பூமிப்பந்தின் விந்தை காட்டும் இடம் போலிருக்கும்!...... வீடு, பெரிதாக அலங்கார ஆடம்பர ஆலாபனைகள் இல்லை என்றாலும், அடக்கமான எல்லா வசதிகளுடனும் கூடிய இல்லம் என்று தெரிகிறது! வீட்டின் உள்ளே ஆடம்பரத்தைக் காட்டும் பொருட்கள் தளபாடங்கள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. அத்தியாவசிய தேவைக்கான சாமான் சக்கட்டுகள் மட்டுமே உண்டு! பெரிதாக வீட்டைக் கட்டினாலும் ஆடம்பரப் பொருட்களால் தேவைக்கதிகமான தளபாடங்களால் வீட்டை நிறைத்து சுதந்திரமாக நடமாட முடியாது இடைஞ்சல்படும் நிலைமை இங்கில்லை!

வீட்டின் உரிமையாளர் கிருபைராசா சாய்மனையில் படுத்திருக்கிறார். சற்று வயதானாலும் கம்பீரம் குறையவில்லை! சும்மா படுத்துக்கிடந்து வாழ்நாளை வீணாக்குவது அவர் வாழ்க்கையில் என்றும் இல்லை! நேரமே - காலமே வாழ்க்கை என்பார். அதைப் பொன்போல் பேணுவார்! இப்போது சாய்மனையில் சாய்ந்தபடி கிடந்து பத்திரிகைகளை புத்தகங்களை வாசிப்பார், குறிப்புகள் எடுப்பார், ஏதோவெல்லாம் எழுதித்தள்ளுவார்! இதனால் ஊரில் ஏன் நாட்டில் பிரபலமாகி வருகிறார்! இதனால் பெருமைத்திமிர் பிடிக்காமல் மிக்க எளிமையாகத்தான் தன்னைக் காட்டிக் கொள்வார்!

தொட்டில் பிள்ளையைப் பராமரிப்பது போல் அன்பு மனைவி பரிமள புஸ்ப்பம் இவரைக் கவனித்துக் கொள்வார்! எந்த நேரம் என்ன வேண்டும், என்ன பக்குவத்தில் வேண்டும் என்று எல்லாம் அந்த அம்மாளுக்குத் தெரியும். தன் மனைவியைப் பற்றி சொல்வார் இப்படி: "நான் அந்தக் காலத்தில மேனி மினிக்காத் திரிஞ்ச எவளெவளோ பின்னால திரிஞ்சன்! அவள்தான் எனக்குச் சொர்க்கத்த காட்டுவாள் எண்டு நினைச்சிருந்தன்! ஆனா குறுக்கால வந்த ஒருத்திய கட்ட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு தாலியக் கட்டினன். ஆனா அவள்தான் என்னை சொர்க்கத்தில் வைத்து தாலாட்டுகிறாள், ஒரு குறையும் இல்லாமல் பார்க்கிறாள்! இங்கேதான் இறைவனின் மாட்சி தெரிகிறது!!"



ஐம்பது வருடமாக சம்சார வாழ்க்கை வாழ்கிறார். இதில் என்ன விசேடம் என்றால் இவருக்கோ, மனைவிக்கோ, பிள்ளைகளுக்கோ வருத்தம் துன்பம் என்று ஒன்றும் ஏற்பட்டதில்லை!....... 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்று சொல்வார்களல்லவா? அப்படிப் பார்த்தால் இந்த ஊரில் நான்தான் பெரிய பணக்காரன்!' என்பார். இங்கேயும் 'இறைவன் என்னோடு இருப்பதைத்தான் சூசமாக காட்டுகிறது" என்பார்!

தெருப்படலை திறப்பது யாரோ வருவது இவர் செவிப்புலனால் தெரிகிறது. இந்த நேரம் யார் வருவார் என்றும் இவர் உள்ளுணர்வுக்குத் தெரியும்! அவர்

எதிர்பார்ப்புப் போல சாந்தி வந்து வாயில் முன் நின்றாள். அவள் வந்ததும் ஏன் வந்தாள் என்று வீட்டில் உள்ள இருவருக்கும் தெரியும். "அன்ரி, இண்டைக்கு சந்தையில என்ன சாமானுகள் வாங்க வேணும்? சொல்லுங்கோ..... அவள் வருவது தெரிந்து பரிமளம் ஏற்கனவே எழுதி வைத்திருந்த துண்டையும் காசையும் நீட்டினாள். அவள் வேண்டிக் கொண்டு போய்விட்டாள். தன் வீட்டுக்கு சந்தை கடைதெரு சாமான்கள் வேண்டப் போகும் போது இவர்கள் வீட்டுக்கும் வந்து இந்த உதவியைச் செய்வாள். அரை மணி நேரம் கழிந்திருக்கும், மீண்டும் 'அன்ரி' என்று கூப்பிட்டுக்கொண்டு அவர்களுக்காக வேண்டிய சாமான் சக்கட்டுக்களையும் மிச்சக்காசையும் கொடுத்து விட்டாள்............. தானே தேங்காயை எடுத்து உடைத்து ஒரு பாதியைத் துருவத் தொடங்கினாள். பிறகு மரக்கறிகளை வெட்டி கீரையை அரிந்து வெங்காயம் மிளகாயை உரித்து நறுக்குவதில் ஈடுபட்டு மளமளவென்று செய்து முடித்தாள்! இந்த வேலைகள் நடந்து கொண்டிருக்கும் போது இருவருக்கும் வயது வேறுபாடு இன்றி சிரிப்பும் கதையுமாக இருக்கும். அக்கம் பக்கம் ஊர் புதினம் ரீ.வி நாடகம் முக்கிய இடம் பெறும். சாந்தி தன் சாமான் பையை தூக்கிக் கொண்டு புறப்படுகையில் பரிமளம் ஒரு பொதிப்பையை அவளிடம் நீட்டினாள். அதில் அன்றைய சமையலுக்கான அரிசி தேங்காய் மரக்கறி என்று இருந்தது. அதை வாங்கும் போது அவள் பார்த்த பார்வை கடவுளின் கருணையை நேரில் பார்ப்பது போலிருந்தது!... இந்த சாந்தி தூரத்து உறவு தான் இவர்களுக்கு, ஆனால் தூரத்தில் இருப்பவள் இல்லை. அயலில்தான் இருக்கிறாள். இவள் வாழ்வு நிலை றொம்பப் பரிதாபம்! மூன்று பிள்ளைகளாய் இருக்கும் வரை நல்ல மாதிரி உழைத்து குடும்பம் நடத்தி வந்த கணவனுக்கு மேலும் முன்னேற வேண்டும் என்ற ஆசை வந்ததோ தெரியவில்லை, சவூதி போனார். அதன் பிறகு சில காலம் தொலை பேசியில் பேசியிருக்கிறார். கொஞ்சம் காசும் அனுப்பி வந்திருக்கிறார். ஈடுவைச்ச வீடு மீண்ட பின்னர் அவர் தொடர்பு கொஞ்சம் கொஞ்சமாக நின்று விட்டது!.... போகப் போக அவரைப்பற்றி பல கதைகள் பல தகவல்கள் வந்து கொண்டிருந்தன. குடிப்பதாகவும் போதைவஸ்துப் பாவனை என்றும், ஆரோ ஒருத்தியை வைத்திருக்கிறான் என்றும்.... இப்படியே பல செய்திகள் காதுக்கு எட்டிய படி இருந்தன! இப்படி நிலை வந்ததும் சாந்தி கலங்கி தளர்ந்து தான் போனாள். தனித்தவளாய் இருந்திருந்தால் வாழும் ஆசையே அற்று கெட்டு குட்டிச்சுவராகியிருப்பாள்! ஆனால் மூன்று பிள்ளைகள், அவர்களை நல்ல படியாக எப்பாடுபட்டும் வாழவைக்க வேண்டும். என்ற வெறி உந்தித் தள்ளியது! கடையப்ப வியாபாரம் தொடங்கினாள். கைவிடப்பட்ட அபலைகளுக்கு கைகொடுக்கும் 'உத்தியோகம்' இதுவாகத்தானே இருந்து வருகிறது நம் நாட்டில்!.... ஆரம்பமுதலீடு கிருபைராசாவின் திருக்கரங்களால் கொடுக்கப்பட்டதுதான்! ஆரம்பத்தில் அவ்வளவாக வியாபாரம் நடக்கவில்லை. மிஞ்சியதை இவரே வாங்கிக் கொள்ளும் நிலை இருந்தது! இப்போது அப்படி இல்லை. அப்பம், பிட்டு, தோசை, இடியப்பம் என்று தேடிவருவார்கள். சீவியப்பாடு அவ்வளவு தளப்படி இல்லாமல் ஏதோ போய்க்கொண்டிருக்கிறது!

இப்படி இருக்கையில் அவள் வாழ்க்கையில் அற்புதமும் நிகழ்ந்தது: மூத்த இரு ஆண் பிள்ளைகளும் அடுத்தடுத்து ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசிலில் தேறி உள்ளார்கள்! சாந்தி மிக நெருங்கிய முக்கியமான உறவினர் இருக்க அவர்களைக் கடந்து கிருபைராசா வீட்டுக்கே முதலில் வந்தாள். இரண்டு பையன்களும் இத் தம்பதிகள் காலில் விழ்ந்து வணங்கினர்! 'அடடா பொடியன்களே, கடவுள மட்டும் தான் வீழ்ந்து வணங்க வேணும். மனுசர் எந்தப் பெரியவனானாலும் பாவிகள்தான்!' 'எங்களுக்கு கடவுள் உங்கள் மூலமாகத்தான் காட்சியளிக்கிறார்' என்று நினைத்துக் கொண்டாள். சொல்ல வில்லை!..... அவர் சிரித்துக் கொண்டே மேலும் கூறினார்: 'நான் இப்ப பல பேர் பாராட்டும் படியா எத்தினையோ விருதுகள் பரிசுகள் வாங்கிக் கொண்டுதான் இருக்கிறன். ஆனா என்ர காலத்தில ஐந்தாம் ஆண்டு படிக்கக்குள்ள இந்தச் சோதினையில 'பெயிலா'கிற்றன்! உன்ர ரெண்டு பெடியன்களும் வலு லேசா 'பாசா' கிற்றாங்கள்! கடவுள் ஒரு மின் வெளிச்சத்தக் காட்டியிருக்கிறார்! பற்றிப்பிடிச்சி நல்லா வாங்கோ! எல்லாக் கதவும் அடைச்சாலும் யன்னலையாவது திறந்து விட்டிருக்கிறார் கடவுள்!..... என்று சொன்னவர் 'பிள்ளைகள நல்லா படிப்பி பிள்ள, ஆன உதவி நான் செய்வன்'! என்று சொன்னவாறு மாதா மாதம்

ஒரு தொகையை நிவாரணமாகக் கொடுத்து வருகிறார்!

மனைவி தந்த தோடம்பழ ரசத்தை பருகிவிட்டு கிருபைராசா தீவிரமாக எழுதிக் கொண்டிருந்தார். அவர் எழுதிய கட்டுரை ஆன்மீகம் சம்பந்தமானது!.... 'கடவுளின் ஆட்சி பூவுலகில் நடந்து கொண்டுதான் இருக்கிறது! பாவமோ புண்ணியமோ அதற்கேற்ற வாழ்க்கை மோட்சமாய் நரகமாய் இவ்வுலக வாழ்வில் கிடைத்தே வருகிறது! மனம் போல வாழ்வை கண்கூடாகக் காணக்கூடியதாகவே இருக்கிறது! இறந்த பின் மறுவாழ்வில் சொர்க்கம் நரகம் என்பதில் நம்பிக்கை கொள்ளத் தேவையில்லை என்பதாகவே அக்கட்டுரையின் சாராம்சம் அமைந்து சென்று கொண்டிருந்தது.

தெருவாயில் சத்தம் மெள்ளக் கேட்டது. நடந்து வரும் காலடிச் சத்தமும் அப்படித்தான் இருந்தது. யாராக இருக்கும்? யாரோ உதவி கேட்டு வருபவனாகத்தான் இருக்கும்!,,..... சற்று நேரத்தில், 'மச்சான் எப்பிடிடா சுகமா இருக்கிறியாடா?' என்று கேட்டுக்கொண்டே தெய்வேந்திரம் முன்னே வந்து நின்றார். கிருபைராசா சைகைமூலம் அவரை அமரச் செய்தார்.... தெய்வேந்திரம் இவரின் சொந்த மைத்துனன்தான். இப்போது அவர் உப்புவெளியிலும் இவர் செல்வ நாயகபுரத்திலும் கொஞ்சத்தூர இடை வெளியில் வாழ்ந்து வந்தாலும், முன்னர் திருகோணமலை நகரப் பகுதியில் ஒரே வளவில் வாழ்ந்து மகிழ்ந்து வந்தவர்கள். சிறு பராயத்தில் இளமைக்காலத்தில் பாரம்பரிய விளையாட்டுகளை எல்லாம் விளையாடி கொண்டாடியவர்கள். குண்டு விளையாட்டில் எத்தனை ரகம், பட்டம் விடுவதில் எத்தனை விதம், ஓடியாடிவிளையாட்டென்ன, கிட்டி விளையாட்டென்ன எல்லாம் விளையாடி களித்தவர்கள்! இன்று அவைகளை நினைத்தால் இன்று எவ்வளவைத்தான் அனுபவித்தாலும் அந்தக் காலம் போல் வருமா என்றே தோன்றும்!........ கால ஓட்டம் பிரச்சினைகளின் தாக்கம் ஒன்றாய் ஒற்றுமையாய் மகிழ்ந்திருந்தவர்களெல்லாம் எங்கெங்கோ திசை கெட்டு அலைக்கழிய வைத்திட்டது!...... காலம் கடந்து முதுமை நடைபோட ஆரம்பித்த பின்னர் தான் ஒரே ஊரில் கிட்டவாக இல்லாவிட்டாலும் உறவாடும் வாய்ப்பு கிட்டியிருக்கிறது!

கிருபைராசா தெய்வேந்திரத்தை புன்னகையினூடே கேட்டார் இப்படி: 'என்ன மச்சான் வரவர கறுத்து மெலிஞ்சி தேவாங்கு போல இருக்கிறாய்! ஏன் இப்படி ஆனாய்! என்ர வயது தானே உனக்கு, ஏன் இப்படி ஆனாய் இப்ப என்ன பிரச்சனை உனக்கு சொல்லு... இளமைக்கால பழக்கம் போடா வாடா மச்சான் என்ற கதை பேச்சு இன்னும் போகவில்லை, ஒட்டிக்கொண்டேதான் இருக்கிறது.

தெய்வேந்திரம் ஏன் வந்தார் என்று கிருபைராசாவின் உள்ளுணர்வுக்கு விளங்கும். அவர் கஸ்ரம் தாங்காமல் உதவி கேட்டுத்தான் வருபவர்!

'மச்சான் நாலு மாதமா கரண்ட்காசு கட்ட இல்ல எண்டு கரண்ட் வயர வெட்டிப்போட்டுப் போயிற்றாங்கள்! மூத்த மகன்ர பொஞ்சாதி இப்பதான் மூண்டாவது பிள்ளையை பெத்து இன்னும் உடம்பு தேறாமல் கிடக்கிறாள்! மூன்று பிள்ளைகளும் தாயும் வெளிச்சமில்லாமல் எப்படி அவலப்படுங்கள்! மகனும் தன்னால ஏலுமானதை உழைக்கிறான்தான். ஆனா இப்ப திடீரென்று ஆறாயிரம் ரூபாவ கட்டெண்டால் அவன் எங்க போவான்! அதுதான் உன்னட்ட வந்தநான் மச்சான். ஆபத்துக்கு நீ தானே உதவி வந்தனீ. இந்த உதவியையும் செய்மச்சான்! இனி உதவி எண்டு நான் உன்னட்ட கேக்கமாட்டன்!' என்று அழுவாரைப்போல கேட்டான்.

ஆறு மாதத்துக்கு முன்னால் இப்படித்தான் அழுவாரைப்போல கதைத்து தொழுது நின்றான்! ஆறு மாதமாக நீர்ப் பாவனைக் காசு கட்டாததால் நீர் வருகையை வெட்டி நிறுத்தி விட்டார்கள்! சாப்பாட்டை விட முக்கியம் தண்ணீரல்லவா! வீட்டின் செயல்பாடே அஸ்த மித்து விட்டது!....... அன்றும் இவ்வாறுதான் அழுது தொழுது நின்றான்! பத்தாயிரம் கொடுத்து கை கொடுத்தார்! இந்த உதவிக்கு மருமகள் தொலைபேசியில் பேசி பெரிதாக நன்றி தெரிவித்தாள்! 'பெரிய ஆபத்தான கட்டத்தில கைகொடுத்தீங்கள் மாமா உங்கட உதவியை என்டைக்கும் மறக்க மாட்டம் என்றாள்'!

இளமைக் காலத்தில் கட்டிப்பிடித்து ஒன்றாக திரிந்து களி நடம் புரிந்தவர்களுக் கிடையில் இன்று ஏன் இந்த வேறுபாடு? இவர் பரோபகாரியாக, அவர் கரம் நீட்டுபவராக ஆகவேண்டிய நிலைமை ஏன் வந்துற்றது?..... தெய்வேந்திரமே அதற்கு பதில் சொல்லுவார். 'மச்சான், உனக்கு நல்ல மனம்டா, மனம் போலதான் வாழ்வு.

அதுதான் நீ நல்லாயிருக்கிறாய், நாங்கள் நாசமாப் போறம்!' வயதாகி இயலாமை வந்த பின்னர் தான் தன்னை உணர்கிறானா இவன்? ஏதோ ஞானம் வந்தால் சரி!.... இவனுக்காவது வயதான பின்னாவது ஞானம் கதையளவிலாவது வருகிறதே. எத்தனையோ கிழடு கட்டைகள் கட்டையிலே போனாலும் தங்கள் கேடுகெட்ட புத்தியோடுதான் போகிறார்கள்!... தெய்வேந்திரம் கண்கெட்ட பின்னர் தான் சூரிய நமஸ்காரம் செய்யப் பார்க்கிறான்! பலன் கொடுக்குமா?

தெய்வேந்திரம் எத்தனையோ முறை நன்றி சொல்லி விழுந்து கும்பிடாத குறையாக எழுந்து விடைபெற்று போனபின் கிருபைராசா உள்ளே வந்தார். மனைவி தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்தாள். ஒலிபெருக்கியில் விட்டதால் இவருக்கும் தெளிவாகக் கேட்டது. மரிமளத்தின் தம்பி மனைவிதான் பிரலாபித்துக் கதைத்துக் கொண்டிருந்தாள். முக்கியமாக வருத்தம் வாதையைப் பற்றித்தான் கதைக்க முடியாமல் இழுத்து இழுத்து கேரி கேரி கதைத்துக்கொண்டிருந்தாள்! தொண்டை கரகரப்பில் சொல்வது சரியாக விளங்குவதாகவும் இல்லை! என்ன வைத்தியம் செய்தும் வருத்தம் தீருவதாக இல்லை என்று மட்டும் விளங்கியது!....... போன மாதமும் இப்படித்தான் அழுது குழறினாள். ' நான் சாகப்போறன் அம்மா வந்து என்னைக் கூப்பிடுறா' என்றழுதாள்! பரிமளமும் பயந்து போய் கணவனோடு யாழ் நகர் போய் அவள் இல்லம் சென்றனர். ஆக வேண்டிய உதவிகளும் செய்தனர். புருசனின் அக்காவைக் கண்ட பூரிப்பினாலோ என்னமோ வருத்தம் குறைந்து கொண்டு வந்தது!....... இவர்கள் விடைபெற்று வரும்போது கிருபைராசா சொன்னார் இப்படி: 'வருத்தங்கள் கஸ்ரங்கள் கூடுவதற்கு மனம்தான் முக்கிய காரணம்! நம்பிக்கையீனம், பயம் இவைகள் தான் நோய் கூடுவதற்கு முக்கிய காரணம்! மரணபயத்தால் கோபத்தால் கவலைகளால்.... இப்படியே பல்வேறு உணர்ச்சிகளால், உடல் உள் இயக்கத்தை சீராக செய்துவரும் கட்டளை நரம்புகள் இரத்த அழுத்தம் காரணமாக குழம்பிப்போகும்! தாறுமாறாகச் செயல்படும், சுரப்பிகள் தேவைக்கதிகமான சுரப்பி நீரைச்சுரந்து, தேவையான நேரம் அவை இல்லாமலாகி... இப்படியே மாறுபாடான செயலப்பாடுகளால் தீராத வியாதிக்காரர் ஆகின்றனர்! எப்போதும் மனதை அமைதியாக வைத்திருக்கப் பழகுங்கள் மன அமைதியே நோய் துன்பம் இல்லாமல் வாழும் மார்க்கம்!.. என்று சொல்லிவிட்டு வந்தார் .

கஷ்ட துன்பம் என்று கேள்விப்பட்டால் இப்படியாக போய் ஆன உதவி செய்து அறிவுரையும் கூறி வருவது இவர் வழக்கம். ஆனால் பண உதவியைப் பெற்றுக்கொள்வதோடு சரி. அறிவுரையை ஏற்பார் யாருமில்லை! துன்பம் தொல்லை தொடர் கதைதான்!......மனைவி பரிமளம் இவரிடம் கேட்டாள் இப்படி: 'எங்கட சொந்தக்காரரில சில குடும்பங்கள் மட்டும் ஒன்றாலும் விருத்தியில்லாமல் சதா கஸ்ட துன்பத்தோட வாழுதுகள்! இதுக்கு என்ன காரணம்? அதுகளும் கோயிலுக்குப் போகுதுகள் கடவுள மன்றாடுதுகள், தங்கள் அளவில நேர்மையாகத்தானே நடக்குதுகள். ஏன் இந்த அவல வாழ்க்கை வாழுதுகள்?!'

கிருபைராசா சற்று யோசித்து விட்டு புன்னகையுடனே சொன்னார் இப்படி: 'எல்லோரும் கோவிலில் இருக்கும் வரைதான் நல்லவர்களாக இருக்கிறார்கள். வீட்டுக்கு வந்தால் பிசாசுதான் குடிகொண்டு விடுகிறது! போட்டி பொறாமைதான் ஆட்சி செய்கிறது! ஆளையாள் முந்தத்தான் அரும்பாடு படுகின்றனர்! தங்கள் குடும்பத்துக்கு மட்டும் நன்மை செய்து நேர்மையாக வாழ்ந்தால் காணும் என்று நினைக்கின்றனர்!..... கடவுளின் கொள்கையைப் பின்பற்றாது விடுகின்றனர்! ' உன்னைப்போல உன் அயலானையும் நேசி' என்று இயேசு சொல்லியதன் மூலம் எப்படி வாழ வேண்டும் என்று காட்டிவிட்டார்! எல்லோரும் கடவுளின் மக்களே. அவன் வேறு நான் வேறு அல்ல. அவனுக்குச் செய்யாத உதவி என்னைப் புறக்கணிப்பது போலாகும்! பிறருக்கு செய்யும் உதவி என்னைநேசிப்பது போலாகும! அயலானுக்குச் செய்யும் தீங்கு எனக்குச் செய்வதே ஆகும்!... என்ற வாறாக பல இடங்களில் சொல்லியிருக்கிறார். இதைக் கடைப்பிடிப்பார் ஆர்? ஆயிரத்தில் ஒருவரும் இல்லை? கோவிலுக்குப் போய் அழுது விழுந்து தொழுவார். ஆனால் அங்கே அழுது வடியும் பிச்சைக்காரரை திரும்பியும் பாரார் ஆகையால் ஆண்டவனும் இவர்களை திரும்பிப் பார்ப்பதில்லை! இவர்கள் தீரா துன்பப்படுவதற்கு இதுவே காரணம்!... என்று கூறி நிறுத்தியவர் மனையாளைப் பார்த்து மீண்டும் சொன்னார்:..... ஒவ்வொருவருக்கும் இருக்கிற துன்பம் தொல்லைகளுக்கு

# வாருங்கோ வட்டைக்குப் போய்வரலாம்

வாருங்கோ வட்டைக்குப் பொயித்து வருவோம் - அங்குள்ள
வாடிவரப்புகள் ஏறிவருவோம்
நீரோடும் வாய்க்காலில் நீந்திக் குளிப்போம்
நீல அல்லிப்பூக்களில் மாலை கட்டுவோம்

வாடியோரப்புளி காய்ச்சி நிக்கும் அங்க
வந்துபாருங்கோ கொச்சையாய்த் தொங்குங்காய்களை
ஆடியும் பாடியும் ஆய்வோம் புளியங்கா
ஆகா நொரக்காப் பருவமோ இன்சுவைதான்.

தண்ணிச் சோத்துப்பழம் தாகம் தணிக்கும் - இப்ப
தாராளமாயங்க காய்ச்சிக் கெடக்கும்
உண்ணவே பழஞ்சோறுந் தயிரும் அன்பாய்
உருட்டியே தருவார் வைரப் பெத்தப்பா

சுங்கான் கருவாட்டு ஆணமுஞ் சுடச்சுடச்
சோறதும் ஆக்கியே போட்டுத் தருவார்.
தங்கம்போல் நெற்கதிர் தகதகக்கும் தலை
தாழ்த்தியே பூமித்தாய் தனை வணங்கும்

எங்கள் வயலெல்லாம் வெளைஞ்சி போச்சி
எனி வெள்ளாம வெட்டிற நாளாச்சி
திங்கள் அல்ல வாற பொதங் கிழம
சீராக வெள்ளாம வெட்டு நடக்கும்

வெட்டிய வெள்ளாமக் கட்டைச் சொமந்துபோய்
அழகாய்க் களத்திலே சூடு வெச்சு
பட்டி மாடுகள் மேஞ்சிடாம நல்ல
பக்குவமாய்ச் சுற்றி வேலியடைப்போம்!

நேரம் வருகையில் சூட்டை அடித்து
நெல்லினை விட்டிற்குக் கொண்டு சேர்ப்போம்
பாடுபட்டுழைத்தால் பயன்பெறலாம் - நாம
பஞ்சம் பசியற்றும் வாழ்ந்திடலாம்.

கவிஞர் நிலா தமிழின்தாசன்

எனக்கு காரணம் புரியும்! அதை வெளிப் படையாகச் சொன்னால் பிரச்சினையாகும்! உனக்கு மட்டும் என்பதால் சொல்கிறேன் கேள்: நமது சொந்தக்காரரி லேயே ஒரு காலத்தில் நல்ல செல்வாக்காக இருந்தவர்களும் என்ன செய்தார்கள்? தங்கள் ஆடம்பரத்தையும் பவுசையும் அலங்காரங்களையும் காட்டி தின்ன வழியில்லாதவர்களை வயிறெரியச் செய்தார்கள்!........ வருத்தக்காரரை பார்க்கப் போவார்கள் நல்லாக பூசி மினுக்கிக் கொண்டுநளின நடை நடந்து கொண்டு! அந்த ஏழைகளின் சாபத்துக்கான தண்டனையைத் தான் இப்போது அனுபவிக்கிறார்கள்! அங்கேயும் கடவுள் காட்சி கொடுக்கிறார்தான் யார் கவனிக்கிறார்கள்!?'

'அப்போ நீங்கள் செய்த புண்ணியம்தான் என்னையும் பிள்ளைகளையும் நல்லபடியாக வாழ வைக்குது எண்டு சொல்லாமல் சொல்லுறீங்கள்!........ அப்ப நீங்கள் முன்ன பின்ன ஒரு பாவமும் செய்யவில்லையோ? தண்டனை இல்லையோ?' 'மனிதன் பலவீனன், பாவம் செய்யாத மனிதரே இல்லை! ஆனால் மனந்திருந்தின எந்தப் பாவிக்கும் மன்னிப்புண்டு என்று இயேசு சொல்லியிருக்கிறார். திருந்தி அவர் கட்டளைப்படி வாழும் எனக்கு அருள் பாலிக்கிறார்!..... எல்லோருக்கும் நாற்பது ஐம்பது வருசத்துக்கு முந்தின கிருபைராசாவைத்தான் தெரியும். இப்போதிருக்கும் கிருபைராசாவை ஆருக்கும் தெரியாது! புழுங்கி அவியத்தான் தெரியும்!'

அடுத்த நாள் இரவு இருக்கும் இளைய மகன் தொலைபேசியில் அழைத்தான். அனேகமாக வெளிநாட்டுக்காரரின் சகவாசம் இரவில்த்தான் நடக்கும். நேர வித்தியாசங்கள் அப்படி....

முதலில் அம்மாதான் எடுத்து கதை கேட்டா. 'எட பொடியா, சாப்பிட்டியாடா?' வழக்கமாக தொலைபேசியை எடுத்தவுடன் இவ்வின் முதல் கேள்வி இதுதான். அவனுக்கு சினம் சினமாக வரும்! '

எணை அம்மா உனக்கு இதைத் தவிர வேற கதை கதைக்கத் தெரியாதா? இங்க எல்லாரும் அந்தந்த நேரத்துக்குச் சாப்பிட்டுக் கொண்டுதான் இருக்கிறாங்க. மிதமிஞ்சி இதம்பதமான சாப்பாடுகள சாப்பிட்டு 'கொலஸ்ரோல்' வருத்தக்காரர்தான் இங்க கூட! இப்ப நேரம் என்ன தெரியுமோ, பின்னேரம். இப்பதான் வேலையால் வந்தனான். அவ 'ரீ' போட்டுத் தந்தா குடிச்சுப்போட்டு இருக்கிறன். இப்ப என்னெண்டு சாப்பிடுறது?.. ... 'எட சாப்பிட்டியா எண்டு கேட்டதுக்கு இவ்வளவு வசனம் பேசுறான் புள்ள! தாயிர மனச புரிஞ்சி கொள்ளாத பிள்ளையா இருக்கிறியே! ....' எணை அம்மா கோவிக்காதையணை! உன்ர அன்ப பாசத்த தெரியாதே எனக்கு? சும்மா பகிடி விட்டனான்!..... எங்க அப்பா அவரிட்ட போனைக் குடு. முக்கியமான கதை கதைக்க வேண்டியிருக்கு.'

கிருபைராசா தொலைபேசியை காதில் வைத்தார். 'அப்பா உங்கட 'எக்கவுண்டுக்கு'காசு அனுப்பியிருக்கிறன்! வழக்கத்தவிட இந்த முறை கூடத்தான் அனுப்பியிருக்கிறன்!....... ' ஏன் மகன் அவசரப்பட்டு கூட அனுப்புறாய்? செலவுக்கு தாராளமாயிருக்கு. நீங்க பனி குளிருக்க ஆனமான நித்திரை சாப்பாடு இல்லாமல் உழைச்சி கஷ்டப்படக்குள்ள எங்களுக்கு மிதமிஞ்சி அனுப்பயா வேணும்? ....' அப்பா ஒரு சாதாரண எளிய தொழிலாளியா இருந்தும் இந்த சண்டை பிரச்சினைக்குள்ளையும் எங்கள ஒரு நேரச்சாப்பாடும் இல்லாமல் இருக்க விட இல்ல! அகதிமுகாமில கிடந்து அவலப்பட விட வில்ல! ஆற்றையும் வீட்டில இருந்து கடமைப்பட விட இல்ல! எல்லாப்பிள்ளைகளையும் நல்லா படிப்பிச்சி ஆளாக்கினீங்க! நல்ல இடத்துச்சம்பந்தங்களும் தேடிவந்து கலியாணங்களும் சுகசீவியத்தத் தந்துது! நாங்களெல்லாம் இவ்வளவு இலகுவாக வெளிநாடு போய் செல்வாக்காகச் சீவிப்பம் எண்டு நினைச்சிருக்க இல்ல!....... எல்லாம் இப்பிடி இனிதாக நிறைவேற என்ன காரணம்? எல்லாம் உங்கட மனோ சக்தி தெய்வபக்திதான் காரணம்! இத நீங்களும் எங்களுக்கு உபதேசிச்சிருக்குறீங்க, நானும் பேஸ்புக்கில இதுகள அறிஞ்சிருக்கிறன். இப்படிப்பட்ட உங்கள தந்தையாப் பெற்ற நாங்கள் பாக்கியசாலிகள்! உங்கள்ள கடவுள் இருந்து அருள் பொழிவது என் கண்ணுக்கு தெரியுது! அதுக்கு என்ன காரணம் எண்டும் எனக்குத் தெரியும்! உங்கட பிள்ளைக்கு இது தெரியாமலா இருக்கும்? தெய்வ அருள் பெற்ற உங்களுக்கு கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும் என்பது ஆண்டவன் கட்டளையோ என்னவோ அனுப்பி வைத்திருக்கிறேன்!..

மறுநாள் மூத்த மகன் வெளி நாட்டிலிருந்து தந்தையோடு கதைத்தான்: ' அப்பா உங்கட பேருக்கு காசு அனுப்பி வைச்சிருக்கிறன்' - 'ஏன்டா மகனே உங்க ளுக்கு காசு மிஞ்சிப் போச்சா! எனக்கே அனுப்பிக் கொண்டிருக்கிறீங்க! வேற சொந்தக்காரருக்கு அனுப்பலாம் தானே.... 'இல்லப்பா, உங்களுக்கு அனுப்பினால் கஷ்டப்பட்ட எல்லாருக்கும் அனுப்பின மாதிரிதான். நீங்கதான் பார்த்துப் பார்த்து கொடுக்க வேண்டியவங்களுக்கு கொடுப் பீங்க!.......... அதுவும் போக நான் 'இன்ரநெற்றில்' உங்கட பத்திரிகை சஞ்சிகைகளில வாற கதைகள் கட்டுரைகள வாசிக்கிறனான். அருமையாக இருக்கு. என்ர சினேகிதர்மாரும் பாராட்டியிருக்கிறாங்கள்! பெரிய பட்டம் பெற்ற வித்துவ சிரோமணிகளுக்கில்லாத அறிவு உங்களுக்கு எப்படி வந்தது? கடவுள் உங்களுக்கு விசேடமான ஞான அருள் தந்திருக்கிறார் என்றே தெரிகிறது!...... நீங்க எவ்வளவோ ஆக்கங்கள படைச்சிருக்குறீங்க. அதை எல்லாம் தொகுத்து நூலாக்கி வெளியிட வேணும்! ஆவணப்படுத்தலாக இருக்க வேண்டும் ! இது தமிழுலகின் சொத்தாக விளங்கும்! இதற்காகத்தான் பணத்தொகை அனுப்பியிருக்கிறன்!'

மூத்த மகளும் எடுத்துக் கதைப்பாள். ஏன் பேரப் பிள்ளைகளும் (குமரிகள்) மழலைத் தமிழில் செல்லக்கதை பேசுவர். ஐரோப்பிய ரீங்காரத்தில் தமிழ் நடைபோடும் போது மெத்த இரசனையாக இருக்கும்! அவர்களும் உங்களால் எங்களுக்குப் பெருமையாக இருக்கிறது என்றே பகர்வர்!

அறிவாலோ ஆற்றலாலோ கீர்த்தி புகழாலோ வளமான வாழ்வாலோ, முக்கியமாக நோய் துன்பம் தொல்லை இல்லாமல் வாழும் வாழ்வாலோ அருள் பாலிக்கப்பட்டு சிறந்தோங்கும் இவர், மகா பெரிய குலம் கோத்திரத்தில், கற்ற

விற்பன்னர்களின் பரம்பரையில், ஆன்மீகத்தால் சிறந்தோங்கியவர்களின் மரபணுவில் இருந்து விருத்தியாகியவரல்ல!

சொன்னால் நம்ப மாட்டீர்கள். இவர் ஒரு நாவிதன்! யாழ்ப்பாணத்தில் ஒரு சிகை அலங்கரிப்பு நிலையத்தை நடத்தி வந்தவர். தனியாக நின்று உழைத்து ஒரு குறையுமில்லாமல் குடும்பத்தை நடத்தி வந்தவர். இல்லை உயர்த்தி விட்டவர்! ... இனப்பிரச்சனை வந்தது, குண்டு வீச்சு துவக்கு சூடு என்று எவ்வளவோ நடந்து முடிந்தது! ஐந்து இலட்சம் மக்கள் ஒரு இரவுக்குள் இடம் பெயர்ந்து அகதியாகினர்! அவர்களில் இவரும் சேர்ந்து கொண்டார். தென்மராட்சியில் சிலமாதம் வன்னியில் சில வருடங்கள் என்று யுத்த அவலத்துள் இவர் குடும்ப வாழ்க்கை போய்க்கொண்டே இருந்தது! எந்த அகதி முகாம்களிலும் தங்கவில்லை. ஒரு நேர சோற்றுக்கு நெருக்குவார படவேண்டி இருக்கவில்லை! தெரிந்தவர்கள் நண்பர்கள் இவர் குடும்பம் இருக்க தங்கள் வீட்டின் ஒரு பகுதியை ஒதுக்கிக் கொடுத்தனர். அதுவும் கனநாளில்லை, சிலநாளில் சொந்த இருப்பிடம் கிடைத்தே விட்டது!...... அப்போது சாப்பாட்டுக்காக காசு பணத்துக்காக தொழிலுக்காக இவர் எல்லோரையும் போல் அவலப்பட்டுத் திரியவில்லை!......... கத்தி கத்தரிக்கை சீப்பு இவை மூன்றும் போதும் இவருக்கு!

மிதி வண்டியை உருட்டிக்கொண்டோ ஓடிக்கொண்டொ, போகையில் எவ்வளவு அவலக்காட்சிகளைக் காணநேரும்! குமர்ப் பிள்ளைகள் கூட தங்கள் அங்கங்களை மறைப்பதில் சிரமப்படுவர்! சின்னன் சிறார்கள் பள்ளிப்படிப்போ பசிக்கு உணவோ இல்லாமல் பார்த்துக்கொண்டிருப்பார்கள்! வயதானதுகள் அழுக்குடையோடு தாடி தலைமயிரை வளர்த்துக்கொண்டு ஆதிகால வேடர் போல தோன்றுவர்! எத்தனையோ தாய்மார் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு கதறிப் புலம்புவர்!........இவர் எல்லாக் காட்சிகளையும் கண்டு கசிந்துருகுவார்! ஏன் இந்த இனத்துக்கு மட்டும் அவல வாழ்வு தொடர்கதையாக இருக்கிறது! என்று ஏங்குவார்! விடைதான் கிடைக்க வில்லை!

இவர் போய்க் கொண்டிருக்கும் போது, யாரோ இவர் பேரைச் சொல்லி கூப்பிடுவார்கள். நெருங்கிப் போவார் இவர். ஒன்றிரண்டு பேர் தெரிந்தவர்களாக இருக்கும். 'ஆரு கிருபைராசாவா, அண்ணே நாங்கள் தாடி தலை எல்லாம் வளர்த்து. குரங்குகள் மாதிரி குந்திக் கொண்டிருக்கிறம்! சாப்பாடு இல்லாம கிடக்கலாம் இது ஆக கிருச கேடாக கிடக்குது! எங்கட பிள்ளைகளுக்கெண்டாலும் வெட்டி வடிவாக்கி விடுங்கோ. ஏதோ பார்த்துத் தாறம்!

'ஒரு மரத்துக்குக் கீழேபோய் தன் தொழிலை ஆரம்பித்து விடுவார். கேள்விப்பட்டு கோவிலிலோ பள்ளிக் கூடங்களிலோ இருப்ப வர்களும் அவரைச்சூழ்ந்து கொள்வர்! வேலை வேலைதான் கை ஓயாத வேலை தான்! அவர்கள் தருவதை வாங்கிக் கொள்வார். தங்களுக்குக் கிடைக்கும் சாப்பாடு தேநீர் என்று அன்போடு இவருக்கு உவந்தளிப் பார்கள்! செல்வாக்குத்தான்!........ அப்போது, யாழ்ப்பாணத்தில் மேல் சாதிக்கு என்று வேறாக எளிய சாதிக்கு என்று வேறாக சலூ ன்கள் இருந்தன. ஆனால் இன்று எல்லோரும் ஒரே முகாம் தங்குமிடம் கியூவரிசை என்று ஒன்றாகிவிட்டனர்! இதுவும் இறைவனின் திட்டமோ! எல்லாவிடமும் இவர் காட்சி கொடுக்கிறாரோ!

எல்லாச்சண்டைக் களங்கலிலும் நின்று நடமாடிய இவருக்கும் இவர் குடும்பத்துக்கும் சிறுகாயமோ பாதிப்போ ஏற்படவில்லை! அதுமட்டுமல்ல இந்த நெருக்கடியான காலகட்டத்தில் தான் சொன்னால் நம்ப மாட்டீர்கள் இவரின் பிள்ளைகளுக்கு நல்ல இடத்து சம்பந்தங்கள் கிடைத்து திருமணங்கள் நல்லபடியாக ஒப்பேறியது! வெளிநாட்டு வாய்ப்பும் கிட்டியது!

சமாதான ஒப்பந்தம் வந்தது. இவர் சொந்த ஊர் திருகோணமலைக்கு வந்து வசதியாக வீட்டைக் கட்டி வளமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்!...... இன்னும் நம்மக்கள் வாழ்வின் அவலம் தீர்ந்தபாடில்லை! ஆனால் அவரோ கஷ்டம் இல்லாமல் சுகமாய் சீவிக்கிறார்! அதற்கான பதிலை சொல்வார் இப்படி: ஒரு வீட்டக்கட்ட நெஞ்சால அரக்குறான் ஒவ்வொருவனும்! பிள்ளைகளுக்கு நல்ல இடத்தில் கலியாணம் செய்து வைக்க மூளையப் போட்டு குழப்புறான் எத்தின பேர்! வெளிநாட்டுக்கு ஒரு பிள்ளையத் தன்னும் அனுப்ப இயலாம ஏங்கித்திரியுறான். எத்தினபேர்!....... ஆனா எனக்கு எல்லாம் சும்மா 'ரீ.வி'யில படம் பார்த்துக் கொண்டிருப்பது போல பார்த்துக்கொண்டிருக்க எல்லாம் இனிதே நிறைவேறி விட்டது! இந்த வாழ்க்கை என்ர கெட்டித்தனத்தால வந்தது

இல்ல. எல்லாம் கடவுள் தந்தது! அவர் நாமம் அர்ச்சிக்கப்படுவதாக.... கடவுள் நாமத்தை இடைக்கிடை என்றாலும் உச்சரித்து வந்தால், அவர் திருவுருவை மனசில் இருத்தி வந்தால் முக்கியமாக அவர் காட்டிய வழியாக பிறர் சினேகத்தோடு வாழ்ந்து வந்தால் போதும். எனக்குக் கிடைத்தது எல்லாருக்கும் கிடைக்கும் என்பார் இவர்!

ஈருளியை உருட்டிக்கொண்டு வீட்டிலிருந்து வெளிக்கிடுகிறார் அவர். முக்கியமான அலுவல்களை முடிக்க வேண்டும் என்றால் நகர்பகுதிக்குத்தான் போக வேண்டும். ஆகப்பிரதானமாக பொது நூலகம் போக வேண்டும்..... மனைவி இடைமறிப்பாள்: 'வானம் இருண்டு போய் கிடக்கு! இப்ப மழை கொட்டும் போல கிடக்கு! இந்தாங்க இந்தக் குடையை எண்டாலும் கொண்டு போங்க... அவர் அலட்சியமாக ஒரு புன்னகையை சிந்தி விட்டு மிதி வண்டியை உழக்கிக்கொண்டு போய் விடுவார்! தன் சிரமதான பணிகளை எல்லாம் முடித்து மிதி வண்டியை மிதித்துக் கொண்டு வீடேகி விடுவார். அப்போது ஒரு அதிசயம். இடிமின்னலோடு சோ என்று மழைகொட்டும்! இவர் சிரித்துக்கொண்டே மனையாளிடம் கூறுவார்: "பார்த்தியா கடவுள்ற புதுமையை! நான் என்ர அலுவல்கள எல்லாம் முடிச்சுப்போட்டு வந்த பிறகு தான் மழையப் பெய்விக்கிறார்! ஏன்தான் என்னில மட்டும் கூடிய அக்கறை காட்டுகிறாரோ!... இப்படி அடிக்கடி நடக்கும். யாருக்கும் சொல்வதில்லை, மனைவியிடம் மட்டும் தான்!

கொப்புகளை தறித்து காயப் போட்டிருப்பார் வேலி ஓரமாக இவர் மனதுள் ஒருகுரல் துள்ளும்: கெதியா விறகாக்கி அடுக்கிவை! இவர் கொத்தி விறகாக்கி அடுக்கி வைப்பார் தாழ்வாரத்தில்..... அடைமழை பிடித்து விடும்! 'விறகு இல்லாமல் ஈர விறகு கொள்ளிகளோட சமைக்க ஏலாம இருக்கு!' என்று கேட்டு வேண்டிச் செல்வர் இவர்கள் விறகு சுள்ளிகளை அயலில் உள்ளவர்கள்!

இவருக்கு எழுதுவதுதான் தனிக்கலை அதில் பரமானந்தத்தை ஆத்ம திருப்தியைக் காண்பவர்! எழுதியதை சில தினங்களின் பின் வாசித்துப் பார்ப்பார். வியப்பு மேலிடும்! 'நானா எழுதினேன், எப்படி இப்படி எழுதினேன் என்று ஆச்சரியப்பட்டுப் போவார்! இறைவனின் திருக்கரம் தன்னோடு இருந்ததாகவே எண்ணுவார் அவர்!...'

இப்படியாக அனுதினமும் இறைமாட்சியை காட்சியை கண்டு வருகிறார் இவர்!

மற்றவர்களின் துன்ப வேதனைகளைக் கண்டு மனம் நொந்து போவார், களிவிரக்கப்படுவார்! 'ஆண்டவா, அவர் களுக்கு மட்டும் ஏன் சதா கஷ்டந் தொல்லைகளைக் கொடுக்கிறாய்? அவர்கள் துன்பங்களை எனக்குத் தந்து அவர்களுக்கு சுகத்தைக் கொடுக்க மாட்டீரா,? என்று இரந்து வேண்டியும் இருக்கிறார்! ஆனால் இவரின் இந்தக் கோரிக்கை மட்டும் நிறைவேறுவதாயில்லை... இறை சித்தம் என்னவோ யாரே அறிவார்?!

○○○

## பகிர்வோம்....

### ஈழமும் தமிழும்



**இலங்கை புதுமை இலக்கியம்** (1962) என்கிற சிறப்பு மலரிலே பிரசுரமாகியிருந்த ***ஆங்கிலம் பேசிய அர்சுனன்*** என்கிற நகைச் சுவைச் சம்பவம் பற்றிய விபரம் வருமாறு:

சுமார் 20 ஆண்டுகட்கு முன்னர், பருத்தித் துறையைச் சேர்ந்த வராத்துப்பளை வாலிபர்களால் 'அர்ச்சுனன் தபசு' என்ற நாடகம் நடிக்கப்பட்டது. அர்ச்சுனன், சிவனை நோக்கி பாசுபதாஸ்திரத்துக்காகத் தவஞ் செய்து கொண்டிருக்கிறான். இதனை அறிந்த இந்திரன், தவத்தைக் கலைப்பதற்காக, நடனமங்கை ஊர்வசியை அனுப்புகிறார். அவள், அர்ச்சுனன் தவம் செய்யுமிடத்தையடைந்து அவன் முன்னிலையில் அற்புதமாக ஆடத் தொடங்கினாள். அர்ச்சுனன் ஆடலினாலும் பாடலினாலும் தன் புலனடக்கம் கலைந்து கண் விழிக்கிறான். முன்னே நடனமாடிக் கொண்டிருக்கும் பெண்ணைக் கண்டதும் அவனது கோபம் உச்சநிலைக்கு வந்துவிட்டது. உடனே பாடுகிறான்.

''ஏண்டி என்னைத் தீண்டவந்தாய் லேடி?
நான் ஏகிறேன் வனமதையே நாடி''

நாடகத்துக்குப் பாட்டமைத்த அண்ணாவியார் மனதில், ஏகிறேன் வனமதையே நாடி என்ற அடிமுதலில் உறுத்தியதும், முதலடியை எதுகையாய்ப் பாட நினைத்துவிட்டார் போலும்: எங்கேயோ பட்டினக் கரையில் காதில் விழுந்த (Lady) என்ற சொல்லைத் தூக்கிப் போட்டுவிட்டார்,

# அறியப்படாத ஈழத்துச் சிறுகதை முன்னோடி: பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை



பேராசிரியர்
செ. யோகராசா

ஈழத்தின் ஆரம்பகாலச் சிறுகதை எழுத்தாளர்களுள் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையும் ஒருவரென்பதும் நுண் ஆய்வு செய்யும் போது ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளுள் ஒருவராகலாமென்பதும் பலருமறியாத விடயங்களாகும். இவரது சிறுகதைகளை (1) தழுவி எழுதப்பட்டவை. (2) சிறுகதை வடிவத்தில் எழுதப்பட்டவை (3) சுயமான படைப்பு என வகைப்படுத்தி அணுகமுடிகின்றது.

## (1)தழுவல் சிறுகதைகள்:

ரோல்ஸ்ரோய் எழுதிய ‘இரண்டு பெரியவர்கள்’, ‘முத்தான மூன்று சிரிப்புக்கள்’ என்பன சி.க.வினால் தழுவிஎழுதப்பட்டன. ‘இரண்டு பெரியவர்கள்’ என்பது ‘இருவர் யாத்திரிகர்’ என்று மாற்றம் பெற்றுள்ளது. ‘தருமம் தலைகாக்கும்’, ‘நடமாடும் மனிதருக்குச் செய்வது படமாடும் கோயிற் பகவற்கு ஆகும்’ முதலான கருத்துக்களை வலியுறுத்தும் ‘இரண்டு பெரியவர்கள்’ என்பது, தமிழரது கிராம வாழ்க்கைக் கேற்றவிதத்தில் எழுதப்பட்டு, தழுவல் இலக்கியம் எப்படி அமையவேண்டும் என்பதற்கு முன்மாதிரியாக அமைகின்றது. எடுத்துக் காட்டாகப் பின்வரும் பகுதியைக் குறிப்பிடலாம்.

‘முருகா’ வீட்டுக்கு அயல் வீட்டில் ஒருவர் இருந்தார். அவர்தான் வீட்டு எசமான். அவருக்குத் ‘தொல்லை’ என்று பெயர்.

எதற்கும் எல்லாம் தொல்லையாய்த்தான் இருக்கிறது என்பார். அதனால் அவருக்குத் ‘ தொல்லை’ என்றுபெயர் மிகப் பிரசித்தமாய் விட்டது. அவர் அந்தக் கிராமத்திலே பொருள் பண்டத்தாற் கூடியவர். தோட்டநிலம், நெல் விளைநிலம், வளவுக் காணிகள், ஆடுமாடுகள் போதிய அளவு உண்டு. பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் என்று பெருகிக் கொண்டேயிருந்தார்கள். பெண் பிள்ளைகள் சிலர் இங்கிலிசும் படித்தார்கள். ஆண் பிள்ளைகளுக்குள்ளே இரண்டொருவர் உத்தியோகம். உத்தியோக மருமக்களை எடுக்கவேண்டுமென்பது அவர் கருத்து. சொந்த மருமகன் ஒருவன் **“பிறக்கிராசி”,** ‘நல்ல வீடுகட்டித் தரவேண்டும்; கார் வேண்டும்’ என்பது அவருடைய நிபந்தனை. பெண்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வீடுகட்டுவதற்கும் ஏற்பாடுகள் உண்டு. ‘தொல்லை’க்குத் தொல்லைகளுக்குக் குறைவேயில்லை. இன்றைக்குச் சற்றே ஆறுதல் எடுக்கலாமென்றால் அன்றைக்குத்தானே அநேக காரியங்கள் ஆகவேண்டியிருக்கும். இப்படித் தொல்லைகள் இருந்தாலும் மற்றவர்கள் மதிப்பதிலும், மக்கள் மருமக்களின் செல்வாக்கிலும் ஒரு திருப்தி”

கதை பின்வருமாறு முடிகின்றது:


“ ‘தர்மத்துக்குத் தவணையில்லை’

‘அன்றறிவாமென்றாது அறஞ் செய்க’

என்ற தொடர்களின் பொருளை, தொல்லை படுக்கையிற் கிடந்தபடி உணர்ந்தார்.”

சிறுகதை வடிவத்தினூடாக சி.க. எதனைக் கூற விரும்பினார் என்பதற்கும், எத்தகைய சிறுகதைகளை நாடினார் என்பதற்கும் மேற்காட்டிய பகுதி சான்று பகர்கின்றது.

ரோல்ஸ்ரோய் எழுதிய ‘முத்தான மூன்று சிரிப்புக்கள்’ என்ற கதையின் ஒரு சிரிப்பாக ‘செருப்புக் கட்டியின் கதை’ உள்ளது. இக்கதை,



"**நோய்** நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய் நாடிவாய்ப்பச் செயல்"

என்ற குறளுடன் முடிகின்றது.

மேற்குரிய படைப்புக்களை நோக்கும் போது சிந்தனையுலகில் மேற்கையும், கிழக்கையும் இணைக்கும் எண்ணம் சி.க.விடம் இழையோடுகின்றது என்று கூறத் தோன்றுகின்றது.

## (2) கதைசிறுகதையாதல்

மகாபாரதத்தில் இடம்பெறும் சம்பவங்கள் சிறுகதைவடிவில் சி.க.வினால் எழுதப்பட்டுள்ளன. பாரதயுத்தம் முடிவடைந்து பாண்டவர் நாட்டை ஆளும்போது, வரயுசனாகவிருந்த வீமனிடம் தீர்ப்பிற்காக வந்த ஒரு வழக்கு. 'கலியுகம் 1ந் தேதி' என்ற கதையாக மாறியுள்ளது. 'காலம் உணர்ச்சியைத் தன்வசஞ் செய்வது; தவத்தாலன்றி அதனை வெல்லுதலரிது; கலியில் மிகமிகஅரிது; கலி ஐயாயிரத்தின் மேல் தருமத்தின் சாயலையேகாண்டலரிது' என்பதை உணர்த்தும் இப்படைப்பு சிறுகதைக்குரிய உருவம், வசனச் செறிவு, படிப்படியான வளர்ச்சி, எதிர்பாராதமுடிவு ஆகிய தன்மைகளைக் கொண்டுள்ளது.

செய்யுள் சிறுகதையாதல்

'மனோன்மணியம்' செய்யுள் நாடகத்தில் வரும் 'சிவகாமி சரிதை'யை வசனவடிவில் தரும், சி.க.வின் படைப்பான சிவகாமிசரிதை, பரமான்ம, ஜீவான்மத் தொடர்பினை உணர்த்தும் சிறுகதையாகி,"**தாடலைபோர்** கூடியவை" என்ற திருவருட் பயனுடன் முடிவுறுகின்றது.

"**சுடர்த்தொடி** கேளாய்" என்ற கலித்தொகைச் செய்யுளை வசனவடிவில் தரும் 'நகைப்பூங் கொத்து" என்பதும் சிறுகதை முயற்சியே. "**நாண்** என்ற குணத்துக்கு இலக்கியமான பெண் ஒருத்தி, கற்பின் திண்மையைக் காக்கவேண்டிய சந்தர்ப்பத்தில் அறநெறிப்பட்ட மறுவற்ற–தன் மனநிலையைப் புலப்படுத்துவதாக" அமையும் இக்கதையில் பெண்ணின் மனஉணர்வுகள் திறம்பட வெளிப்படுத்தப்படுகின்றன. சிறுகதை முயற்சி தொல்காப்பியர் காலத்திலும் இருந்ததெனக் கூறும் அகிலனும், ச.பொன்னுத்துரையும் (எஸ்.பொ) "**சுடர்த்தொடி** கேளாய்" என்ற மேற்கூறிய செய்யுளையே சான்றாக எடுத்துக் காட்டியுள்ளமையும் மனங் கொள்ளத்தக்கது.

ஈழத்தில் தனித்துவமான உரைநடை கைவரப்பெற்ற மிகச் சிலருள் ஒருவரான சி.க. வின் உரைநடை மேற்குறிப்பிட்ட சிறுகதைகளிலும் சிறப்புற வெளிப்படுகின்றது எடுத்துக்காட்டாக இறுதியாகக் குறிப்பிட்ட நகைப் பூங்கொத்து சிறுகதையலிடம் பெறும் ஒரு சிறுபகுதியைக் குறிப்பிடலாம்:

"**அவன்** ஏன் நகைத்தான்? அது சாதாரண நகையாயில்லை. நகைப் பூங்கொத்து அரும்புநகை–மொட்டுநகை–போதுநகை– பூ நகை என்ற பலநகைகள் அந்த நகையுட் காணப்படுகின்றன. ஆயினும் அது ஒரு சிறுபுன்னகை. அவன் ஏன் நகைத்தான்.?"

சங்கச் செய்யுள்களை கல்லூரி மாணவர் களுக்கு சுவையாக எவ்வாறு கற்பிக்கலாம் என்பதற்கும் இச்சிறுகதை ஒரு முன்மாதிரியா கின்றமை குறிப்பிடத்தக்கது.

## (3) சுயமான படைப்பு

'சி.க.'வின் சுயமாக எழுதிய சிறுகதையாகத் திகழ்வது 'நவபாரதம்' என்பது இச்சிறுகதையின் சிறப்பு சமகாலக் கல்வி நிறுவனமொன்று சார்ந்த தில்லுமுல்லுகளை வெளிப்படுத்துவதாகும். இவ்வாறு வெளிப்படுத்தும் போது பின் நவீனத்துவபாணிமுறை என்று கூறத்தக்க விதத்தில் அதன் எடுத்துரைப்பு அமைந்திருப்பதே எமது கவனத்திற்குரியதாகின்றுது. (ஒருவிதத்தில் பாரதியாரின் சிறுகதையை நினைவு படுத்தக் கூடியது. இவ்விதத்தில் 'சி.க.' ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளுள் ஒருவராகின்றார் என்பதில் தவறில்லை. இது காரணமாக, முற்குறிப்பிட்ட ஏனைய சிறுகதைகளைக் குறைத்து மதிப்பிட முடியாது. ஏனெனில் ஆரம்பகாலத் தமிழ் சிறுகதையின் செல்நெறிகளுளொன்றாக விருந்தது, 'அறப்போதனை செய்தல்' என்பது நாமறிந்ததே!

சி.க. சிறுகதைகள் எழுதியவர் மட்டுமன்றி, புதுமைப்பித்தன், கு.ப.ரா, பித்தான்ஷா முதலானவர் போன்று முழுமையடையாத நாவலொன்றின் சொந்தக்காரருமாவார். 'இரு சகோதரர்' என்ற பெயரிலே அவரெழுதத் தொடங்கிய நாவலின் ஒரு பகுதிமட்டும் சுக்கிரதிசை என்றபெயரில் வெளிவந்துள்ளது. நாவல் எழுந்த காலத்துக ் கலையுகமும் கல்வியுலகமும் இதில் நகைச்சுவைமிளிரக் கிண்டல் செய்யப்படுகின்றது. இவ்விதத்திலே பிரதாபமுதலியாரின் இளமைக் காலக் குறும்புகளை இப்பகுதி நினைவுபடுத்துகின்ற தெனலாம்.

மேற்கூறியவாறான 'சி.க.'வின் ஆரம்பகாலத் தடங்களே அவரது தலைசிறந்த மாணவனாகிய இரசிகமணி கனக செந்திநாதனிடம் இன்னொரு விதத்தில் சென்றுசேர்ந்து அவரை ஈழத்தின் முக்கியமானதொரு எழுத்தாளராக்கியது என்பதில் தவறில்லை!.

❍❍❍

சிறுகதை

# சரீவு காக்கா



- முஸ்டீன் -

எல்லோரும் ஒரு சிரமதானத்தில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். பல சின்னப் பிள்ளைகளும் சில பெரியவர்களும், பற்றைகளைப் பிடுங்குதல், ஆங்காங்கே சிதறிக் கிடக்கும் சிராய்களையும், கட்டைத்துண்டுகளையும், கம்புத்துண்டுகளையும், முக்கால் வாசி கரைந்துபோய் மண்ணில் புதையுண்டு கிடக்கும் பொலித்தீன் பைகளையும் கீலங்கீலமாகக் கிழிந்து இறந்து போன கடதாசித் துண்டுகளையும் பொறுக்கி ஒன்று சேர்த்து ஓரிடத்தில் குவித்துக் கொண்டிருந்தார்கள். சின்னஞ் சிறுசுகள் எல்லாம் நான்கிலிருந்து பத்து வயதிற் குட்பட்ட குழந்தைகள். முன்னொரு காலத்தில் பத்து வயதென்றால் உருவத்தில் பெரியவர்களாக இருப்பார்கள் இப்போதெல்லாம் அப்படிக் கிடையாது, உணவுப் பழக்க வழக்கங்களில் ஏற்பட்ட மாறுதலும் மற்றும்பிற காரணிகளும் பிள்ளைகளின் வளர்ச்சியை வெகுவாகப் பாதித்து விட்டது என்பதைப் பலர் இன்னும் உணர்ந்து கொள்ளவேயில்லை. பத்து வயதிலும் ஒரு ஆறேழு வயதுத் தோற்றம்.

வெள்ளை சாரம் உடுத்து வெள்ளை சேர்ட் மற்றும் தொப்பியுடன் மௌலவிமார்களைத் தவிர வேறு யார்தான் சிரமதானம் செய்வார்கள். பார்த்த உடனேயே அது குர்ஆன் ஓதப்பள்ளி என்பதை அவ்வளவு எளிதில் புரிந்து கொள்ள முடியாது. அதற்கான எந்த லட்சணமுமில்லாத ஒரு இடம். ஓட்டமாவடிப் பிரதான வீதியில் இருந்து கூட்டுறவுச் சங்கத்துக்கு ஒரு நெடிய வீதி செல்கின்றது ஓட்டமாவடி தேசிய பாடசாலை, பாத்திமா மகளிர் பாடசாலை எல்லாம் தாண்டி கூட்டுறவுச் சங்கத்தையும் தாண்டி ஷஹ்ரா பெண்கள் அரபுக்கல்லூரியையும் தாண்டி ஒரு தைக்காப் பள்ளியையும் அறு நூறு மீட்டர் தூரத்தில் இரண்டு ஜும்மாப் பள்ளிவாயல்களையும் தாண்டி அது மீராவோடை மற்றும் கருவாக்கேணி வீதியில் போய் விழுகின்றது.

சிரமதானம் நடக்கும் ஓதப்பள்ளி பென்னம் பெரிய ஸஹ்ரா பெண்கள் அரபுக்கல்லூரி மதிலுக்கு அருகாக ஒரு சைக்கில் மட்டுமே பயணிக்கக்கூடிய ஒழுங்கையினூடாக முப்பது மீட்டர்கள் தூரத்தில்தான் அமைந்திருக்கிறது. மாடி வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் குடிசை வீடுமாதிரி. இங்கு குழந்தைகள் சேர்ந்து ஓதும் இனிய சங்கீதத்துடன் போடும் சப்தம் மாலை நேரத்தில் கூடுகளில் அடங்குவதற்கு முன்னர் காகங்களும் மைனாக்களும் போடும் பேரிரைச்சலுக்கு ஒப்பானது. இடைக்கிடையே ஒலிக்கும் குரல்

"ஏய்ச் சத்தம் போடாதே" என்பதுதான்.

அந்தக் கரடுமுரடான குரல் நிச்சயம் ஒரு மௌலவிக்குச் சொந்தமானதாவே இருக்கவேண்டும், பாவம் மௌலவி. அவருக்கு குர்ஆன் ஓதத் தெரிந்த அளவுக்கு குழந்தை உளவியல் தெரியாது, இந்த அரபுக் கல்லூரிகளின்

வளர்ப்பு சரியில்லை, அதனால்தான் எப்பவுமே வில்லனைப் போல மௌலவிகள் நடந்துகொள்கிறார்கள். பயான் என்ற பெயரில் ஆச்சாபூச்சா என்று கத்திப் பயமுறுத்துவதிலேயே அவர்களுக்கு அனுபவம் ஜாஸ்தி. மௌலவி பேசுவது பிடிக்காவிட்டால் எழுந்து வெளியே சென்று விடலாம் என்று ஒரு விதி மார்க்கத்தில் இருந்திருக்குமானால் சிலதைத் தவிர மற்ற எல்லா மார்க்க சொற்பொழிவு நிகழ்வுகளிலும் மௌலவி மட்டும்தான் சத்தம் போட்டுக் கொண்டிருப்பார்.

ஆனால் இன்றைய சிரமதானத்தில் அந்த அதட்டல் சப்தத்திற்கு இடமிருக்கவில்லை, குழந்தைகளுக்கு ஓரிடத்தில் கம்மென்று இரண்டு மணித்தியாலங்கள் அமர்ந்து இருப்பதுதான் பெரிய கொடுமையாக இருக்கும். அதனால்தான் அடிக்கடி தமது எதிர்ப்பையும் வெறுப்பையும் சப்தமிடுவதன் மூலம் வெளிப்படுத்திக் காட்டுகின்றார்கள் போலும். ஆனால் இப்போது மிகக் குதூ கலமாக ஓடியாடி எல்லோரும் குப்பைகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தார்கள். மௌலவிகள் அந்தக் குப்பைகளை உரப்பைகளில் அடைத்து வீதிக்குக் கொண்டு சென்றார்கள். அப்போதான் சரீவு காக்கா அப்பகுதியால் வந்தார்.

அவரது சரியான பெயர் முஹம்மது சரீப் ஆக இருக்க வேண்டும். அந்தப் பெயர் ஊர்ப் பேச்சுவழக்கில் சிக்கிச் சின்னாபின்னமாகி மம்மசரிவர் என்றாகி பின் மம்மு சரீவு ஆகிக் காலவோட்டத்தில் மம்மு சிதைந்து மறைந்து போக சரீவு மட்டும் எஞ்சியது. அவர் வயதில் மூத்தவர் என்பதற்காக காக்காவும் அவர் பெயரோடு ஒட்டிக் கொண்டது. ஆக மொத்தத்தில் இப்போது அவர் பெயரே சரீவு காக்கா ஆகிப் போனது. இப்படிச் சிதைந்து மருவிப் போன பெயர்களுக்காக கலாநிதிப்பட்டத்திற்கான ஆய்வே செய்யலாம்.

சரீவு காக்காவுக்கு பெருமைமிகு அடையாளங்கள் எதுவும் இல்லை. அவர் ஒரு மிக வறுமைப்பட்ட ஏழைத் தொழிலாளி. ஊரிலுள்ள குப்பைகளைச் சேகரிப்பதற்காகப் பிரதேச சபையின் மூலம் நியமிக்கப்பட்ட பலருள் அவரும் ஒருவர். எப்போதும் அழுக்கான ஆடைகளுடேனேயே அவரது தரிசனம் பலருக்கும் கிடைக்கும். காலையிலிருந்து மாலை வரைக்கும் ஓய்வின்றி உழைக்கும் ஒரு கடின உழைப்பாளி. அவரை யாரும் ஒரு மனிசனாகக் கூடக் கணக்கில் எடுப்பதில்லை. பொதுமக்கள் பணத்தில் களவெடுத்துத் தின்னும் பள்ளிவாயல் தலைவர்மாருக்கும், கூட்டுறவு கடையில் ஏழைகளின் பங்கில் கருணையின்றிக் கொள்ளையடித்துச் சாப்பிடும் கசன் மெனேஜருக்கும் கஞ்சா விற்கும் காசிம் காக்காவுக்கும் அபிவிருத்திக்கான கொமிசன் என்ற பெயரில் ஊரையே அடித்துச் சாப்பிடும் அரசியல்வாதிக்கும் இருக்கும் மதிப்பும் மரியாதையும் குப்பையள்ளும் கள்ளம் கபடமில்லாத உண்மையான உழைப்பாளியான சரீவு காக்காவுக்குக் கிடைக்கவில்லைதான்.

குப்பைப் பையுடன் வந்த மௌலவிகளும் சின்னஞ்சிறு குழந்தைகளும் சரீவு காக்காவின் கண்களில் பட்டுவிட்டதும்

“மச்சான் மிசினக் கொஞ்சம் நிப்பாட்டுங்க”

குப்பை மிசின் நிறுத்தப்பட்டதும் அவர் குப்பைகளுக்குள்ளிருந்து பாய்ந்து கீழே இறங்கினார்

குப்பைப் பையைச் சுமந்து வந்த மௌலவிகளிடம் வேகவேகமாகச் சென்று

“அதத் தாங்க மௌலவி நான் தூக்குறன்”

அவர்களும் இலவசமாக ஒரு வேலைக் காரன் இலகுவாகக் கிடைத்தவிட்ட திருப்தியில் அவரிடம் மறுப்பின்றி ஒப்படைத்தார்கள்.

“என்ன மௌலவி என்ன விஷேஷம்?”

அவர் மிகவும் பவ்வியமாக இரண்டாக மடிந்து நின்று உள்ளத்தின் ஆழ்மனதிலிருந்து பொங்கிவந்த பாசாங்கில்லாத மரியாதையை கலப்படமில்லாது அப்படியே வார்த்தைகளில் தவழவிட்டபடி கேட்டார்.

“ஓதப்பள்ளியொண்டு ஆரம்பிச்சிருக்கம் அதான் துப்பரவு செய்றம்”

பதில் வேண்டா வெறுப்பாய் வந்து விழுந்தது.

“என்ன மௌலவி ஒரு வார்த்த சொல்லி யிருந்தா வந்து செஞ்சி தந்திருப்பனே” அவர் வார்த்தைகளில் உண்மையான கனிவு பொதிந்திருந்தது.

“பறவாயில்ல சரிவு காக்கா எல்லாம் முடிஞ்சி, நல்ல நேரத்துக்கு நீங்க வந்திங்க, இனி அதெல்லாம் ஏத்திட்டுப்போறது மட்டும்தான் இரிக்கி”

“வேற ஏதாவது செய்யனும் என்டாச் சொல்லுங்க மௌலவி,வந்து செஞ்சி தாரன்”

மௌலவிகள் என்றால் அவர்கள் கண்ணியமானவர்கள், இப்படிக் குப்பை அள்ளும் இழிவேலையெல்லாம் அவர்கள்

# POOBALASINGHAM BOOKDEPOT

**Importers, Exporters, Sellers & Publishers of Books, Stationers and News Agents**

## புதிய வரவுகள்

| நூலின் பெயர் | ஆசிரியர் | வெளியீடு | விலை |
|---|---|---|---|
| • செய்திகளின்மறுபக்கம் | இரா.துரைரத்தினம் | தமிழ்தந்தி | 500/= |
| • யார் இந்த இராவணன்? | என்.கே. எஸ்.திருச்செல்வம் | அருந்ததி பதிப்பகம் | 980/= |
| • தகவல் அறியும் உரிமை | கே. கீதானி ஜீவந்தி | காமினி ஜயவிக்ரம | 750/= |
| • வெற்றித் திறவுகோல் | கு.குண சிங்கம் | | 480/= |
| • பின்லாந்தின் பசுமை நினைவுகள் | உதயணன் ஆர்.சிவலிங்கம் | தாய்வீடு | 900/= |
| • தலைமைப் பொறுப்பேற்கலாம் | சந்திரிகா சுப்பிரமணியம் | சந்திரோதயம் | 400/= |
| • சிப்பிக்குள்முத்து | கி.லக்ஷ்மணன் | இந்துப் பண்பாட்டு நிதியம் | 800/= |
| • Jaffna-Aloysius | Jeyaraja Aseervatham | | 3500/= |
| • மௌனம் எனும் பேராசை | மாலினிமாலா | திறவுகோல் | 350/= |
| • நான் எனும் நீ | மாலினி மாலா | திறவுகோல் | 400/= |
| • குச்சொழுங்கைகள் காத்திருக்கின்றன | மாலினிமாலா | திறவு கோல் | 300/= |

## பூபாலசிங்கம் புத்தகசாலை

புத்த விற்பனையாளர்கள், ஏற்றுமதி, இறக்குமதியாளர்கள், நூல் வெளியீட்டாளர்கள்

தலைமை: இல. 202, செட்டியார் தெரு, கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 2422321. தொ.நகல்: 2337313 மின்னஞ்சல்: pbdho@sltnet.lk

கிளைகள்:

340, செட்டியார் தெரு, கொழும்பு - 11. தொ.பே: 2395665

இல. 309 A-2/3, காலி வீதி, கொழும்பு - 6. தொ.பே: 4-515775, 2504266

இல. 4 A, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

செய்யக் கூடாது என்பது போலத்தான் அவரது பேச்சு அமைந்திருந்தது.

எல்லாக் குப்பைகளையும் அள்ளிக் கொட்டிக் கொண்டு குப்பை மெஸின் புறப்பட்டது.

சரீவுக் காக்கா அந்த ஓதப்பள்ளிப் பக்கம் பார்த்துக் கொண்டே சென்று மறைந்தார்.

நமது இந்த ஓதப்பள்ளிக்கு ஒரு வரலாறு இருக்கிறது. நியாஸ் மௌலவி, மொகிதீன் மௌலவி உட்பட இன்னும் சில மௌலவிகள் ஒன்று சேர்ந்து இதை ஆரம்பித்தார்கள். சின்னதாக ஆரம்பித்து பெரியளவில் யோசித் தார்கள். குர்ஆன் ஓதவரும் பிள்ளைகளின் தொகை நாளுக்குநாள் அதிகரித்தது, இருக்கும் சின்ன இடத்தில் வைத்து தொடர்ந்தும் ஓதப்பள்ளியை நடாத்த முடியாது. அதனால் தான் பெரிய கட்டடம் ஒன்றையும் சொந்தக் காணியையும் பற்றிய யோசனை அவர்க ளுக்குள் மையங் கொண்டது.

“ஊராக்கள் நல்ல ஆதரவு தாராங்க, அதால நாம இதக் கொஞ்சம் டெவலப் பண்ணுவம்”

“இந்த இடத்துல நிரந்தரமா ஒரு ஓதப்பள்ளியக் கட்டினா என்ன?”

“அதுவும் நல்ல ஆலோசனதான், ஒரு முயற்சிய எடுத்துப் பாப்பமே”

“ஊருக்குள்ள கொஞ்சம் வசூலுக்குப் போவம், கட்டாயம் ஏதாவது உதவி நமக்குக் கிடைக்கும்.”

“அதுவும் செரிதான் இந்தக் காணிய வாங்கிட்டா ஒரு நிரந்தரக் கட்டடத்தப் பத்தி யோசிக்கலாம்”

“முதலாவது காணிக்கார ஆளுக்கிட்டப் போய் விசயத்தக் கேட்பம், அல்லாவுக்காக அதுவும் சதக்கத்துல் ஜாரியாவா இத இனாமா தாராரா என்டு பாப்பம் இல்லாட்டி விலைக்கிக் கேட்பம், எவ்வளவு எங்கிரத்தத் தீர்மானிச்சிட்டு வசூல் பண்ணுவம் அப்பதான் வேல சுலுவாகும்”

“அப்பிடியே செய்வம் அதான் நல்ல யோசின”

“இப்ப ஊருக்குள்ள யாரு இதுக்கெல்லாம் காசி தரப் போறான். எல்லாரும் எதாவ தொண்டச் சொல்லி மெனக்கெடுத்திப் போடு வானுகள், எத்தன பேரப் பாத்துட்டம்”

“அப்பிடிச் செல்ல வானா, பள்ளி கட்டயும் மத்ரசா கட்டயும் காசி குடுத்தா அதான் நாம செய்ற புண்ணியம் என்ட மனநில எல்லாப் பணக்காரனுக்கும் இரிக்கி, அதால ஓதப்பள்ளி கட்டயும் காணி வாங்கயும் கட்டாயம் காசி தருவானுகள்”

“அது உண்மதான், நாம முயற்சி செஞ்சி பாப்பம்”

மௌலவிகளின் பேச்சில் உறுதியிருந்தது. தமக்குள் ஒரு ஒற்றுமையான நிலைப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டு அவர்கள் மாலையான போது வசூலினை ஆரம்பிப்பதற்குத் தயாராக இருந்த வேளை சரீவு காக்கா அந்தப் பக்கம் வந்தார்.

“என்ன நியாஸ் மௌலவி எங்க கௌம் பிட்டீங்க, நான் எதாவது செஞ்சி தரனுமா”

“உங்களால என்ன செய்ய ஏலும் சரீவு காக்கா!”

அவர்களின் பதிலில் அலட்சியம் தொனித்தது, அவரை ஒரு பொருட்டாகவே அவர்கள் கருதவில்லை, தினமும் மாலையில் அந்தப் பக்கம் சரீவு காக்கா வந்தார் அங்கு நடக்கும் ஒவ்வொரு நிகழ்வையும் பார்த்துக்கொண்டே இருப்பார், அவரும் சின்னப்பிள்ளையில் ஓதப்பள்ளிக்குப் போனார், ஆனால் அவருக்கு ஓதல் வரவில்லை. மிளகு கற்கண்டு எல்லாம் சாப்பிட்டுப்பார்த்தார். அப்போதும் ஓதல் வரவில்லை, படிப்பும் அப்படித்தான். பின்னர் கிடைத்த வேலையெல்லாம் செய்து இப்போது ஏதோவோர் வகையில் வாழ்க்கை வண்டியை உருட்டிக் கொண்டு செல்கின்றார்.

மௌலவிகள் வசூலுக்குப் போன இடத்தில்

“ஹாஜியார், குர்ஆன் மத்ரசாவொன்டு ஆரம்பிக்கப் போறம் அதுக்கு காணியொன்டு வாங்கனும், உங்கட உதவியையும் சதக்கதுல் ஜாரியாவா தாங்க”

“ஊருக்குள்ள எத்துன மத்ரசா இரிக்கி, வாழச்சேனைக்க ஒன்டு, மீராவோடைக்க ஒன்டு, செம்மோடைக்க ஒன்டு, ஓட்டமாவடிக்க ரெண்டு மூனு, இப்பிடி இருந்தும் இவகெல்லாம் என்னத்தக் கிழிச்சிட்டாக... அதுக்குள்ள நீங்களும் ஒன்ட ஆரம்பிச்சா இது என்ன நடப்பு..!!”

“இது அந்த மத்ரசா இல்ல ஹாஜி, ஓதப்பள்ளி, சின்னப் புள்ளயலுக்கு ஓதிக் குடுக்கிற மத்ரசா”

“ஆஹ்... ஓதப் பள்ளியா? அதுக்கென்னத்துக்க தனிக் காணி?”

"தனித்துவமா புதுசா நல்லாச் செய்யனுமென்டு நினைக்கம் ஹாஜியார்"

"இப்ப காணிவாங்க வசூல் பண்ணுவிங்க, புறவு கட்டடம் கட்ட வசூல் பண்ணுவிங்க, புறவு இன்னும் டெவலப் பண்ண வசூல் பண்ணுவிங்க இதானா உங்கட புழப்பு"

"இல்ல ஹாஜியார் அந்த ஏரியாவுல ஒரு ஓதப்பள்ளி இல்ல, ஆரம்பிச்சா அந்த ஏரியாப் புள்ளயலுக்கு உதவியா இரிக்குமே"

"இவ்வளவும் வசூல் பண்ணி நீங்க என்ன பிரீயாவா ஓதிக் குடுப்பிங்க இல்லியே, அந்தப் பக்கம் ரெண்டு ஜும்ஆப் பள்ளி இரிக்கிலுவா அதுல ஒரு பள்ளில நீங்க ஓதிக் குடுக்கிறானெ, இல்லாட்டி ஒரு ஊட்ட வாடகைக்கு எடுத்து அதுல ஓதிக் குடுங்களம், இதுவும் ஒரு பிஸ்னஸ் மாதிரிதான். நீங்க தொழில் செய்ய நான் என்னத்துக்கு முதல் போடனும். நான் கேக்கிறது செரியா பிழையா மௌலவி, நீங்கதான் நாலு எழுத்துப் படிச்ச ஆக்கள்"

அவர்களுக்கு கோபம் உச்சத்திற்கு ஏறியது, முடிந்தளவு பொறுமையாக எல்லா வற்றையும் விளங்கப்படுத்தி அலுத்துவிட்டது. அப்படியிருக்கும் போது ஹாஜியார்

"செரி மென, இப்ப நிலம எல்லாம் கொஞ்சம் டைட்டா இரிக்கி, கொஞ்ச நாள் கழிச்சி வாங்களன் பாப்பம்"

"எவ்வளவு ஹாஜியார் போட"

"ஒரு அஞ்சப் பத்தப் பாத்துப் போடுங்களன்"

இதெச் செல்லத்தானா இவ்வளவு பந்தா பண்ணுறாரு மனிசன் என்ற முணுமுணுப்போடு அவர்கள் விடைபெற்றுக் கொண்டு இதுவரை கிடைத்தவைகளைக் கொண்டு வேலைகளை ஆரம்பிப்பம் என்று மௌலவிகள் தமது பணியைத் தொடங்கினார்கள். அந்தக் காணியில் பாதியை வாங்கினார்கள். குறுக்கீடு செய்தபடியிருந்த தென்னை மரத்தை வெட்டினார்கள். தற்காலிகக் கொட்டில் அடித்தார்கள். ஐம்பதுக்கு மேல் பிள்ளைகள் இடையூறுகளின்றி ஓதத் தொடங்கினார்கள். அப்போதெல்லாம் சரீவு காக்கா தன்னால் முடிந்த அனைத்துச் சதுர உதவிகளையும் வழங்கினார். குப்பை மெசினைக் கொண்டு வந்து விஷேட சேவை செய்தார், ஆயினும் யாரும் அவரைப் பொருட்படுத்தவில்லை, தமது வேலை இலகுவாக முடிய அல்லாஹ் உதவி செய்வதாக மௌலவிகள் எடுத்துக் கொண்டார்கள்.

தினமும் அந்தப்பக்கம் வந்து போனார், பிள்ளைகள் ஓதுவதைக் கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டிருப்பார் பின்னர் சென்றுவிடுவார், அவரது உழைப்பு அபரிமிதமானது ஆயினும் அதை யாரும் பெரிது படுத்தவில்லை, அது மற்றவர்களின் கண்ணுக்குத் தோற்றவுமில்லை, அவரது அழுக்கடைந்த ஆடையும் வயிற்றைக் குமட்டும் வாடையும் மற்றவர்களை ஒதுங்கிச் செல்லவே செய்திருந்தது.

வழமை போன்று அப்பக்கம் வந்த சரீவுக் காக்கா, புதிதாக அடிக்கப்பட்ட தகரக் கொட்டிலுக்குள் பிள்ளைகள் ஓதிக் கொண் டிருப்பதைப் பார்த்துவிட்டு வந்த வேகத் திலேயே திரும்பிச் சென்றார், நேராகத் தனது வீட்டுக்கு வந்த அவர் தனது வீட்டில் குப்பைகளோடு குப்பைகளாக வந்து சேரும் உரப் பைகள் அனைத்தையும் வீட்டில் சேகரித்து வைத்திருந்த கொல்லைப் பக்கம் சென்று அவற்றில் நல்ல உரப் பைகளைத் தேடியெடுத்து நன்றாகக் கழுவிக் காய வைத்து, அழகாக வெட்டி ஒன்றோடு ஒன்று இணைத்து தனது கையாலேயே தைத்து ஒரு படங்கு போலச் செய்து அவற்றை அழகாக உருட்டிக் கட்டிக் கொண்டு தோளில் சுமந்தபடி பாதைக்கு வந்தார். அத்தனை வேலைகளையும் செய்து முடிக்க மூன்று நாட்கள் அவருக்கு எடுத்திருந்தன. தனது தொழிலுக்குக் கூடச் செல்லாமல் அவர் அதைச் செய்து முடித்தார். தேவையில்லாத பொருட்களைச் சேகரித்து வைக்கின்றவர்களுக்கு

"என்ன நீ நம்மட சரீவுக்காக்கா மாதிரி எல்லாத்தையும் சேத்து வெச்சிரிக்காய்" என்று உவமித்துச் சொல்லும் அளவுக்கு அவர் ஒரு உவமையாய் மாறியிருந்தார். ஆயினும் அது அவரது காதிற்கு எட்டியிருக்க வாய்ப்பில்லை.

எல்லோரும் "ஆஹ் சரிவுக்காக்கா" என்று நக்கலாகக் கூப்பிட்டுச் செல்லுமளவுக்குத்தான் அவரது பெறுமானம் இருந்தது.

மூன்று நாட்களாக சரீவுக் காக்காவை அந்தப் பக்கமாகக் காணவில்லை, என்ன ஆனதோ ஏதானதோ என்று யாரும் ஒரு கேள்வி கூடத் தங்களுக்குள் கேட்டுக் கொள்ளவில்லை, அந்தளவுக்கு அவர் பொருட்படுத்தப்படவில்லை யென்பதை அந்நிகழ்வு சுட்டி நிற்கும்போது அவர் அந்த

உரப்பையாலான படங்கு உருளையைச் சுமந்து கொண்டு ஓதப் பள்ளியினுள்ளே வந்தார். நேராக பிள்ளைகள் ஓதிக் கொண்டிருந்த இடத்திற்கு வந்து

“மௌலவி கொஞ்சம் வாங்களன்”

அவரை ஆச்சரியத்தோடு அப்போது எல்லோரும் பார்க்க மௌலவிகளில் ஒருவர்அவருக்கு அண்மையில் சென்று

“என்ன சரீவுக்காக்கா என்ன விசயம்” என்று இளக்காரமாகக் கேட்டார்

எல்லோரும் அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள் கொண்டு வந்திருந்த படங்கு உருளையைக் கீழே பக்குவமாக வைத்தார்.

“உங்களுக்குத் தாரத்துக்கு எனக்கிட்ட காசி பணம் இல்ல மனெ, இந்தப் புள்ளயல் எல்லாம் மண்ணுக்குள்ள இருந்து ஓதுதுகள், அதுகளுக்கு படங்கு தச்சிக் கொண்டு வந்திரிக்கன், கீழ போட்டுக் குடுங்க அதுல இருந்து ஓதட்டும்”

அவர் சொல்லிவிட்டு அங்கிருந்து வேகவேகமாக வெளியேறினார்.

எல்லா மௌலவிகளும் அவரை ஆச்சரியத்தோடு திகைத்துப் போய்ப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

சரீவுக் காக்கா அவர்களின் கண்களில் இருந்து மறைந்தபோது

பிள்ளைகள் ஓதுவதை விட்டுவிட்டு அமைதியடைந்திருந்தார்கள்,

அநேகமாக அவர் கொண்டு வந்த படங்கை கனத்துப்போன மனதோடு ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளாது கீழே விரித்துக் கொண்டிருக்க வேண்டும்.

○○○

# அமைதி காண

– நல்லையா சந்திரசேகரன்
(இறந்தோட்டை)

உலகம் அமைதி காண
சுற்றுவதை நிறுத்திப் பார்க்குது
உலகம் சுற்றுவதை
நிறுத்திப் பார்க்குது
உலகம் பொறுமை காக்குது.
கொஞ்சம் பொறுமை காக்குது.

உலகம் விரும்பும்..
அமைதி எல்லாம்
எம்மில் தானே உள்ளது - அது
அனைவருக்கும் தெரிந்தது.
உலகம் விரும்பும்
அமைதி எல்லாம்
உலகில் வாழும்
இனங்களிலே உள்ளது
இனங்களிலே தங்கி உள்ளது
உண்மையாக உள்ளது.

இன்று…இதனை
மறந்து விட்ட
மனிதர் எமக்குள் எப்படி
அமைதியைக் கொண்டு வருவது
மனிதர் அமைதியை
கொன்று எப்படி
கொண்டு வருவது?

மனிதன் செய்யுந் தவறுகளை
மறந்து விட்டு
மறந்தே விட்டு விட்டு
மனிதன் எங்கோ தேடுகிறான்
மண்ணில் அமைதியை
எங்கோ தேடுகிறான்
அமைதி மண்ணிலே வருமா?
இல்லை…
தன்னிலே வருமா?

உயிர்கள் தான்…
உலகமே தவிர
உயிர் இல்லா
உலகம் மட்டும்
இருந்து என்ன பயன்?
உலகில் உண்மையில்லா
மனிதர்கள் இருந்து(ம்)
என்ன பயன்?
நல்லுணர்வுகள் இல்லாதவர்
இருந்து(ம்) என்ன பயன்
மனிதா என்ன பயன்?

உன்னிலே தேடு
அமைதியை உண்மையாய்
உன்னிலே தேடு
உலகம் உருப்படும் -நாளை
உலகம் உருப்படும்
உலகம் உனக்காய்
உனக்காய் உலகம்
அமைதி படும்
உலகம் அமைதி பெறும்

உன்னிலே தேடு
அமைதியை உண்மையாய்
உன்னிலே தேடு
உலகம் உருப்படும் -நாளை
உலகம் உருப்படும்
உலகம் உனக்காய்
உனக்காய் உலகம்
அமைதி படும்
உலகம் அமைதி பெறும்



சினிமா

பவனீதா லோகநாதன்



# Oscar இல் சுயாதீனப் படைப்புக்கள்

உலகம் முழுவதும் அனிமேஷன் கலைஞர்களும் படைப்புக்களும் பெருகிவிட்ட காலமிது. புதிய படைப்புக்கள், வித்தியாசமான படைப்பாற்றல், மாறுபட்ட சிந்தனைத் தளம் என்று பலவிதமான அனிமேஷன் படைப்புக்களை திரைப்படவிழாக்களில் காண்கின்றோம்.

எண்ணற்ற திரைப்பட விழாக்களில் சுயாதீனப்படங்கள் வரிசையில் அனிமேஷன் படங்கள் அதிகரித்து வரும் சூழ்நிலையில் Oscar திரைப்பட விழாவில் மட்டும் ஸ்டுடியோக்களின் ஆதிக்கமே நிலவி வருகின்றது.


2001 ஆம் ஆண்டில்தான் முதன் முதலாக Oscar திரைப்பட விழாவில் அனிமேஷன் படங்களுக்கென்று விருதுகள் அறிவிக்கப்பட்டன.



Pixar, Disney, DreamWorks, 20th Century Fox, Sony, Tim Burton, Blue Sky Studios, Studio Ghibli, Laika, Nickelodeon, Cartoon Saloon போன்ற ஸ்டுடியோக்களின் படங்களே விருது வென்ற படங்களாகவும் விருதுக்காக பரிந்துரைக்கப்பட்ட படங்களாகவும் காணப்படுகின்றன. இதில் முதலிடத்தில் 9 விருதுகளை வென்று Pixar முதலிடத்திலும் 3 விருதுகளை வென்று Disney இரண்டாம் இடத்திலும் மூன்றாவதாக இரண்டு விருதுகளுடன் DreamWorks நிறுவனமும் காணப்படுகின்றன.


அமெரிக்கா எனும் முதலாளித்துவ நாட்டில் அதன் வழித்தோன்றல்களான ஸ்டுடியோக்களின் ஆதிக்கம் நிலவுவதில் ஆச்சரியமில்லை. அனிமேஷன் படங்களை பொறுத்தவரை ஸ்டுடியோக்களிற்கிடையே மாபெரும் போட்டி நிலவுகின்றது. நாளுக்கு நாள் தங்கள் படைப்புக்களின் தொழில்நுட்ப மற்றும் உருவாக்கத்தரத்தை அதிகரித்து வருவதோடு மாறுபட்ட படைப்புக்களையும் கொடுத்து வருகின்றன. ஸ்டுடியோக்களின் போட்டித்தன்மையும் அதற்காக மேற்கொள்ளும் பிரயத்தனங்களும் நிறுவன பங்குகள் மற்றும் வணிக முக்கியத்துவமும் தனிப்படமாக உருவாக்கப்படுமளவுக்கு சுவாரஸ்யமான சம்பவங்களைக் கொண்டுள்ளன எனலாம்.

பணமும் தொழில்நுட்ப வல்லமையும் கொண்ட ஸ்டுடியோக்களைத் தாண்டி சுயாதீன அனிமேஷன் படங்கள் தங்களை உலக அரங்கில் நிருபித்து வருகின்றன. உலகின் மற்றத் திரைப்பட விழாக்களில் நுழைந்து தனது இருப்பை ஸ்திரமாகப் பதிவு செய்தாலும் Oscar திரைப்பட விழாவில் நுழைவதே பெரும் சவாலாக அமைகின்றது.








சிறப்பான படைப்புக்களாக தெரிந்தால் அவற்றின் விநியோக உரிமையை பெற்று விடுவதும் திறமையான படைப்பாளிகளைக் கவனித்து தங்களது நிறுவனத்தில் வேலைக்கு அமர்த்துவதன் மூலமாகவும் அவர்களுக்குப் பட வாய்ப்புக்களை கொடுப்பதன் மூலமாகவும் தங்கள் நிறுவனத்தினை மேலும் உறுதிப்படுத்திக் கொள்கின்றன. உதாரணமாக Father and Daughter மூலம் சிறந்த அனிமேஷன் குறும்படத்திற்கான விருதினை வென்ற MichaëlDudok de Witf;F Studio Ghibli நிறுவனம் The Red Turtle படவாய்ப்பு கொடுத்து பரிந்துரைப்பில் இடம்பெற்றமையை நினைவுகூறலாம்.

சவால்மிக்க சூழலில் இந்த வருடம் நடைபெற்ற Oscar திரைப்பட விழாவில், சுயாதீனப் படங்களான Loving Vincent, The Breadwinner பரிந்துரைக்கப்பட்டு கவனத்தை ஈர்த்ததோடு நம்பிக்கையையும் அளித்துள்ளது.

DorotaKobiela, Hugh Welchman இயக்கத்தில் வெளியான Loving Vincent, ஓவியர் வின்செட் வான்கோவின் வாழ்கை வரலாற்றுத் திரைப்படம். Polish Film Institute,đ பங்களிப்பில் முழுவதுமான வர்ணம் தீட்டப்பட்ட அனிமேஷன் திரைப்படமாக உருவாகியுள்ளது. சுயாதீன படங்கள் அனிமேஷன் திரைப்படங்களின் வடிவத்தில் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

Nora Twomeyஇயக்கத்தில் வெளியான The Breadwinner, சர்வதேச கூட்டுத்தயாரிப்பில் வெளியாகியிருந்தாலும் Cartoon Saloon நிறுவனத்தின் நிதிப்பங்களிப்பும் காணப்படுகின்றது. ஆப்கானை கதைக்களமாக்கி வெளியாகியுள்ளமை தேர்வுக்கு காரணமாக இருக்க கூடும் என்ற சந்தேகத்தை மீறி, சிறப்பான சுயாதீனப் படைப்பாக பல விருதுவிழாக்களில் பாராட்டுக்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

பரிந்துரைப்பு பட்டியலில் இடம்பெற்ற இந்த இரண்டு படங்கள் தந்த நம்பிக்கையால் எதிர் வரும் ஆண்டுகளில் மற்றத் திரைப்பட விழாக்களைப் போலவே Oscar திரைப்பட விழாவிலும் சுயாதீனப் படங்களின் வருகையும் வெற்றியும் தனித்துவமாக பதிவு செய்யப்பட்டு ஸ்டுடியோக்களின் ஆதிக்கம் மட்டுப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

❍❍❍

**நூல் :**
**நஜிமுல் ஹுசைனின்**
**நட்சத்திரக் கவிதைகள்**
**ஆசிரியர்:**
**என். நஜிமுல் ஹுசைன்**
**பதிப்பு:**
**2017**
**விலை:**
**ரூபா 450.00**



கவிஞர் நஜ்முல் ஹுசைன் நாடறிந்த கவிஞர். 'பனித்தீ" என்ற கவிதைத் தொகுதியை 1992 இல் வெளியிட்டவர். இவர் வாழ்த்துப் பாக்கள் பாடுவதிலும் வல்லவர். இவர் எழுதிய முப்பத்து நான்கு வாழ்த்துப் பாக்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இந்த வாழ்த்துப் பாக்களை இவரது மனைவி நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் சிறப்பாகத் தொகுத்துள்ளார். புரவலர், இலக்கியம், இசை, அறிவியல், ஊடகம் எனப் பல்துறை சார்ந்தோரை வாழ்த்தி ஆசிரியர் பாடியுள்ள வாழ்த்துப்பாக்கள் இவை. சில இரங்கல் கவிதைகளும் இத்தொகுப்பில் உள்ளன. ஆசிரியரின் ஆளுமைக்குத் தக்க சான்றாக அமைந்துள்ள இத்தொகுதி படித்து இன்புறவும் பேணிப் பாதுகாக்கவும் ஏற்றதாக அமைந்துள்ளது. நூல் ஆசிரியரும், இந்நூலின் தொகுப்பாசிரியரும் பாராட்டுக்கு உரியவர்கள்.

# தமிழில் பெண்(ணிய)நிலை பேசிய நாடகங்கள்

**(பெண்நிலைப்பாடு சார் நாடகங்களை இரு நிலைகளில் நோக்கலாம். ஒன்று எழுத்துப்பிரதி ஆற்றுகை செய்யப்பட்டு நூல் வடிவமாக்கப்பட்ட நாடகங்கள். மற்றையது நூல் வடிவம் பெறாத ஆற்றுகை செய்யப்பட்ட நாடகங்கள். இக்கட்டுரை நூல் வடிவில் வெளிவந்துள்ள மிக முக்கிய நாடக எழுத்துருக்களை முன்வைத்தே அமைகின்றது. இது பற்றிய மிகப் பரந்த அளவில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.தமிழில் பெண்நிலைசார் நாடகங்கள் எவ்வாறு உள்ளன என்பது பற்றியே இக்கட்டுரை நோக்குகிறது. தமிழ் நவீன நாடகங்களில், பெண்களின் பங்களிப்பு மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.)**

இயற்கையில் இருமைச் சமநிலையை உலகெங்கும் உணர்த்த முற்படுவது பெண்ணியம். இங்கு முக்கியமாக உணரப்பட்டு, பகிரப்பட்டவை - ஆண் மற்றும் பெண் என்பவர்களுக்கு இடையேயான பண்பாட்டு அடிப்படையிலான அதிகாரப்பகிர்வு (Power Relationship) ஆகும்.

ஜான் லாக், மான்டெங்கு, வால்டேர், ஹஷ்யூம், மெக்காலே மேரிஹேஸ், மேரிவுல்ஸ்டோன் கிராப்ட், சிமொன் திபூவா, பெட்டி ப்ரீடன், டெய்லர், ஜிலா ஐன்ஸ்டீன், ராபின் மார்கன், ஜூலியட் மிச்சல் போன்ற மேலைநாட்டு அறிஞர்கள், 'பெண்நிலை' பற்றித் தொடங்கிய சிந்தனையை உலகெங்கும் பரப்பியுள்ளனர்.

பெண்ணியம் தொடர்பான விழிப்புணர்ச்சியை ஊடகங்களான பத்திரிகை, திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றில் பிரதிபலிக்கிறதைக் காணலாம். இச்சூழலில், பெண்ணியக் கருத்துக்களைத் தமிழின் நவீன நாடகம் எந்த அளவில் உள்வாங்கியிருக்கிறது என்பது கேள்வி.

அரங்கைப் பொறுத்தவரையில் பெண்ணிலைசார் நாடகங்கள் காலங்காலமாக மேடையேறிய வண்ணம் உள்ளன. நவீன நாடக மரபில் பெண் முக்கிய பங்கு வகிக்கிறாள். மேடையில் நடிப்பதாக இருந்தாலும் சரி அல்லது மேடைக்கு பின் அவளுடைய தனிப்பட்ட வாழ்க்கையாக இருந்தாலும் சரி பல்வேறு விதமான கேள்விகள் பெண் நிலை பற்றி எழுந்தவண்ணமே உள்ளன.

இந்த நூற்றாண்டுத் தமிழ் நாடக வளர்ச்சியின் தொடக்கத்திலேயே பெண்ணிய சிந்தனையினைக் காண முடிகிறது. நவீன நாடகங்கள் உருவானபின் பெண்நிலைவாதச் சிந்தனை புதிய திருப்பம் பெறுகிறது. வங்காள நாடக வளர்ச்சி, டெல்லி நாடகப்பள்ளி, கேரள நாடகப்பள்ளி, தஞ்சாவூர் தமிழ்பல்கலைக்கழக நாடகத்துறை, பாண்டிச்சேரி பல்கலைக்கழக நிகழ்த்துதுறை இவற்றின் தொடர்பால் தமிழ்நாட்டில் நவீன நாடக அலை உருவாகியது. ஜெர்மனி, பிரான்சு, ரசியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் நாடக முயற்சிகளைத் தெரிந்துகொண்ட அளவில், இங்கும் சோதனை நாடக முயற்சி உருவானது. புதிய நாடக மரபில் சமூகத்தை விமர்சிப்பது என்ற நோக்கில், அங்கதப் போக்கிலும் அவலப் போக்கிலும் நவீன நாடகங்கள் உருவாயின.



தமிழ் நிலைப்பட்ட அரங்க வரலாற்றில் 1970 களின் பின் நாடகம் என்ற ஒரு கலைவடிவம் ஆழமான கருத்தியல் நிலையில் கட்டமைக்கப்பட்டு புதிய பரிமாணத்தில் இயங்கத்தொடங்குகின்றது.




**கலாநிதி சண்முக சர்மா ஜெயப்பிரகாஷ்**

தமிழ் நாட்டில், தொடக்கநிலை நவீன நாடகாசிரியர்கள் என்று அறிமுகமாகிய ராமானுஜம், ந. முத்துசாமி, ஞாநி, மு.ராமசாமி, இந்திரா பார்த்தசாரதி, கே.ஏ.குணசேகரன் ஆகியோர்களைக் குறிப்பிட்டுக் கூறலாம். இந்திரா பார்த்தசாரதியின் நாடகங்களே அதிகமாக அச்சில் வந்துள்ளன.

குழந்தை ம.சண்முகலிங்கம், பேரா. சி.மௌனகுரு, ஜெயரஞ்சனி ஞானதாஸ், தேவானந், போன்றோர் ஈழத்தில் பெண்நிலைசார் நாடகங்களை மேடை ஏற்றியுள்ளனர். அதேபோல் சூரியா பெண்கள் அமைப்பு என்னும் அமைப்பு பெண்ணிய நிலைப்பாடுடன் செயற்படுகின்றது.

மேற்குறிப்பிட்டவர்களுள் பலர் நாடகங்களை மேடை ஏற்றுவதில் தங்களுடைய முனைப்பைக் காட்டிய அதேவேளையில் அதனை நூலுருவாக்குவதில் முனைப்புக் காட்டவில்லை. இதனால் பலருடைய நாடகப் பதிவுகள் பதிவாகாத நிலையில் இருப்பதை அவதானிக்கலாம்.



இந்திரா பார்த்தசாரதி, தன் நாடகங்களில் படித்த மேல் மத்தியக் குடும்பச் சூழல்களின் நாகரிகப் போக்கினை உணர்த்துகிறார். 'போர்வை போர்த்திய உடல்கள்' என்ற நாடகத்தில் விபச்சாரம் புதிய அணுகு முறையில் கையாளப்பட்டுள்ளது. "தன் கலைத்திறத்தையும் அறிவாற்றலையும் வளர்த்துக் கொள்வதன் மூலம் கணிகை ஒரு தனித்தன்மை கொள்கிறாள். ஆணுக்கு இணையான திறம் கொள்கிறாள்" என்று கூறும் கருத்தை மையமாகக் கொண்டதாக இந்நாடகம் அமைந்துள்ளது.

'மழை' என்னும் நாடகம் - உளவியல் அடிப்படையில் எழுதப்பட்ட நாடகம். அப்பாவுடன் வாழும் ஒரு பெண், தனிமையின் தாபத்தில் ஒருவரை மண உறவுக்கு அழைக்கிறாள். பெண்ணின் மனநிலையில் உள்ள மகளுக்கும் ஆணின் தன்மையில் உள்ள தந்தைக்கும் உள்ள 'தந்தை – மகள்' என்ற மனப்போராட்டத்தையே இந்நாடகம் முன்நிலைப் படுத்துகின்றது. இதில் அதிகார உறவுமுறை முன்நிலை பெறுகின்றது.

'கால இயந்திரம்' என்னும் நாடகம் - கணவன், மனைவி, மகள் என மூன்று பேருக்குமான முரண்பாடு. கணவனின் புறக்கணிப்பால் ஆண்களை நாடிச் செல்லும் தாயை, மகள் வெறுக்கிறாள். தாய்க்கும் மகளுக்குமான மனநிலைப் போராட்டத்தை எடுத்துச் சொல்கின்றது இந்நாடகம்.

'கொங்கைத் தீ' என்னும் நாடகத்தின் தொடக்கத்தில், இந்தியச் சமுதாய வாழ்வில், பெண்கள் - சீதையாக, பாஞ்சாலியாக, கண்ணகியாக, மாதவியாக இருக்கின்றார்கள். இதில் கண்ணகியின் கதையை நாடகமாக்கி பெண்கள் பற்றிய தனது பார்வையை பதியவைத்துள்ளார். இந்திரா பார்த்தசாரதி பெண்களின் நிலையை சமூகத்திற்கு தனது நாடகம் மூலம் வெளிப்படுத்துகிறார்.

பேரா.இராமானுஜத்தின் - கிரேக்க நாடகமான 'ரோயன் நகரப் பெண்கள்' (The Trojen Women) என்ற நாடகத்தின் தமிழ்த் தழுவலாகிய 'வெறியாட்டம்' என்னும் நாடகத்தில் பெண்ணின் ஆழமான அவலம் பேசப்படுகின்றது. போரென்றாலே பொன்னும் பெண்ணும் சூறையாடப்படல் என்பதான



குரூர மரபைச் சந்திக்கும் பெருந்தேவி, தன் குடும்பத்துப் பெண்கள் அனைவரும் பகைவரின் பாலுறவு வன்முறைக்குப் பலியாகும் சூழலில், குடும்பத்தின் ஒரே வாரிசான பேரக்குழந்தையைப் பகைவர் வேல் கொண்டு குத்தும் சூழலை வெளிப்படுத்தியுள்ளார், தனது வெறியாட்டம் என்னும் நாடகத்தில்.

'மௌனக் குரல்' என்னும் நாடகத்தில் சந்திரமதியும் பாஞ்சாலியும் சீதையும் ஏகபதிபக்தியின் (ஆணாதிக்க) தொன்மங்களாகவே உணர்ந்து பழகிப்போன நிலையில், அவர்கள் போன்றோரின் அடிமனக் கேள்விக் குறிகளின் குரலாக மௌனக்குரல் நாடகம் அமைகின்றது.

மு. ராமசாமியின் 'துர்க்கிர அவலம்' (சோபாக்ளீசின் அன்டிகனி-தழுவல்) என்னும் நாடகம் பெண்ணிய நோக்கில் குறிப்பிடத்தக்கது. சோபாக்ளீசின் அன்டிகனி, பேரரசனையே எதிர்த்துப் போராடுகிறாள்.

ஞாநியின் 'பலூனில்' என்னும் நாடகம் - விமர்சனத்துக்குள்ளாவது நீதித்துறைதான் என்றாலும், இருமைச் சமக்கோட்பாடு, உஷா என்ற பெண் பாத்திர வடிவில் பலவிடங்களில் பேசப்படுகின்றது. பெண்களின் எதிர்காலம் பற்றிய பல கேள்விகள் இங்கு முன்வைக்கப்படுகின்றன.

அம்பையின் நாடகம் - 'பயங்கள்' - ஆணுக்கும் பெண்ணுக்கும் பயங்கள் பொதுவாக இருப்பதாகச் சொல்லப்படுவது வித்தியாசமானது. இந்த நாடகத்தில் அம்பை, ஓர் ஆணின் பாதுகாப்பிலிருந்து பெண்ணை விடுவிக்க நினைக்கவில்லை. தாலி, குடும்ப இறுக்கம், உடைமைப் பண்பு இவையெல்லாம் கூட இந்நாடகத்தில் இருக்கின்றன.

ஜெயந்தனின் 'நிறைகாப்பு' என்னும் நாடகம், திருமணமான ஒருவனும் ஒருத்தியும் தனியிடத்தில் தங்க நேர்ந்தபொழுது ஒருவரையொருவர் அளவளாவுவதும், ஆனால் ஆசைப்படாமல் இருப்பது போல் நடிப்பதும், பிரியும் பொழுது தனிமனித ஏமாற்றத்துடன் செல்வதும் சமூக மரபைக் காத்த நிறைவுடனும் முடிவது என்பதான கதைப் பொருளுடையது.

பாலியல் வன்முறையின் அவலம் காட்டும் பிரபஞ்சனின் நாடகம் 'முட்டை' அதிகார வர்க்கத்தின் அடக்குமுறையைப் பிரச்சாரக் கலப்பின்றிக் கலைவடிவில் தருகிறது. காவல் நிலையங்களில் பாலியல் வன்முறை பொதுவான சமூக நியதிபோல் ஆகிக் கிடப்பதை 'முட்டை' காட்டுகிறது.

பிரபஞ்சனின் 'அகலிகை', அகம் இல்லா ஒருத்தியோடு அறம் நடத்தும் கௌதமர் போன்றோரைச் சாடுகிறது. மனம் பொருந்தா மணத்தில் ஏற்படும் சேதத்தால் குறுகுறுப்பற்ற மற்றொரு தேடலுக்கு அகலிகை முனைவது நாடகத்தில் நியாயப்படுத்தப்படுகிறது.

குழந்தைப் பேற்றின் துயரத்தை ஒரு தெய்வீகம் போல் ஆக்கித் தாய்மைக்கு மகுடம் சூட்டும் சமூகப் பொய்மை பற்றிச் சிந்திக்க வைக்கிறது ஞானராஜசேகரனின் 'வயிறு' என்னும் நாடகம். கணவன் இருந்தாலும் இறந்தாலும் புறக்கணித்துப் போனாலும் எந்தச் சூழலிலும், குழந்தையென்னும் பெரும் பொறுப்பைத் தோளில் சுமந்திருக்கும் பெண்ணினம் பற்றிய சிந்தனையை இது முன் வைக்கிறது. ஏழைத்தாய்களின் உணவிட முடியாத இயலாமையின் அவலத்தைக் காட்டுவது வயிறு. கருப்பை நீக்கத்தால் பிள்ளைப்பேற்றிலிருந்து விடுதலை பெற நினைக்கும் பெண்ணியம் இச்சூழலில் அறிவுடையதாகிறது.

அரிச்சந்திரனையே குறிக்கோள் மனிதனாகப் புகழும் இந்திய மரபில் 'சந்திரமதி' போன்ற பெண்களின் தியாகமும் சத்திய சோதனையும் மறைந்து போயிருப்பது பற்றிய பேரா. கே.ஏ.குணசேகரனின் நாடகமான 'சத்திய சோதனை' பெண்ணிய நோக்கமுடையது. அவரின் 'பலி ஆடுகள்' என்னும் நாடகம் தலித்தியம் பற்றிப் பேசமுனைந்து, இறுதியில் பெண்ணியம் பற்றி அழுத்தமான விடயத்தை முன்நிறுத்துகின்ற நாடகம் ஆகும்.

ஈழத்து எழுத்தாளர்களும் தமது பங்களிப்பினை பெண்நிலை சார்ந்து முன்வைத்துள்ளனர். உலகம் முழுவதுமான பெண்ணிய சிந்தனை வளர்ச்சியில் ஈழத்து எழுத்தாளர்களின பங்கேற்பு என்பது முக்கியமானது. ஈழத்துத் தமிழரும், தமிழகத் தமிழரும் பண்பாட்டு ரீதியில் ஒத்திருந்தாலும், ஈழத்துத் தமிழர் இனப்பிரச்சினையால்

# பகிர்வோம்....



## ஈழமும் தமிழும்

காரைநகரில் வாழ்ந்த, ***கார்த்திகேயப் புலவர் (1819–1898)*** அவர்கள் ***திக்கைத் திரிபந்தாதி*** என்னும் நூலொன்றைப் பாடியுள்ளார். இவர் இருபாலை ***சேனாதிராயரிடமும் சி.வை. தாமோதரம்பிள்ளை***யிடமும் நெருங்கிப் பழகியவர் என அறியமுடிகின்றது.

ஒருசெய்யுளின் நான்கடிகளிலும் முதல் எழுத்து தவிர்ந்து இரண்டு முதலான ஏனைய பல எழுத்துக்கள் ஒத்துவரப் பாடுவது திரிபை (திருகல், திருக்கு) எனப்பெறும். திக்கைத் திரிபந்தாதி நூலானது ***திரிபை*** முறையிலும் ***அந்தாதி*** முறையிலும் 100 பாடல்கள் முருகக் கடவுள்மீது பாடப்பெற்றுள்ளது.

க**டம்பனை**, துற்குணர் எய்தற் கரியதோர் காங்கேயனை
**தடம்பனை**த் தும்பிக்கை யான்றன் சகோதரனை, தமியேன்
வி**டம்பனை**த்தும் கெடுத்து ஆண்டருள் திக்கை விமலன்றனை
இ**டம்பனை**, துத்தியம் செய்பவர் வானத்திமையவரே

***யமகம்*** அல்லது ***மடக்கு*** என்பது முதல் எழுத்து உட்பட ஏனைய பல எழுத்துக்கள் நான்கு அடிகளிலும் ஒத்துவரப் பாடப்பெற்றுப் பாடல் களாகும். பல யமக நூல்களையும் ஈழத்த வர்கள் பாடியுள்ளனர்.

பாதிக்கபட்டதன் விளைவாக பெண்களின் அவலம் அதிகமாகவே இருந்துள்ளது. ஈழத்து நவீன நாடகங்கள் காட்டும் பிரச்சினைகள் பொதுவான தமிழ்ப் பெண்களின் பிரச்சினை களாகவே விளங்குகின்ற அதே சமயம் இனப்பிரச்சினையால் பெண்கள் பட்ட வேதனை யை முன்நிறுத்தியதாகவே அமைந்துள்ளது. தொண்ணூறுகளில் ஆண்கள் (குழந்தை ம.சண்முகலிங்கம், பேரா.சி. மௌனகுரு) பெண்ணியம் தொடர்பான செல்நெறியில் கவனம் செலுத்தியவர்கள்.



குழந்தை ம. சண்முக லிங்கத்தின் 'மாதொரு பாகம்' 'தாயுமாய் நாயு மானார்' நாடகங்கள் பெண்நிலை வாதத்தினைக் கருவாகக் கொண்டவை. ' நாயெண்டால் பெட்டைக்கு மதிப்பில்லை... நாயிலும் அல்சேஷன் போல நல்ல இனம் என்றால் பெட்டைக்கு மதிப்பு, ஏனெண்டால் யாவாரம் பெருகும்' என்ற கருத்துக்கள் மிக முக்கியமானவை. "பெண்ணைப் பற்றிய கன கேள்வியளுக்கு மறு மொழி, இந்தச் சமூகத்தில் மட்டுமல்ல, வேறு சமூகத்தினாலும் கிடைக்குமோ தெரி யேல்ல.. பொம்பிளையள் இனியாவது குடும்பத்திலை, சமூகத்திலை உங்கடை உண்மையான நிலையை அறிஞ்சு கொள்ள முயற்சி செய்யுங்கோ" என்று குழந்தை ம. சண்முகலிங்கம் பெண்களின் உண்மையான நிலையை விளக்குகின்றார். பெண்களின், பெண்களுக்கான - பல கேள்விகளுக்கு இந்த சமூகத்தில் மட்டுமல்ல பல சமூகத்தில் விடையே இல்லை என்பதை உள்வைத்தே நாடகம் அமைந்தள்ளது.

மகாகவியின் 'புதியதொரு வீடு' குடும்ப நிறுவன மரபில் பெண்ணுக்கு ஏற்படும் சிக்கலை மையமிட்டதாக அமைகிறது. இறந்ததாக நம்பப்பட்ட கணவன் திரும்பும் பொழுது, இரண்டாம் கணவனோடு வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்ணுக்கு ஏற்படும் திகைப்பு, சமூகத்துக்கே ஒரு கேள்விக்குறியாகிறது.


திருமணம், குழந்தை, வசதியான வாழ்வு என்ற எதிர் பார்ப்புக்கள் மட்டுமுள்ள ஒரு சராசரிப்பெண், சமூக அநீதிகளை எதிர்க்கும் புரட்சிக்கு மாறுவதாக ஓர் உருமாற்றம் செய்கிறது நா.சுந்தரலிங்கத்தின் 'விழிப்பு' நாடகம்.


பேரா.சி.மௌனகுருவின் 'இராவணேசன்' - 'பெண்ணை வைத்தே ஆண்கள் போர் புரிந்தார்கள்' ஆண்கள் என்று பெண்நிலை கொண்டு இராவணேசன் முழுமைபெறுகின்றார். 'சக்தி பிறக்குது' என்னும் நாடகமும் பேராசி ரியரின் பெண்நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் மற்றுமொரு நாடகமாகும்.

மட்டக்களப்பில் இயங்கி வருகின்ற சூர்யா அபிவிருத்தி நிலையம் 'இது எமது படைப்பு' என்ற தலைப்பில் பெண்கள் தொடர்பான ஐந்து நாடகங்களை நூலுருவாக்கியுள்ளது. அத்துடன் அந்நிறுவனம் அரங்கேற்றும் நாடகங்களை ' பெண்' சஞ்சிகையில் வெளியிட்டு வருகின்றது. அத்துடன் தமிழகத்தின் நாடக நெறியாளரான அ.மங்கையை அழைத்து நாடகப் பட்டறை ஊடாக - 'பாரமுறி', 'மட்டுநகர்க் கண்ணகிகள்', 'நிசப்பத இரைச்சல்' என்பன பெண்ணிய நோக் கில் மேடை ஏற்றப்பட்ட நாடகங்கள் ஆகும்.

1970 களின் பின்னர் தமிழில் நவீன நாடகம் என்னும் எண்ணக்கரு முன்நிலைப்படுகின்றது. மேற்கத்திய அரங்கியலில் எக்காலத்தில் பெண்ணியம் பற்றிய கருத்து முதன்மை பெற ஆரம்பிக்கின்றதோ அதே சமகாலப்பகுதியில் தமிழகத்திலும் ஈழத்திலும் இக்கருத்தியல் முன்நிலை பெற ஆரம்பிக்கின்றது. மேற்கத்தைய பெண்ணியம் சார் நாடகங்கள் அதி தீவிரமான பெண்ணியமாக இருக்கும்போது தமிழகத்திலும் ஈழத்திலும் மிதவாதப்பெண்ணியமாகப் பார்க்கப்படும் தன்மை காணப்படுகின்றது. தமிழ்ப்பண்பாட்டுச் சூழல் நிலைக் கேற்ப தமிழ்ப் பெண்ணியம் சார் நாடகம் அமைந்துள்ளது.

❍❍❍





சிறுகதை

# அண்ணாவும் அக்காவும் (பிரியாவின் குமுறல்)




குடும்பத்தில் பெற்றோரின் பொறுப்பற்ற நடத்தைகளால் சிறுவர்கள் எவ்வாறு தடுமாறிப் போகிறார்கள் என்பதற்கு பிரியாவின் இந்த குமுறல் குறிப்புகள் ஓர் உதாரணம். வகுப்பில் பாட நேரத்தில் மாணவர்களிடம் உங்களுக்கு வாழ்வில் மகிழ்ச்சியையும் கவலையையும் தந்த விடயங்களைப் பற்றிச் சிறு குறிப்புகள் எழுதுக என்று கேட்டதற்கு அவள் தந்த குறிப்புகளிவை. அவள் என்ன கூறுகிறாளென்பதை நீங்களே வாசித்துத் தெரிந்து கொள்ளுங்கள். நான் குறுக்கே நிற்கவில்லை.

'அண்ணாவுக்கு என்மீது கொள்ளைப் பாசம். என்னைக் கண்ட இடத்தில் ஓடிவந்து கட்டியணைத்துக் கதைக்காமல் போகமாட்டான். அக்காவும் அப்படித்தான் என்னைக் கண்டால் ஓடிவந்து ஒரு முத்தமாவது தந்துவிட்டுத்தான் போவாள். எனக்கு இருவரோடும் இருக்கும் அந்த நெருக்கமான பாசத்தை நான் வெளியில் காட்டிக் கொள்வதில்லை.

நாங்கள் சந்திப்பது அரிது ஆனால் எப்படியும் ஒரு வருடத்தில் இரண்டு மூன்று தடவைகள் சந்திக்கச் சந்தர்ப்பங்கள் வாய்த்துவிடுவது என்னவோ கடவுள் தரும் சலுகையென்றுதான் கூறவேண்டும்.

அன்று அந்தத் திருமண வைபவத்தில் பல மாதங்களுக்குப் பிறகு அண்ணாவைச் சந்தித்தேன். ஓடிவந்து என்னை அணைத்துக் கொண்டான். அக்காவும் என்னை அணைக்க ஓடிவந்தாள். பின்னர் அண்ணாவைக் கண்டதும் ஒன்றும் பேசாமல் விலகிச் சென்று விட்டாள்.

ஏனோ தெரியாது அவர்கள் இருவருக்கிடையிலும் பெரிதாக பாசத்தை நான் காணவில்லை. அவர்கள் இருவரும் என்மீது காட்டும் அன்பு ஒன்றுக்கொன்று குறைந்ததேயில்லை. ஆனால் அவர்களுக்கிடையில் ஒரு ஒற்றுமைதான் வரமாட்டேன் என்கிறது. ஒற்றுமையில்லாவிட்டாலும் பரவாயில்லை, பகைமையாவது இல்லாமலிருக்கலாமல்லவா? அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்ப்பது கூட இல்லை. எனக்கு இதை எண்ணினால் சிலவேளைகளில் சரியான கவலைவரும். கண்கள் கலங்கும். அன்றும் அப்படித்தான் சற்றுக் கண் கலங்கிவிட்டேன். அதைக் கவனித்த அண்ணா கொஞ்சம் குழம்பிப் போய்விட்டான். ஏனழுகிறாய் உனக்கு என்மீது ஏதாவது கோபமா? என்று கேட்டான். என்னால் பதில் சொல்ல முடியவில்லை. அக்கா போன திசையையக் காட்டினேன். அவன் சிரித்துவிட்டுச் சரி பின்னப் போ! என்று என்னைப் போகவிட்டான். வா! அக்காவிடம் போவோம் என்று நான் அவனது கையைப் பிடித்து இழுத்தேன். அவன் தனக்கு ஏலாது என்று கூறிவிட்டான்.



எஸ். கருணானந்தராஜா

ஏன்தான் இவர்களுக்குள் இவ்வளவு அன்னியமான உணர்வோ தெரியாது. என் விடயத்தில் மட்டும் தங்கள் கௌரவங்களை மறந்து ஓடிவந்து என்னுடன் ஒட்டிக் கொள்கிறார்கள். ஆனால் தங்களுக்குள் கதைக் கவோ சிரிக்கவோ மாட்டார்கள்.

அக்காவிடம் நான் ஓடிச்சென்ற போது, அண்ணாவைத் திரும்பிப் பார்த்தேன். அவன் என்னையே பார்த்தபடி இருந்தான். அக்கா தனது தோழிகளுடன் கதைத்துப் பேசிச் சிரித்தபடியிருந்தாள். தூரத்தில் நான் வருவதைப் பார்த்ததும் என்னருகில் வந்து தன்னோடு கூட்டிப்போனாள். தன் தோழிகளிடம் என்னைத் தனது தங்கையென்று அறிமுகம் செய்தாள். அண்ணாவை அவர்கள் காட்டி விசாரித்த போது சிரித்து மழுப்பிவிட்டாள். அவன் எனது அண்ணாதானே! உடனே நான் அவன் எனது அண்ணா என்று அவர்களிடம் கூற, அக்கா அதைக்கேட்டுவிட்டு ஒன்றும் பேசாமலிருந்தாள். நான் அவளது முகத்தை உற்றுப் பார்த்தேன். அவளுக்கு நான் அப்படிக் கூறியது பிடிக்கவில்லை போல இருந்தது. சங்கடப்பட்டாள். பிறகு சுதாரித்துக் கொண்டாள்.

அண்ணாவின் போக்கிலும் அக்காவின் போக்கிலும் இருக்கும் இந்த வினோத மனப்பான்மை எனக்குப் புரிவதேயில்லை. அண்ணாவும் அக்காவும் எங்கள் வீட்டில் வாழாது ஏன் தனியாகப் போய்விட்டார்கள். ஏன் அவர்களிருவரும் என்னோடு ஒன்றாக இருக்கவில்லையென்ற கேள்விகளெல்லா மெழும். யோசித்து விட்டுப் பேசாமலிருந்து விடுவேன்.

என்னால் இனியும் பொறுக்க முடியாது. நான் நெடுக சின்னக் குழந்தையல்ல. எப்படி யாவது நான் அண்ணாவையும் அக்காவையும் ஒன்று சேர்த்து வைக்க வேண்டும். என்னோ டுள்ள அன்பினாலாவது அவர்கள் ஒன்று சேர்வார் களென்ற நம்பிக்கையிருக்கிறது. எனெனில் அவர்களிருவரிலும் ஓடுவது எனது இரத்த மல்லவா?

எல்லாவற்றிற்கும் முன், என்னைச் சுற்றிப் பின்னப்பட்டிருக்கும் இந்தச் சிக்கல் நிறைந்த மர்மங்களுக்கு நான் விடைதேடியாக வேண்டும். என்ன செய்வது? யாரிடம் பேசுவது? அப்பாவிடமா? அம்மாவிடமா? ஒன்றும் புரிய வில்லையே!

அப்பாவும் அம்மாவும் வேலைவிட்டு வரும்போது நான் எனது பள்ளிக்கூட வேலை களைச் செய்து கொண்டிருப்பேன். வந்ததும் சாப்பாட்டைத் தந்து தூங்க அனுப்பிவிடுவார்கள். இதுதான் அன்றாடம் நடப்பது. விடுமுறை நாட்களில் எங்காவது போவோம் அங்கே பிறர் மத்தியில் இதைப்பற்றியெல்லாம் நான் என் பெற்றோர்களுடன் விவாதிப்பதில்லை.

அப்பாவோ அம்மாவோ எங்கள் மூவரை யும் சந்திக்க விடாமல் தடுத்ததில்லை. அடிக்கடி நாங்கள் சந்தித்துத்தான் வந்தோம். தற்போதுதான் அந்தச் சந்திப்புகள் குறைந்து விட்டன.

சிறு கைக்குழந்தையாகவிருந்த போதிலி ருந்தே நான் அண்ணாவையும் அக்கா வையும் சந்தித்து அவர்களோடு விளையாடி யுமிருக்கிறேன். ஆனால் எனது வீட்டிற்கு அவர்கள் வருவதில்லை. எங்காவது வெளியி டத்திற்தான் நாங்கள் சந்திப்போம். அவை பெரும்பாலும் பல சிறுவர்கள் வந்து தங்கள் பெற்றோரைச் சந்திக்குமிடங்களாகவே யிருக்கும். 0

அம்மாவுடன் போகும் போதெல்லாம் நான் அக்காவைச் சந்திப்பேன். அம்மா அக்காவைக் கட்டியணைத்து அழுவா. இதுதான் உன் தங்கச்சியென்று அக்காவிடம் சொல்லிச் சொல்லி எங்களிருவரிடமும் பாசத்தை மூட்டிவிட்டது அம்மாதான். தற்போது அந்தச் சந்திப்புகள் நடப்பதில்லை. எங்காவது உறவினர்களின் பாட்டிகளிற்தான் நாங்கள் சந்திப்போம். ஆனாலும் அக்காவுக்கு என்னோடுள்ள பாசம் போகவில்லை.

அண்ணாவைச் சந்திக்கப் போகும்போது அம்மா வரமாட்டா. அப்பா என்னை மட்டும் கூட்டிப் போவார். அங்கும் இப்படித்தான். அண்ணாவும் நானும் ஒன்றாய்ச் சேர்ந்து விளையாடுவோம். எங்களோடு வேறு பிள்ளைகளும் வந்து அந்த சென்ரறில் தங்கள் தங்கள் தாய் தந்தையர்களைச் சந்திக்க இருப்பார்கள். அவர்களும் எங்களுடன் சேர்ந்து விளையாடுவார்கள். எங்களைக் கண் காணிக்க அங்கு சிலர் இருப்பார்கள். அண்ணா வுக்கு என்னோடு பாசமதிகம். மற்றப் பிள்ளை கள் என்னை மிரட்டித் துன்புறுத்தாமல் கண்கா ணித்தபடி என்னோடு கூடவேயிருப்பான். அப்பா வாங்கிக்கொண்டு வரும்சாப்பாடுகளை நானும் அண்ணாவும் பிரித்துச் சாப்பிடுவோம்.

பெரும்பாலும் ஒவ்வொரு மாதமும் நான் சிறுகுழந்தையாக இருந்த போதிலிருந்தே

அண்ணாவையும் அக்காவையும் தவறாமல் தனித்தனியாகச் சந்தித்து வந்திருக்கிறேன். அதனால் அவர்களிருவரோடும் எனக்கு நல்ல நட்பிருந்தது. ஆனால் அண்ணாவும் அக்காவும் ஒருபோதும் நானறியச் சந்தித்துக் கொண்ட தில்லை. தற்போது அவர்கள் புத்தி பிடிபட்ட பெரியவர்களாகி விட்டார்கள். அவர்களை விட நாலைந்து வயது சிறியவளானாலும் நானும் இப்போது பெரியவள்தான். ஆனால் அவர்களிருவரும் சமவயதுக்காரர்கள்.

எனது அம்மாவும் அப்பாவும் என்னைப் பாசத்தோடு பார்த்தாலும், அண்ணாவோடும் அக்காவோடும் சேர்ந்து ஒன்றாக வாழவிடாமல் என்னை ஏன் பிரித்து வைத்திருக்கிறார்கள் என்பது எனக்குப் புரியவேயில்லை. அவர்களி ருவருக்கும் பிறகுதான் நான் பிறந்தேன். ஆனால் எனக்கு அவர்களோடு ஒன்றாய் வாழக் கொடுத்து வைக்கவில்லை. எப்படியாவது இந்த மர்மங்களுக்கு விடைகாண வேண்டுமென்ற ஆசை வளர்ந்து கொண்டே வந்தது.

சந்தர்ப்பம் ஒருநாள் வந்தது. பழைய போட்டோ அல்பங்களை நான் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்த போது அம்மாவும் கூட இருந்தா. அதில் அம்மாவுடன் கூட இருப்பது யார்? ஒரு கைக் குழந்தையுடன்! அம்மாவைக் கேட்டேன். அம்மா சொன்னா 'அதுதான் உன் அக்கா'. அப்படியானால் அந்த அங்கிள்? கேட்டேன். அம்மா சொன்னா அது உன் அக்காவின் அப்பா.

எனக்குப் புரியவில்லை. நான் அறிந்த வரை அவள் என் அக்கா என்றுதான் எனக்குத் தெரியும். அவளுக்கு வேறாக ஒரு அப்பா இருக்கிறாரா. அப்படியானால் எனது அப்பா! அதையும் அம்மாவிடம் கேட்டேன்.

அவ சொன்னா'அவர்தான் உன் அண்ணா வின் அப்பா!'. எனக்கு மேலும் குழப்பமாகப் போய்விட்டது.

அப்படியானால் நீ யாரம்மா? 'நான்தான் உன்னுடைய அம்மா.' அம்மா சொன்னா.

சரி இந்தச் சிக்கலை அம்மாவைவிட அப்பாதான் தெளிவாகத் தீர்த்து வைப்பாரென்று எண்ணியபடி அதை அத்தோடு நிறுத்தி விட்டேன்.

அம்மா இல்லாத சமயமாகப் பார்த்து அப்பாவின் அலுமாரியைக் குடைந்தபோது அங்கும் ஒரு அல்பம் கிடைத்தது. அதிலும் அப்படித்தான். அப்பாவோடு வேறு ஒரு பெண்ணும் குழந்தையும்.

அப்பாவிடம் கொண்டுபோய்க் காட்டி அது யாரப்பா என்று கேட்டபோது அவர் சொன்னார் 'அதுதான் உனது அண்ணாவின் அம்மா'.

ஓகோ! எனக்கு இப்போது புரிந்து விட்டது. நான் மேற்கொண்டு எதுவும் கேட்கவில்லை. கேட்கத் தேவையில்லை.' ஆனால் என்னால் அழாமலிருக்க முடியவில்லை. கண்கலங்கி அழுதேன்.

அப்பா, 'வட் மகள்! வை? என்றார். நான் அப்பாவின் மார்பில் சாய்ந்தபடி விம்மியழுதேன், 'அப்பா நான் அண்ணாவுடனும் அக்காவுடனும் ஒன்றாக வாழ வேண்டுமப்பா பிளீஸ்.' என்றேன். படீரென்று கதவைத் திறந்த படி அம்மா உள்ளே வந்தாள். 'வட் டார்லிங், ஏன் பிரியா அழுகிறா?' என்று அப்பாவிடம் கேட்டாள்.

அப்பா ஆங்கிலத்தில் 'Our child is adamant to live with your daughter and my son.' (நமது பிள்ளை உனது மகளோடும் எனது மகனோடும் ஒன்றாக வாழ வேண்டுமென்று அடம்பிடிக்கிறாளென்றார்).

அம்மா சற்று நேரம் திகைத்துப்போய் ஒன்றும் பேசாமல் நின்றாள்.

எனக்குப் புரிந்தது, அதை அம்மாவும் அப்பாவும் எனக்காகச் செய்யமாட்டார்கள், அவர்களால் அது முடியவும் முடியாது என்று, ஆனாலும் என்னால் அழுகையை நிறுத்த முடியவில்லை. அழுதேன். இப்போதும், சில வேளைகளில் அழுதுகொண்டுதானிருக்கிறேன்.'

என்னைப்போல தங்கள் சகோதரர்களுடன் சேர்ந்து வாழ முடியாத சிறுவர் சிறுமிகள் இவ்வுலகில் அனேகருண்டு, அவர்களது வேதனைகளைக் கருத்திலெடுங்கள் அன்பான பெற்றோர்களே!

இப்படிக்குப் பிரியா.

❍❍❍

## பகிர்வோம்....

ஈழமும் தமிழும்



***சுப்பிரமணியப்பிள்ளை*** என்பவர் யாழ்ப்பாணத்து மானிப்பாய் ஊரைச் சேர்ந்தவர். இவர் ***பதார்த்த விஞ்ஞானம்*** (1887), ***பால வைத்தியம்*** (1889), ***பிரசவ வைத்தியம்*** (1892) ஆகிய நூல்களை எழுதியுள் ளார் என அறியமுடிகின்றது.



ச.முருகானந்தன்

# மெல்லத் தமிழ் இனி சாகுமா?

அடுத்து ஐம்பது ஆண்டுகளில் அழிந்து போகக் கூடிய மொழிகளில் ஒன்றாக எமது தாய் மொழியாம் தமிழையும் சிலர் குறிப்பிடுவதுண்டு. அவ்வாறான சாத்தியக்கூறு உள்ளதா என்பது பற்றி நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். சிலர் குறிப்பிடுவது போல் தமிழ்மொழி அவ்வளவு சீக்கிரமாக அழிந்துவிடாது என இன்னும் சிலர் வாதிடுவதுண்டு. எனினும் தமிழ்மொழி மிக மெதுவாக இறங்கு முகமாக அழிவுப்பாதையில் பயணிப்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டியுள்ளது. எனவே அழிவுப் பாதையில் அடியெடுத்து வைத்துள்ள தமிழ்மொழியைப் பாதுகாத்துக் கொள்வது தமிழராகிய நமது ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

□சிதையா உண் சீரிழமைத் திறம்□ என மனோன்மணியம் பெ. சுந்தரம்பிள்ளை வியந்து போற்றிய தமிழ், உலகின் மூத்த மொழிகளில் ஒன்றானது என்பதால் அது முதுமையை எட்டி விட்டதோ என்ற கேள்வி எழுகிறது. முதுமையில் மரணம் நிச்சயம் என்பது உயிரினங்களுக்கு மட்டுமே பொருந்தும். மொழிக்கு அது பொருந்தாது. ஆன்மாவைப் போல மொழியை அழியாத ஒன்றாகப் பாதுகாக்க முடியும். இது அம்மொழியைப் பேசும் இனத்தவரின் கைகளிலேயே தங்கியுள்ளது. இன்று தமிழ்மொழி உலகின் பலநாடுகளில் பரந்து இருக்கின்ற போதிலும் அங்கெல்லாம் அது வாழுமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. தமிழ்மொழியும் தமிழ்ப்பண்பாடும், தமிழர் கலாசாரமும் அழிந்து விடுமா என்ற அச்சமும் கேள்வியும் புலம் பெயர்நாடுகளில் உள்ள தமிழர்கள் மத்தியில் ஒருபடி அதிகமாக மேலோங்கியுள்ளது. இந்தியாவிலேயே தமிழர்கள் அதிகம் வாழ்கின்றார்கள். இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், முதலான நாடுகளில் கணிசமான தமிழர்கள் வாழ்கின்றார்கள். இவர்கள் கூட தமது தாய்மொழியான தமிழ் காலப்போக்கில் குன்றி அழிந்து விடுமா என்ற அச்சம் கொண்டவர்களாக சலித்துக் கொள்கிறார்கள். தமிழைக் காக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றனர்.

உலகின் பல மொழிகள் அழிந்து வருகின்றபோது மொழிப் பல்வகையையும் அழிகின்றது. இதனால் பெறுமதி மிக்க பண்பாட்டு வளத்தை மனித குலம் இழந்து வருகின்றது. மொழியும் அவ்இனக்குழுமத்தின் பண்பாடும் பின்னிப் பிணைந்தவையாகவே இருக்கின்றது. மொழியியலும், மானிடவியலும் மொழி மற்றும் பண்பாட்டுடன் இணைந்த கூறுகளாக உள்ளன.

பிறமொழிகளின் ஆதிக்கம் காரணமாக தமிழ்மொழி அழிந்து விடுமா? தமிழ்ப்பண்பாடு அழிந்துவிடுமா? என்ற கேள்வி உலகளாவிய தமிழர்கள் மத்தியில் எழுந்துள்ள இன்றைய காலகட்டத்தில் தமிழ்மொழியையும், பண் பாட்டையும் பாதுகாப்பது தமிழர்களின் கைகளிலேயே உள்ளது. இன உணர்வை பேரினவாதிகள் தமக்கு மட்டுமானதாகவே நோக்குகின்றனர். இனப்பற்றுடன் உரிமை கோரும் சிறுபான்மையினரை இனவாதிகளாகச் சித்தரிக்கும் இனப்பேரினவாதிகளால் தமிழ் மொழி தமது தாயகத்திற்கு உள்ளேயே அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றது. மொழி தொடர்பாடலுக்கான ஒரு கருவியாகும். இருமொழிச் சூழலில் அல்லது பலமொழிச் சூழலில் வாழும் மனிதர்களில் சிறுபான்மை யினர் பல நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை உள்ளது. அதிலும் சிறுபான்மையினரின் மொழியுரிமை புறக் கணிக்கப்பட்டு பேரினமொழி ஆட்சி மொழி யாகவோ ஆக்கிரமிப்பு மொழியாகவோ இருக்கும் நிலையில் சிறுபான்மைமொழி அழிவுத் திசைக்கு நகர்த்தப்படுகின்றது. இந்த நிலையில் மொழிப்பற்றும் இனப்பற்றும், சாதுரியமான அணுகுமுறையும் அவசியமானது. எம்மில் பலர் உணர்வுத் திறனற்றவர்களாக இன்று வாழ்கின்றோம். ஏனோ தானோ என்ற

போக்கு இன்னும் சிலரிடம் இருக்கின்றது. இதற்கு ஒருபடிமேலாக ஆதிக்க மொழியில் நாட்டம் கொள்வோரும் உண்டு.

இலங்கை அந்நியர் படையெடுப்பின் முன்னதாக விஜயனின் வரவுடனேயே தமிழ் சிதைவடையத் தொடங்கியது. தனது தூய்மையை இழந்து கலப்பு மொழியாக தமிழ் மெல்ல மெல்ல மாறத் தொடங்கிவிட்டது. இந்தியாவைப் பொறுத்தவரை மதரீதியாக வடமொழிக் கலப்பு தமிழில் ஏற்பட்டது. பின்னர் அண்மைய வரலாற்றுப் படையெடுப்புகள் மூலம் வந்த போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் மூலமாக தமிழில் மேலதிக கலப்புக்கள் நிகழ்ந்தன. எனினும் தமிழ் தனித்துவமான ஒரு மொழியாக இருந்தமையால் தமிழை இக்கலப்புகளினால் அழிக்க முடியவில்லை. புதியன புகுதலும், பழையன கழிதலுமாக சில மாற்றங்களுடன் தமிழ் தப்பிப் பிழைத்தது எனலாம்.

ஆங்கிலம் சர்வதேச மொழியாகிய பின்னர் பலநாடுகளில் ஆங்கிலமொழி பரவலானது. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தேசிய மொழிகள் பின்தள்ளப்பட்டு ஆங்கில மொழியே அரசகரும மொழியானது. அரச உத்தியோகம் பெறவேண்டுமாயின் ஆங்கில மொழியில் தேர்ச்சி அவசியமானமையால் பலர் ஆங்கிலத்தைக் கற்றனர். எனினும் தாய் மொழிக் கல்வியை எம்மவர் தொடர்ந்தனர். ஆங்கிலேயர் ஆட்சியில் தமிழ் மொழியில் கலப்பு ஏற்பட்டாலும் தமிழ் தன் தனித்துவத்தைக் காத்துக் கொண்டது. பேச்சு மொழியில் ஆங்கிலச் சொற்கள் கலப்புற்று தூய சில தமிழ்ச்சொற்களின் பாவனை குறைந்தது. உதாரணமாக ரீச்சர், ஸ்கூல், போன்ற பல சொற்கள் பேச்சு மொழியைத் தாண்டி எழுத்திலும் புகுந்தன. இவ்வாறான பல கலப்புகள் தமிழை ஊடுருவினாலும் கூட பெரும்பாலும் பெயர்ச்சொற்களிலேயே இம்மாற்றங்கள் ஊடுருவின. இதனால் அடிப்படையில் தமிழ் மொழிக்கான பண்பு காப்பாற்றப்பட்டது. எனினும் சுதந்திரம் பெற்ற இலங்கையில் சிங்களக் கலப்பு ஒருபுறமும், ஆங்கிலமொழி மறுபுறமுமாக தமிழை ஆக்கிரமித்தன. சிங்களப் பிரதேசங்களில் வாழ்ந்த கணிசமான கிறிஸ்தவர்கள் பல்வேறு திட்டமிட்ட நெருக்கடிகள் காரணமாக சிங்களமொழியில் கற்க ஆரம்பித்தனர். கடந்த அரைநூற்றாண்டில் இப்பிரதேசங்களில் இருந்து தமிழ்மொழி துடைத்தெறியப்பட்டது. இவர்களது அடுத்த தலைமுறையினர் தம்மொழியை சிங்களமாகவே தேர்ந்தெடுக்கும் நிலை ஏற்பட்டது.

இஸ்லாமியரைப் பொறுத்தவரை இலங்கையில் அவர்கள் தமிழ்மொழியைப் பேசுபவர்களாக இருந்தாலும் மதம் சார்ந்த மொழியையே தமது மொழி என சிலர் குறிப்பிட்டனர். கிழக்கு இலங்கை முஸ்லிம்கள் தமிழை தமது தாய்மொழியாகவே போற்றியது மட்டுமன்றி தமிழை வளர்ப்பதிலும் காப்பதிலும் தமிழராகவே செயற்பட்டு வந்தனர். தமது கல்வி மொழியை தமிழாகவே தொடர்ந்து பேணிவருகின்றனர். ஆங்கிலத்தை ஒரு சர்வதேச மொழி என்றவகையில் கற்கின்றனர்.

தாய்மொழி மூலமான கல்வி கட்டாயமானது என அரசியலமைப்பில் சேர்க்கப்பட்ட பின்னர் தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளிலேயே கற்கும் கட்டாயம் ஏற்பட்டது. இதனால் தமிழர்கள் தமிழ் மொழியில் ஆரம்பக்கல்வியை மேற்கொண்டபோது தனிச் சிங்கள ஆட்சிமொழி அவர்களை பெரிதும் பாதித்தது. சிங்களத்தை கட்டாயமாக படிக்கும் நிலை, குறிப்பாக அரசபணிசெய்வோருக்கு ஏற்பட்டது. சிங்களவருக்கு இந்த மாதிரி தமிழ் படிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படவில்லை. இஸ்லாமியர்களைப் பொறுத்தவரை கிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் வாழ்பவர்களில் சிலர் சிங்களமொழி மூலம் தமது கல்வியை ஆரம்பித்தனர்.

தாய்மொழி மூலமான கல்வி கட்டாயம் என்ற நிலைமாற்றப்பட்ட பின்னர் சர்வதேச பாடசாலைகளின் வரவு ஆங்கிலமொழி மூலமான ஆரம்பக் கல்வியை தொடங்கும் சாத்தியத்தை ஏற்படுத்தியது. இந்த நிலையில் வெளி மாவட்டத் தமிழர்கள், முஸ்லிம்கள் தமது பிள்ளைகளை சர்வதேச பாடசா லைகளில் அனுமதித்து ஆரம்பக் கல்வி தொடக்கம் ஆங்கில மொழிமூலமான கல்வியை தொடர்கின்ற நிலையை ஏற்படுத்தியது. பணவசதி படைத்த வர்கள் மாத்திரமன்றி நடுத்தர வர்க்கத்தில் உள்ளோரில் ஒரு பகுதி யினரும் கூட தமது பிள்ளைகளை ஆங்கிலமொழி மூலம் கற்பிக்கும் நிலையை காணமுடிகின்றது. இது காலவரை இலவசக் கல்வியை அனுபவித்து வரும் இலங்கையரில் சிலர் இதனால் அந்த வாய்ப்பை இழக்கின்றனர். ஆங்கில மொழிமீதான மாயை இதற்கு வித்திட்டுள்ளது.

உலகில் எட்டுக்கோடி தமிழர்கள் வாழும் இந்தியாவிலும் ஆங்கிலக் கல்வி

மோகமும் இந்திமொழித் திணிப்பும் தமிழுக்கு சவாலாக உள்ளது. ஒரு இனக்குழுமத்தின் பிள்ளைகள் ஆரம்பக் கல்வியை தமது தாய்மொழியிலேயே கற்கின்றநிலை பேணப்படும் போதுதான் அம்மொழி வளர்ச்சி பெறும். இன்னொருபுறம் அழியாதிருக்கும். தாய்மொழியில் தமது கல்வியைக் கற்காமல் பிறமொழிகளில் கற்கும்போது அம்மொழி அழிவுப் பாதையில் செல்லும். காலப்போக்கில் அம்மொழியும் அவ்வினத்தின் பண்பாடுகளும் மாற்றமடையும்.

ஈழத் தமிழர்களைப் பொறுத்த வரை இன ஒடுக்குமுறையும், ஆக்கிரமிப்பு யுத்தமும் அதனால் ஏற்பட்ட புலப்பெயர்வும் தமிழ் மொழி மீது பல்வேறு அழுத்தங்களைப் பிரயோகித்துள்ளன. ஈழத்தமிழர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் மேற்கு நாடுகளுக்கும், அவுஸ்திரேலியாவுக்கும், கனடாவுக்கும் என புலம் பெயர்ந்துள்ளனர். இலட்சக் கணக்கில் முப்பது ஆண்டு போரில் இறந்துவிட்டனர். புலம்பெயர் நாடுகளுக்கு சென்ற எம்மவரில் கணிசமானோர் தாய்மொழி மீது பற்றுக் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். எனினும் தமது அடுத்த தலைமுறையினரில் கல்வியை பிற மொழியில் தொடங்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளார்கள். இப்போது உள்ள பெற்றோர் தமிழை ஒரு பாடமாக கற்பிக்கின்றனர். எனினும் அடுத்த தலைமுறையினருக்கு இந்த மனப்போக்கு நீடிக்கும் என்று சொல்லமுடியாது. இன்று எமது புலம் பெயர் இலக்கியங்கள் தமிழில் வெளிவரும் நிலைமாறி அவ்வவ்நாட்டு மொழிகளிலேயே வெளிவரும் சாத்தியமுண்டு.

இன்று தமிழை வீட்டுமொழியாக புலம்பெயர் நாடுகளிலுள்ளவர்கள் பேசுகின்றனர். இந்த தலைமுறையினரின் மறைவுடன் வீட்டு மொழியாகப் பேசும் நிலையிலும் மாற்றம் ஏற்படும். ஓரிரு தலைமுறைகளின் பின்னர் வீட்டுமொழியாக அந்த நாட்டு மொழியே வந்துவிடும். இந்தக் கால கட்டத்தில் அந்தத் தலைமுறையினர் மத்தியிலிருந்து தாய்மொழி அழிந்துவிடும். புலம்பெயர் நாடுகளிலுள்ளவர்களில் கணிச மானோர் தமிழ்மொழியைப் பாதுகாக்க வேண்டுமென்பதில் தீவிரமாக உள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது.

## “வாள்” பெற்ற பெருவாழ்வு !...

"வாள்" பெற்ற பெருவாழ்வு !......
ஆண்டவன் கையில் ஆயுதமாய் இலங்குகையில்
ஆணவம் கொன்றேன் அசுரரை வென்றேன்!....

புவியாண்ட மன்னர் உறையகத்து உறைந்தகாலை
புகழ்மாந்தி மன்னர் தலைக்கனம் ஏறவைத்தேன்!....

இனவெறியர் கையில் இசைந்திருந்த நாளில்
நிணங்குருதி சொட்டப் பிணங்குவித்தேன் பாரில்!....

நிசமில்லாக் "ஹீரோ"க் கரம் பற்றும்போதில்
விசமூட்டிப் பிஞ்சு மனவன்மம் வளர்த்தேன்!....

"ஆவாவின்" கையில் நானேறியமர்ந்த நாளாய்
யாரை விட்டேன்நான் ஊரை உறையவைத்தேன்!.....

பீதிகொடுத்தேன். பிஞ்சுகளைக் கொன்றொழித்தேன்.
நாதியிலா நலிந்தோரை நாணமின்றித் தோற்கடித்தேன்.
பாதிவழி போகமுன்னர் பறித்தேன் யௌவனத்தை.
புகைபோதை துணையோடு புகழோங்கி நான் நிமிர்ந்தேன்!....

கோதில்விழுச் செல்வமெல்லாம் கொன்றே யொழித்திட்டேன்
கொலை கொள்ளை வரைசெல்லும் "கொலு"வதனை நான்கொடுத்தேன்
நிலைமாறு காலத்தின் நிம்மதியை நான் தொலைத்தேன்
நிலைமாற வேண்டுமென்றால் "கடவுள்" என்னைக் காவவேண்டும்!......

அசுரரை அழிப்பதொன்றும் அவ்வளவு சுலபமில்லை
கடவுளே கவனம்!... என் துணையின்றித் திரியாதீர்!....

– "சத்திராதி"

தமிழ்மொழி இந்த நூற்றாண்டுக்குள் அழிந்துவிடுமா?

உலகிலே ஏறத்தாழ 6000 மொழிகள் பேசப்படுகின்றன. இவற்றில் தொண்ணூறு வீதமான மொழிகள் இந்த நூற்றாண்டு நடுப்பகுதியளவில் அழிந்துவிடக்கூடிய சாத்தியம் உள்ளதாகச் சில மொழியியலாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். மொழியோடு சேர்ந்து பண்பாடும் அழிந்துவிடும். புலம்பெயர் தமிழர்களிடையே தமிழ்மொழி அழிந்துவிடுமோ என்ற அச்ச உணர்வு அதிகமிருக்கின்றது.

இன்று உலக மொழிகளில் 600 மொழிகள் பாதுகாப்பாக உள்ளன என்று ஆய்வுகள் கூறுகின்றன. இவற்றில் கடைசி வரிசையிலாவது தமிழுக்கும் இடமிருப்பது ஆறுதலளிக்கிறது. எனவே தமிழ்மொழி இந்த நூற்றாண்டுக்குள் அழிந்துவிடும் என்று அஞ்சத் தேவையில்லை. எனினும் தமிழர்கள் தமது மொழியை அழிய விடாமலிருப்பதில் அக்கறை செலுத்த வேண்டும். தமிழர்களுக்கென்று ஒரு நாடு இல்லாத நிலையில் தமிழை அழிவிலிருந்து மீட்பது மக்களின் தலையாய கடமையாகும். மொழி அழிந்துவிட்டால் இனமுமில்லை. பண்பாடுமில்லை. மொறீசியஸ் தமிழரைப் போன்று பெயரடையாளம் கூட இல்லாது போய்விடும்.

உலகமயமாதலும் நவீன இலத்திரனியல் ஊடகங்களின் வரவும் மொழியின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. தமிழ் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், தமிழ் சினிமா என்பன ஓரளவு தமிழைக் காப்பதாக சொல்லப்பட்டாலும் மறுபுறம் தமிழைக் கலப்பு மொழியாக்கி அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்வதையும் மறுக்க முடியாது. தமிழ் இலக்கியங்கள், இலக்கிய சஞ்சிகைகள், எழுத்துருவாக்கங்கள் தமிழுக்கு ஊட்டமளித்து வருகின்றன. தமிழில் வாசிப்புப் பழக்கம் ஏறுமுகமாகச் செல்ல வேண்டும். தொலைக்காட்சிகளில் தொலைக்கும் நேரத்தில் ஒரு பகுதியை வாசிப்புக்கும் கொடுக்க வேண்டும். முக்கியமாக தமது பிள்ளைகளின் ஆரம்பக்கல்வியை தமிழில் தொடங்க வேண்டும்.

○○○

# தமிழ் என்றும் எங்கும் வாழும்!

இணுவை இரகு



எனது பால்ய காலத்து பள்ளி நண்பன் ராஜநாயகம் நீண்ட காலத்தின்பின்,ஏறத்தாழ பதினாறு வருடங்களுக்குப்பின் இங்கிலாந்திலிருந்து தனது குடும்பத்துடன் மனைவி, ஒரு மகள், ஒருமகன் சகிதம் வருகைதந்து வெள்ளவத்தை மரைன் டிரைவிலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்ததாகக் கேள்விப்பட்டு அவனுக்குப்பிடித்த உழுந்து வடை, சம்பல், முறுக்கு வாங்கிக்கொண்டு அவர்களைச் சந்திக்கச் சென்றேன்.

கண்டதும் “அடே இரகு!” என்று இறுகக் கட்டிக் கொண்டான். பெரிய மாறுதல் இல்லை., சற்றுக்கொழுத்திருந்தான். தலை மயிருக்கும் தாடிக்கும் ‘டை’அடித்திருந்தான் போலும்.

மனைவி, மக்களை அறிமுகம் செய்துவைத்தான். பரஸ்பரம் சுகம் விசாரித்த பின், அவனது எட்டு வயதான மகனுடன் கதைக்க ஆரம்பித்தேன். அப்போதுதான்பிரச்சினை ஆரம்பமானது. “குட் மோர்ணிங், எப்படி ஸ்ரீலங்கா? என்ன கிறேட் படிக்கிறீர்கள்?” எனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் கதைத்தேன்-தட்டுத்தடுமாறி.

அந்தப் பையன் போட்டானே ஒரு போடு!


“வணக்கம் அங்கிள்? எனக்கு நல்லா தமிழ் தெரியும்., விளங்கும்!

நீங்கள் தமிழிலேயே என்னுடனும் தங்கையுடனும் கதைக்கலாம்.

தங்கச்சி தேவாரம் கூடப் பாடுவாள், எனக்கு சில திருக்குறளும் தெரியும்” என்றானே பார்க்கலாம்!

நான் வெட்கப்பட்டு விக்கித்து நின்றேன்! என்றாலும் மனதில் நிம்மதியும் உறுதியும்! மெல்லத் தமிழ் இனிச்சாகாது!

எமது தமிழ் என்றும் எங்கும் நிலைத்து வாழும்!




# பள்ளிச் சிறுமியின் பருவச்சுமை - அண்டனூர் சுராவின் 'கொங்கை' நாவலை முன்வைத்து.



தமிழர் பாரம்பரியத்தில் ஒரு பெண் பூப்பெய்தி விட்டால், அதை ஒரு சடங்காக 'சாமர்த்தியவீடு' என்னும் பெயரில் கொண்டாடிவிடுவார்கள். புலம்பெயர்ந்த நாடுகளில் இன்னும் சிலர் அதற்குப் பெரிய விழாவே எடுத்துவிடுவார்கள். பெண்ணைக் ஹெலிகொப்டரில் ஏற்றிஇறக்கி, பெரிய அரியணையில்மேளதாளங்களுடன் சுமந்துவந்து தாலாட்டிவிடுகின்றார்கள். ஒருமுறை சிட்னிநகரில் எனது நண்பர் ஒருவரின் பிள்ளையின் சாமர்த்திய வீட்டிற்கு மெல்பேர்ண் நகரில் இருக்கும் நானும் மனைவியும் வேலையில் விடுப்பு எடுத்துக்கொண்டு போனபோது, வேலைத்தலத்தில் அதை விளங்கப்படுத்தப் பட்டபாடு சொல்லிமாளாது. இதற்குச் சடங்கா? எங்கள் நாட்டில் பண்பாட்டில் இது இல்லையே எனப்பலர் சொன்னார்கள். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனால் ஒருசில நாடுகளில் பெண் பருவமெய்திவிட்டால் அவர்களின் வீட்டுவாசலில் கொடிகட்டிப்பறக்க விடுவார்கள் என்றும் கேள்விப்பட்டிருக்கின்றேன்.

இது ஒருபுறமிருக்க, சமீபத்தில், அவுஸ்திரேலியாவில் எனது இன்னொரு நண்பரின் பெண் எட்டுவயதிலேயே பெரியவளாகிவிட்டாள். மகிழ்ச்சி கொள்ளவேண்டிய தந்தை பெரும் துயரத்திற்கு உள்ளானார். மிகவும் சிறியவயதிலே-பேதைப்பருவத்திலே-இது நடந்தமைக்கு யார் என்ன செய்யமுடியும். அவர் காதும்காதும் வைத்ததுமாப்போல் நாலுபேருடன் சடங்கை முடித்துவிட்டார்.

இனி 'கொங்கை' நாவலுக்கு வருவோம். புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த அண்டனூர்சுரா (சு.இராஜமாணிக்கம்) இதை எழுதியிருக்கின்றார். 'காக்கைச் சிறகினிலே' இதழ் நடத்திய கி.பி.அரவிந்தன் நினைவுக் குறுநாவல் போட்டியில் முதல்பரிசுபெற்றது. 'கொங்கை' நாவல் நாஞ்செலிக்கு (நங்கேலி) சமர்ப்பணமாகின்றது. யார் இந்த நாஞ்செலி? மார்பை துணிகொண்டு மறைக்கவிரும்பும் ஒடுக்கப்பட்ட சாதிப்பெண்கள்அதற்கென்று வரிகட்டும் கொடுமையை எதிர்த்து, மார்புகளை அறுத்து, வாழைஇலையில் வைத்து திரு விதாங்கூர் சமஸ்தான மன்னனுக்குக் கொடுத்து அனுப்பியவள் நாஞ்செலி.

இங்கே 'கொங்கை' நாவலிலும் இதேகதை தான். மிகவும் சிறிய வயதிலே--ஒன்பது வயதில்---பெரியவளாகி விடுகின்றாள் விமலா. அவளே நாவலின் கதைசொல்லி. விமலா தாய் இல்லாதபெண். விமலாவின் கொங்கைகள் பருத்து அவளுக்கு அதுபெரும் சுமையாகிவிடுகிறது. புத்தகச்சுமைகளுடன் இதுவேறு. சமூகம் என்பது எங்கேயும் ஒன்றுதானே! அதே சமூகம் அவளுக்குக் கொடுக்கும் தொல்லைகளோ தாங்கமுடிவதில்லை.

'நான், சந்திரா ரீச்சருடன் மருத்துவமனைக்கு கிளம்பிக்கொண்டிருந்தேன். சுவரோடு சுவராக ஒடுங்கிப்போயிருந்த தொலைக்காட்சியில் விளம்பரம் ஓடிக்கொண்டிருந்தது. மார்பகத்தைப் பெரிதாக்கும் உள்ளாடை விளம்பரம் அது. 'தொழில் நுட்பவளர்ச்சியின் உக்கிரத்துடன் ஆரம்பிக்கின்றது நாவல்.

விமலாவிற்கு எல்லாமே அப்பாதான். அவரே அவளுக்கு ஆடைகள் வாங்குகின்றார். உள்ளாடைகளும் 'நாப்கின்'னும் வாங்குகின்றார்.

அப்புறம் விமலாவின் பாடசாலை ஆசிரிய ரான சந்திரா ரீச்சர் அவளுடன் நெருக்க மாகின்றார். விமலாவிற்கு ஒரு அம்மா வாகவும் தோழியாகவும் பணிசெய்கின்றார். இருவரும் தங்களின் கதைகளைப் பரிமாறிக் கொள்கின்றார்கள். இருவருக்கிடையேயான உரையாடல்கள் மார்பகம் பற்றி பல செய்திகளைச் சொல்லிச்செல்கின்றது.



கே.எஸ்.சுதாகர்

சந்திரா ரீச்சரின் கணவன் – அவளை ஒரு மனைவியாகப் பார்க்காமல், அழகியாகப் பார்க்க விரும்புகின்றான். ஒருதடவை சந்திராவை ஒரு எடை குறைப்புநிலையத்திற்குக் கூட்டிச்செல்கின்றான். அங்குள்ளவர்களிடம், 'மொத்த எடையையும் குறைக்கிறபேர்ல, மார்பகத்தோடசைஸ்ஸக்குறைச் சிடாதீங்க' என்கின்றான் அவன்.

எல்லாவற்றுக்குமே ஓமோன்கள்தான் காரணம். இங்கே விமலாவிற்கும்அதுதான். உணவுப்பழக்கங்கள், உடற்பயிற்சி மற்றும் பரம்பரையாகவும் வருவதுண்டு. இப்போது அவளுக்குப் பதினொருவயது. அவளின் மார்ப கங்களை சகமாணவர்கள் பார்க்கின்றார்கள். ரீச்சர்மார் பார்க்கின்றார்கள். ஊரே பார்க்கின்றது. ஏன் தந்தையே பார்கின்றார். ஆனால் தந்தை பார்ப்பதற்கானகாரணம், அவளது மார்பில் ஈக்கள் மொய்த்திருந்ததுதான்.

அவளது தந்தையார் அவள்மீது சந்தேகம் கொள்கின்றார். கர்ப்பிணிப் பெண் களுக்கும் குழந்தை பெற்றவர்களுக்கும்தான் இப்படிமார்பில்பால் கசிவ துண்டு.

இந்த இடத்தில் எனது தாயகத்தில் நடந்த சம்பவ மொன்றைப்பகிர்ந்துகொள்கின்றேன்நான்பாடசாலையில் ஒன்பதாம் தரம் படித்துக்கொண்டிருக்கும்போது, எனக்குக் கீழ்வகுப்பில் படித்துக் கொண்டிருந்த மாணவன் ஒருவ னுக்கு திடீரென்று மார்பகங்கள் வளர ஆரம்பித்து விட்டன. ஆணுக்கு மார்பகங்கள் வளர்ந்தால் சொல்லிக் கொள்ளவாவேண்டும். சகமாணவர்கள் அவனின் மார்பகங்களைக் கிள்ளியும் அழுத்தியும் விளையாடத் தொடங்கிவிட்டார்கள். அப்புறம் அவனுக்கு மார்பகங்களிலிலிருந்து ஒரு திரவம் கூடக்கசியத் தொடங்கிவிட்டது. பின்னர் அவன் அறுவைச் சிகிச்சைசெய்யவேண்டியதாயிற்று.

இங்கே விமலா உரியநேரத்தில் தனது பிரச்சினைகளைச் சந்திரா ரீச்சரிடம் சொல்கின்றார். அவர் விமலாவை மார்பழகு நிலையத்தினரிடமும், மருத்துவரிடமும் அழைத்துச் செல்கின்றார். அவர்கள் கொடுத்த கவுன்சிலிங் ஏமாற்றம் தருகின்றது. விமலா ஒரு பள்ளிச்சிறுமி என்பதை அவர்கள் கருத்தில் கொள்ளவில்லைவியாபாரத் தந்திரத்திலேயே அவர்கள் இருக்கின்றார்கள்.

விமலா மருத்துவரைச் சந்தித்து விட்டு வந்ததை சமூகம் வேறுவிதமாகக் கற்பிக்கின்றது. முடிவு விமலா தன்முலைகளை அறுத்துக் கொள்கின்றாள்.

ஒரு சம்பவம் என்பது எங்கோ எப்பொ ழுதோ ஒருவருக்கு நடப்பதுதான். நமக்கு ஏற்படாத வரை அவைவெறும் சம்ப வங்கள். அதுவே நாளைக்கு நமக்கும் ஏற்பட்டுவிடும். நல்லதோ கெட்டதோ அதற்கான ஒரு முன்பதிவுகள் தான்இவை.

தமிழில் பலசொற்கள் பொத்தாம் பொதுவாக நோக்கும் போது ஒரே கருத்தைக் கொண்டிருக்கும். அவற்றை நுணுகிப்பார்த்தால் பல்வேறு பொருள்படும். அதைத்தான் இங்கே அண்டனூர்சுராவும் சொல்கின்றார். முலை என்பது எஜமானர்கள் தொழிலாளிகளிடம் பார்ப்பது, கொங்கை என்பது தொழிலாளர்கள் தன் எஜமானி களிடம்காண்பது. பார்ப்பது, காண்பது இரண்டுமே ஒன்றுபோல இருந்தாலும் இரண்டிற்கும் பொருள்வித்தியாசம் இருக்கவே செய்கின்றது என்கின்றார் அண்டனூர்சுரா.

'கொங்கை' அளவில் சிறிய குறுநாவல். பக்கவரையறைகள் ஒரு விடயத்தின் கனதியைத் தீர்மானிப்பதில்லை. ஹெமிங்வேயின்' கடலும் கிழவனும்' போல.

ஒவ்வொரு அத்தியாயங்களிலும் பெண்ணின் வலியையும் ஆணின் அதிகாரத்தையும் சரக்சரக் என கத்திபோல செருகிச் செல்கின்றது நாவல். இறுதியில் கண்ணகியைப்போல, விமலா தனது முலையைத் திருகி எறிந்தது என்னவோ சமூகத்தின்மேல்தான். மதுரையை எரித்த தீ இங்கே என்னசெய்யும்? பார்க்கலாம்.

❍❍❍



# கேள்வி ஞானம்

## - இலக்கியன் பதில்கள்

"கேள்வி – ஞானம்" பகுதிக்கு ஒருவர் ஒரு மாதத்தில் மூன்று கேள்விகளை மாத்திரமே அனுப்பலாம். அவற்றுக்குரிய பதில்களை இலக்கியன் வழங்குவர். கேள்விகளை அனுப்புபவர்கள் தமது பெயர் முகவரியுடன் தொலைபேசி எண்ணையும் இணைத்தல் வேண்டும். ஒவ்வொரு மாதமும் 20ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் கேள்விகளுக்கு அடுத்துவரும் இதழில் பதில் வெளிவரும். – ஆசிரியர்

**1) சுவாமி விபுலாநந்தர்தான் மதுரைத் தமிழ்ச்சங்க பண்டிதர் சோதனையில் சித்தியடைந்த முதலாவது ஈழத்தவர் என அவரைப்பற்றிய கட்டுரையில் வாசித்தேன். அவரைத்தொடர்ந்து வேறு யாராவது அந்தப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்களா?**

**– என்.திருநாவுக்கரசு, மட்டக்களப்பு**

அவரைத் தொடர்ந்து வவுனியாவைச் சேர்ந்த வ.சு. இராச ஐயனார் ஈழத்தின் இரண்டாவது மதுரைத் தமிழ்ச்சங்க பண்டிதர் ஆனார். மூன்றாவது, நான்காவதாக புலோலியைச் சேர்ந்த பண்டிதை வாலாம்பிகை, பண்டிதை பத்மாசினி ஆகிய இரு சகோதரிகள் ஒரே ஆண்டில் மதுரைத் தமிழ்ச்சங்கச் சோதனையில் சித்தியடைந்தனர். இவர்கள் தமது பதினைந்தாம் பதினாறாம் வயதுகளில் சித்தியடைந்தார்கள் என்ற பதிவுகள் உள்ளன. இந்த வரிசையில் ஐந்தாவதாகச் சித்தியடைந்தவர் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை.

**2)புதுக்கவிதை எப்போது நமது நாட்டில் தோன்றியது?**

**–இராமலிங்கம்தவசீலன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்**

*1943இல் வரதர் எழுதிய 'ஓர்இரவிலே' என்ற கவிதையே ஈழத்தின் முதலாவது புதுக்கவிதையாகும். இக்கவிதை ஈழகேசரி யில் பிரசுரமாகியது. வரதர் 1955இல் கவிதைக்காக 'தேன்மொழி' என்ற சிற்றிதழை வெளியிட்டார். இதுவே ஈழத்தின் முதலாவது கவிதைச் சிற்றிதழாகும்.*

**3) சமீபத்தில் கலைவாதிகலீல் தங்களைப்பற்றி இரட்டைக் கௌரவம்பெற்ற இலக்கியவாதி என நவமணி பத்திரிகையில் எழுதியிருந்தார். அதைவிடவும் தங்களுக்குப் பெருமை தரும் விடயம் எதுவும் உண்டா?**

**- எம்.ஏ.அப்துல் முகம்மது, மொறட்டுவ**

ஞானம் சஞ்சிகையில் இதுவரை 40க்கும் மேற்பட்ட புதிய எழுத்தாளர்கள் உருவாகியிருக்கிறார்கள். எழுத்தாளர்களை உருவாக்கி வளர்த்தெடுப்பது என்பது சிறு பிள்ளையின் கையைப் பிடித்து நடக்கப் பழக்குவது போன்றது. (அதாவது அவர்கள் அனுப்பும் படைப்புகளை அடுத்தடுத்துப் பிரசுரித்து ஊக்குவிப்பது.) கொஞ்சத்தூரம் நடந்துவிட்டால் அவர்கள் வேகமாக நடக்கத் தொடங்கிவிடுவார்கள். ஞானத்தில் தோன்றி வளர்ந்த எழுத்தாளர்கள் நால்வர் சமீபத்தில், நாவலாசிரியர்களாகப் பரிணமித்துள்ளார்கள். ஞானம் பாலச்சந்திரன் (பொய்மையும் வாய்மையிடத்து...), கா.தவபாலன் (குரலற்ற மனிதர்கள்), சீனா உதயகுமார்( உறங்கிக் கொண்டிருக்கும் ஒரு நிலம்), பிரமிளா பிரதீபன் (கட்டுபொல்). அதாவது இவர்கள் நால்வரும் நடையையும் தாண்டி ஓடத் தொடங்கியிருக்கிறார்கள். இவர்கள் ஞானத்தின் விழுதுகள். இவர்களையெல்லாம் நினைக்கும்போது எனக்குப் பெருமையாக இருக்கிறது.

**4) இப்போதெல்லாம் சிறுகதைகள் குறுங்கதைகளாகவே பெரும்பாலும் ஆகிவிடுகின்றன. கவிதைகளும் துளிக்கவிதை, கைக்கூ கவிதைகளே முக்கியத்துவம் பெறுகின்றன.. நல்ல கற்பனை வளம், இலக்கிய நயம், கருத்துச் செறிவுகளுக்கு வாய்ப்பில்லாமல் செய்கின்றன பத்திரிகைகளும் சஞ்சிகைகளும். இந்தப்போக்கு இலக்கிய வளர்ச்சிக்கு உதவுமா?**

**–சூசைஎட்வேட், அன்புவழிபுரம்,திருகோணமலை**

தற்காலத்தில் வாசிப்புப் பழக்கம் அருகிவருகிறது என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள்.தமிழகத்தில் நடைபெற்ற ஆய்வு ஒன்றில் 400 சொற்களுக்குள் அடங்கும் விடயதானங்களை 50 வீதமான வாசகர்கள் வாசிக்கிறார்கள் என்றும் விடயதானம் நீண்டுசெல்லச் செல்ல வாசிக்கும் வாசகர் தொகை எதிர்மறையாக குறைந்து கொண்டே செல்கிறதென்றும் தெரிய வந்துள்ளது. இது தொடர்பான செய்தி தமிழக இந்து பத்திரிகையில் வெளிவந்ததாக அறிய முடிகிறது. வாசகர்கள் வாசிக்காத எந்தப்படைப்பும் இலக்கிய வளர்ச்சிக்கு உதவப்போவதில்லை. காப்பியங்களை படிப்போர் தொகையைவிட திருக்குறளைப் படிப்போர் தொகைதான் அதிகமாக உள்ளது. நவீன இலக்கியங்களுக்கும் இது பொருந்தும்.

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்



பேராசிரியர் துரை மனோகரன்

## வீரமும் களத்தே போட்டு வெறும் கையோடு...

இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து, ஓரளவாயினும் இலங்கைத் தமிழருக்கு என்று ஓர் அரசியல் அடையாளம் இருந்துவந்தது. அத்தகைய அரசியல் அடையாளத்தை ஏற்படுத்துவதில் அமரர் எஸ்.ஜே. வி.செல்வநாயகம் முக்கிய பங்காற்றினார். தமிழரசுக் கட்சியின் தோற்றத்தின் போதே, சமஷ்டி என்பது, அதன் உயிர்மூச்சான கொள்கையாக அமைந்துவிட்டது.. அக்கட்சிக்குச் சம்'டிக் கட்சி என்ற இன்னொரு பெயரும் உண்டு. நீண்ட காலமாக அக்கட்சி சமஷ்டிக் கொள்கையைப் பெயரளவில் என்றாலும் காப்பாற்றிவந்திருக்கிறது. தமிழ்மக்கள் சகலரும் சமஷ்டிக் கொள்கை பற்றி விளங்கிக்கொண்டார்களோ, இல்லையோ, தமிழர் தொடர்பாக அக்கட்சிக்கு என்று ஒரு கொள்கை இருக்கிறது என்று நம்பிவந்தார்கள். முற்காலத்தில் யாழ்ப்பாணத்தில் அக்கட்சியின் அரசியல்வாதிகள் தொடர்பாகச் சாதாரண மக்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்ளும் போது, 'அவர்கள் தேவர்கள் அப்பா' என்று மகிழ்ச்சியோடும், நிம்மதியோடும் குறிப்பிடுவதை நான் அவதானித்திருக்கிறேன். மக்களாகிய தாம் தேர்தலில் வாக்களித்து, அவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைத்தால், மிகுதியை அவர்களே பார்த்துக் கொள்வார்கள் என்ற மிதமிஞ்சிய எதிர் பார்ப்பும், நம்பிக்கையும் அவர்களிடம் இருந்துவந்தது. ஆனால், மக்களின் எதிர்பார்ப்புகள், நம்பிக்கைகள் ஆகியவற்றுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகளுக்கும் இடையே நீண்ட இடைவெளியே காலங்காலமாக இருந்துவந்தது. ஆயினும், கட்சிக் "கொள்கை"யைத் தமிழரசுக் கட்சியினர் கைவிடவில்லை.

ஆனால், கடந்த பொதுத்தேர்தலின் பின்னர், தமிழரசுக் கட்சி உட்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் முற்றிலுமாக மாறத்தொடங்கிவிட்டன. தற்போதைய ஆட்சியாளர்களை ஆட்சிபீடம் ஏறவைத்ததில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்களிப்பும் முக்கியமானது. தாங்கள் ஆட்சிக்கு வரவேண்டும் என்பதற்காக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டிய வரங்களை எல்லாம் தருவதாகக் கூறி, ஆட்சிக்கு வந்தார்கள், தற்போதைய ஆட்சியாளர்கள். வழமையாகப் பெரும்பான்மைத் தலைவர்கள் கையாளும் உத்தியைத்தான் 'நல்லாட்சிக்காரர்களும்' பயன்படுத்தினார்கள். 'ஆறு கடக்கும் வரை தான் அண்ணன் தம்பி' என்பது தான் அவர்களது வழமையான உத்தி. அதைத் தெரிந்துவைத்திருக்கவேண்டிய பொது உணர்வு கூடத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்கு இல்லாமல் போனதுதான் ஆச்சரியத்தையும். வேதனையையும் அளிக்கின்றன. இலங்கைத் தமிழருக்குத் தலைமை தாங்குவதாகத் தெரிவித்துக் கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குச் சுயபுத்தி என்பது கொஞ்சம் கூடக் கிடையாதா? ஆட்சியாளர்கள் வாக்களித்த வரங்களை, தேவை நோக்கி வலியுறுத்திப் பெறத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையால் முடியாமல் போனது ஏன்? காவியத்தில் இடம்பெறும் கைகேயி கூட, தசரதன் வாக்களித்த வரங்களைச் சந்தர்ப்பம் அறிந்து, சாதுரியமாகப் பெற்றுக்கொண்டாளே! ஏன் அத்தகைய முயற்சியும், திறமையும் கூட்டமைப்பிடம் இல்லாமல் போனது? அரசுடன் கொண்ட நட்புறவினால் ஏற்பட்ட பலவீனமா? அல்லது, அதனிடம் இயல்பாகவே உள்ள கையாலாகாத்தனமா?

முன்னர், சும்மா சாட்டுக்காவது சமஷ்டிக் கொள்கை பற்றியும், வட - கிழக்கு இணைப்புப் பற்றியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவ்வப்போது பேசிவந்தது. இப்போது அவற்றை எல்லாம் வசதியாகக் கைநழுவ விட்டுவிட்டு, ஆட்சியாளர்களின் தேவைகளுக்கு ஏற்பக் கூட்டமைப்பு ஆடத் தொடங்கியுள்ளது. அதற்கு நல்லதொரு சான்றாக அமைந்தது, கூட்டமைப்பின் பேச்சாளரின் கருத்து. அண்மையில் புதிய அரசியல் யாப்புத் தொடர்பாக விளக்கம் அளிக்கும் கூட்டம் ஒன்று காலியில் இடம்பெற்றபோது, 'எமக்கு சமஷ்டி முறை தேவையில்லை. இருக்கின்ற மாகாணசபை முறையில் சிறு மாற்றங்கள் செய்யப்படுமானால், அதனை ஏற்றுக்கொள்வதற்கு எமது மக்கள் தயாராக

உள்ளனர்' என்று அவர் கூறியுள்ளார். யாரைக் கேட்டு, கூட்டமைப்பின் பேச்சாளர் இத்தகைய கருத்தைத் தெரிவித்தார் என்பது முக்கியமான கேள்வி. அவர் கூட்டமைப்பின் பேச்சாளர் என்பதால், அவரது கூற்று அவரது தனிப்பட்ட கருத்து என்று கூறி, யாரும் தப்பிக்க முடியாது. அவரது கருத்து சர்ச்சையை ஏற்படுத்தத் தொடங்கவே, வழக்கமாகப் பிரபலங்கள் அவ்வப்போது எதையாவது உளறிவிட்டு, பிரச்சினை வரும்போது, தாம் அப்படிச் சொல்லவில்லை. ஊடகங்கள்தான் தமது பேச்சைத் திரிவுபடுத்தி வெளியிட்டுவிட்டன என்று கூறித் தப்பிக்க முயல்வது போன்ற முயற்சியை அவர் செய்துள்ளார். தாம் சமஷ்டிக் கோரிக்கையைக் கைவிடவில்லை என்றும், வெறும் பெயர்ப்பலகை முக்கியம் அல்ல என்றும் பின்னர் கூறிச் சமாளிக்க முயன்றுள்ளார். இது தொடர்பாக, 'சமஷ்டி தேவையில்லை என்று கூறும் நெஞ்சழுத்தம் எப்படிச் சுமந்திரனுக்கு வந்தது?' என்று வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன் கேட்ட கேள்வியில் நியாயம் உள்ளது. 'எதுவுமில்லாத புதிய அரசியலமைப்புக்குத் தமிழ்மக்களைச் சுமந்திரன் தயார்ப்படுத்தும் வகையிலேயே இத்தகைய கருத்தினைத் தெரிவித்துள்ளார்' எனச் சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டுள்ளதும் கருத்தில் எடுக்கத்தக்கது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரது கருத்துத் தொடர்பாக, இலங்கையின் தமிழ் நாளேடு ஒன்று, 'இரட்டை நிலைப்பாட்டைக் கைவிடவேண்டியது அவசியம்" என்னும் தலைப்பில் ஆசிரியத் தலையங்கம் ஒன்று தீட்டியுள்ளது. அவ் ஆசிரியத் தலையங்கத்தின் ஒரு பகுதி பின்வருமாறு அமைந்துள்ளது: 'எது எப்படியிருந்தாலும் சமஷ்டிக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே தீர்வு காணப்படவேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும். இதற்கேற்ற வகையிலேயே அரசியல் தீர்வு காணப்படவேண்டும். சிங்கள மக்களுக்கு ஒரு முகத்தையும் தமிழ் மக்களுக்கு ஒரு முகத்தையும் காண்பிக்கும் செயற்பாட்டில் கூட்டமைப்பின் தலைமை செயற்படக்கூடாது. காலியில் சமஷ்டி எமக்குத் தேவையில்லை எனக் கூறிய சுமந்திரன், தற்போது ஊடகங்கள் பொய் கூறுவதாகத் தெரிவித்து வருவது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. எனவே, இரட்டை நிலைப்பாட்டைக் கைவிட்டு, ஒரே நிலைப்பாட்டில் நின்று தீர்வினைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுப்பது சிறந்தது.'

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் காலங்களில், தான் முன்வைக்கும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமஷ்டிக் கோரிக்கையையும், வடக்கு - கிழக்கு இணைப்பையும் முன்வைப்ப துண்டு. தேர்தல் வேட்பாளர்களும், பிற பேச்சாளர்களும் இவற்றையே முதன்மைப் படுத்திப் பேசி, மக்களைக் கவர்வர். மக்களும் தமது வாக்குகளை அள்ளியள்ளி அவர்களுக்கே போட்டு, அவர்களை வெற்றிபெறச் செய்வர். 2015ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலின் பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் போக்கு முற்றாக மாறிவிட்டது. எதிர்க்கட்சித் தலைமை கிடைத்தும், உத்தியோகப்பற்றற்ற ஆளும் கட்சி போலவே அது நடந்துகொள்ளத் தொடங்கியது. அரசுடன் நட்பு பாராட்டுவதும், நம்பி ஏமாறுவதுமே எதிர்க்கட்சித் தலைமைக்குரிய பண்பு போல அக்கட்சி விளங்குகிறது. தனது அரசியல் கொள்கைகளை எல்லாம் காற்றில் கைகழுவிவிட்டு, 'வீரமும் களத்தே போட்டு, வெறும் கையோடு' தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் செய்கிறது. தேர்தல் விஞ்ஞாபனம் என்பது தேர்தலுக்கு மட்டும் தான் என்ற கொள்கையையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது கடைப்பிடிக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

சர்வதேசரீதியாகவும் தனது கையாலாகாத் தனத்தையே கூட்டமைப்பு வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது. சர்வதேசரீதியாக அரசுக்கு மானபங்கம் ஏற்படாதவாறு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கைகொடுத்து, அது காப்பாற்றி வருகிறது. சர்வதேச இராஜ தந்திரிகள் இலங்கை வரும்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்துப் பேச்சு வார்த்தைகள் நடத்துவது வழக்கம். அத்தகைய சந்தர்ப்பங்களில், கூட்டமைப்பின் கோரிக்கை களை முன்வைக்கும்படி இராஜதந்திரிகள் கேட்பதுண்டு. அப்போது கூட்டமைப்பின் தலைமை, பழைய வரலாறுகளையே அவர்களுக்குத் திரும்பத் திரும்பச் சொல்லி, 'ஏதோ நீங்களே பார்த்துச் செய்யுங்கள்' என்று கூறித் தப்பிக்கொள்வதாக அறிய முடிகின்றது. ஆனால், அத்தகைய சந்திப்புகளின் பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடும் ஊடக அறிக்கைகளில், சர்வதேசத்துடன் தாம் விரிவாகப் பேச்சு நடத்தியதாகவும், சர்வதேசம் தம் பக்கம் இருப்பதாகவும் சுய விளம்பரம் செய்துகொள்வதுண்டு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய பங்களிப்பு ஒன்றினை நாம் மறக்கமுடியாது.

உண்மையும், நேர்மையும், துணிச்சலும் மிக்க வடமாகாண முதல்வர் விக்கினேஸ்வரனுக்கு எதிராக என்னென்ன சிக்கல்களை ஏற்படுத்தி, அவரைப் பிரச்சினைகளில் மாட்டிவைக்க முடியுமோ, அவற்றை எல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவறாமல் செய்துவருகிறது.

## அமைச்சரைப் பாராட்ட வேண்டும்

இலங்கையின் அரசுகள் மக்களுக்கு என்னென்ன நன்மைகளைச் செய்து வந்தனவோ, இல்லையோ, ஒன்றை மட்டும் தமது காலங்களில் தவறாமல் செய்து வந்துள்ளன. வடக்கு, கிழக்கில் சிறுபான்மை யினரின் பூர்வீக நிலங்களில் பெரும்பான்மை யினரைக் கொண்டுவந்து குடியேற்றும் முயற்சிகளில் அக்கறையோடு செயற்பட்டு வந்துள்ளன.. தேசத்தின் பிதாமகராகப் பெரும்பான்மையினரால் போற்றப்படும் டீ.எஸ்.சேனநாயக்கா காலத்தில் கிழக்கு மாகாணத்தில் கல்லோயாக் குடியேற்றத் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. அன்று முதல் இன்றுவரை இத்தகைய குடியேற்றத் திட்டங்கள் அரசுகளின் நேரடி அல்லது மறைமுக ஆசிர்வாதத்துடன் காலந்தோறும் விரிவாக நடத்தப்பட்டு வருகின்றன. வாழு, வாழவிடு என்ற நல்லெண்ணத்துக்குப் பதிலாக, இலங்கை முழுவதையும் பேரினவாதப் பிடிக்குள் கொண்டுவந்துவிடவேண்டும் என்ற அரசுகளினதும், பேரினவாதிகளதும் பேரா சையே இதற்குக் காரணம் ஆகும். இதற்கேற்பவே அரசோடு தொடர்பான மகாவலி அதிகார சபை, தொல்பொருள் திணைக்களம், வனத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் என்பன செயற்பட்டு வருகின்றன. அரசியல்வாதிகள், மதகுருமார், அரச அதிகாரிகள், காவல்துறை, இராணுவம், பேரினவாத எண்ணம் கொண்ட பொதுமக்கள் முதலான பலரும் சிறுபான்மையினருக்கு எதிரான இவ் ஈனச்செயலில் கலந்து கடமை யாற்றுகின்றனர்.

இத்தகைய முயற்சிகள் 'நல்லாட்சி' அரசிலும் நடைபெற்றுவருகின்றன. அண்மை யில் இடம்பெற்ற இத்தகைய முயற்சி ஒன்று முறியடிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த குருந்தூர் மலைப் பகுதியில் தேவையின்றி புத்தர் சிலை ஒன்றை வைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தொல்பொருள் திணைக்களத்தின் வவுனியா, முல்லைத்தீவு உதவிப் பணிப்பாளர் சில தேரர்களுடனும், இராணுவத்தின் ஒத்துழைப் புடனும் குருந்தூர் மலைப்பகுதி நோக்கிச் செல்ல முயற்சித்துள்ளார். இதனைத் தெரிந்து கொண்ட அப்பிரதேச இளைஞர்கள், அவர் களைத் தடுத்து நிறுத்தி, எதிர்ப்பினைத் தெரிவித்தனர். அதனால், சம்பந்தப்பட்டவர்கள், தமது 'நோக்கத்தை' நிறைவேற்ற முடியாமல், வந்த வழியைப் பார்த்துத் திரும்பிச் சென்று விட்டனர்.

இந்த விடயம் தொடர்பாகத் தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் வேண்டிய நடவடிக்கையை மேற்கொண் டுள்ளார். குறிப்பிட்ட மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர், அப்பகுதியை உள்ள டக்கும் பிரதேசசபைத் தலைவர் ஆகியோரது எழுத்து மூலமான அனுமதி இல்லாமல், எந்தவொரு மதத்தலத்தைக் கட்டவோ, சிலைகளை நிறுவவோ அனுமதிக்கக்கூடாது என முல்லைத்தீவு, கிளிநொச்சிப் பிராந்தி யத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கும், ஒட்டுசுட்டான் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரிக்கும் அமைச்சர் மனோ கணேசன் உத்தரவு பிறப்பித்துள்ளார். அதேவேளை, தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்துடனும் தொடர்பு கொண்டு அவர் பேசியுள்ளார். இவ்விடயத்தில், அமைச்சர் மனோ கணேசனின் பணி விதந்து பாராட்டத்தக்கது. இதுபற்றி நாடாளுமன்றத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனும் குரல் எழுப்பியுள்ளார்.

வடக்கு, கிழக்கில் தமிழ், முஸ்லிம் மக்களின் பூர்வீக நிலங்களில் பேரினவாதிகளின் அத்துமீறல்கள் தொடர்ந்தவண்ணம் உள்ளன. இவை உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இவ் விடயத்தில் தமிழ் மக்கள் இயன்றளவு விழிப்புணர்வுடன் செயற் படுகின்றனர். வடக்கு, கிழக்கு அரசியல் வாதிகள் வழமை போல அரசியல் தூக் கத்தில் ஆழ்ந்திருக்கின்றனர். தேர்தல்கள் வரும்போது, தம்மை அறியாமலே அரசியல் தூக்கத்தில் இருந்து அவர்கள் விழிப்படைவர். அப்போதுதான், தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இவ்வளவு பிரச்சினைகள் இருக்கின்றனவா என்ற கேள்வி அவர்கள் வாயில் எழும். மேடைகளில் வீர வசனங்களைப் பேசி, மக்களை உணர்ச்சிவசப்படுத்தி, வெற்றி பெற்று, மீண்டும் அரசியல் தூக்கத்தில் ஆழ்ந்து விடுவர். இந்த வகையில், அமைச்சர் மனோ கணேசன் எமது பாராட்டுக்கு உரியவர். உடனடியாகவே நடவடிக்கை எடுத்த அவர், தமிழ் மக்களின் நன்றிக்கும் உரியவர்.

○○○

## கலாபூஷணம் கே.பொன்னுத்துரை

# சம கால கலை இலக்கிய நிகழ்வுகள்



### குரும்பசிட்டியில் 'குரலற்ற மனிதர்கள்' நாவல் வெளியீடு



கலாபூஷணம் கா. தவபாலன் எழுதிய “குரலற்ற மனிதர்கள்” நாவலின் வெளியீட்டுவிழா குரும்பசிட்டி கலை ஞானி கலாசார மண்டபத்தில் கடந்த 09.09.2018 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலையத்தினரால் வெகு விமரிசை யாகக் கொண்டாடப்பட்டது.

நிலையத் தலைவர் திருமதி சிவரூபன் சர்வேஸ்வரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் வலி வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் திரு சோ.சுகிர்தன் அவர்கள் பிரதம அதிதியாகவும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி ம. இரகுநாதன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும், கலந்து சிறப்பித்தார்கள்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் உப அதிபரும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் தலைவருமான திரு. ச. லலீசன், ஓய்வு பெற்ற பாடசாலை அதிபரும் மூத்த எழுத்தாளருமாகிய திரு க. நடேசு (தெணியான்), யாழ்ப்பாணம், உயர் தொழில் நுட்ப நிறுவனத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு எஸ். விஜயநாதன், வலி வடக்குப் பிரதேச சபையின் உறுப்பினர் திரு. பொ. தங்கராசா, தொழிலதிபர் சமூக திலகம் திரு அ. கிருபாகரன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிற் பணியாற்றும் டாக்டர் வேல் சாரங்கன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்தார்கள்.

●●●











கட்டுவன், மயிலிட்டி தெற்கு (தென்மயிலை), வர்த்தலைவிளான் பாலர் ஞானோதய சங்க தாயக- சர்வதேச உறவுகளின் கிராம மேம்பாட்டுக்கான ஒன்றுகூடல் அண்மையில் விடுவிக்கப்பட்ட மைதானத்தில் இடம்பெற்றது.

முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கன், யாழ் அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் ஆகியோர் முதன்மை விருந்தினராக கலந்து, கிராமத்தின் பாரம்பரிய வீரபத்திர வசந்தன் நாடக மூத்த கலைஞர்களைக் கௌரவித்தனர்.



**20 வது கொடகே தேசியச் சாகித்திய விழா—2018**

தமிழ் விருதாளர்கள்:

| | | |
|---|---|---|
| வாழ்நாள் சாதனையாளர் | : | காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன் |
| சிறந்த நாவல் | : | ஒரு கிராமத்து அத்தியாயம் - எஸ். ஜோன்ராஜன் |
| சிறந்த சிறுகதைத்தொகுதி | : | 1. உயிருதிர்காலத்தின் இசை-பதுளை சேனாதிராஜா<br>2. நிழலைத்தேடி: ஏ.எஸ். உபைத்துல்லா |
| சிறந்த கவிதைத்தொகுதி | : | நாக்கு - ஜே.பிரோஸ்கான் |
| வளர்ந்து வரும் எழுத்தாளரின்முதல் நூல் | : | மட்டை - எஸ். சிவசேகரன் |

●●●

**கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் திருவள்ளுவர்சிலை திறப்புவிழா**

இலங்கைத் தலைநகர் கொழும்பில் உள்ள கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் 29-09-2018 சனிக்கிழமை திருவள்ளுவர் சிலை திறப்புவிழா இடம்பெற்றது.

காலை நிகழ்விற்கு பேராசிரியர் சோ. சந்திரசேகரம் தலைமை தாங்கினார். மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்தினை செல்விகள் வாசுகி - நந்தினி சகோதரிகள் பாடினர். திருக்குறள் புலவர் நாவை சிவம் (தமிழ்நாடு) திருக்குறள் போற்றி இசை பாடினார். திருமதி வசந்தி தயாபரன் வரவேற்புரை நிகழ்த்தினார். இந்நிகழ்விற்கு கவிஞர் மா.கோமுகிமணியன், திருவாளர்கள் ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன், கி.பொன்னுத்துரை, அ.எதிர்வீரசிங்கம் முன்னிலை வகித்தனர்.

தொடர்ந்து பிரம்மஸ்ரீ சு. சுவாமிநாதன் சர்மா இசைக்குழுவினரின் இசை அர்ச்சனை இடம்பெற்றது. இதில் சு.வாசுகி, நந்தினி சகோதரிகள், (வயலின்/பாட்டு) சு.அரவிந்தன் சுப்பிரமணிய சர்மா(கீபோர்ட்), சு. அனந்தநாராயணன் சர்மா (பாட்டு)பிரம்மஸ்ரீ சு. சவாமிநாதன்சர்மா (மிருதங்கம்)ஆகியோர் பங்குபற்றி சபையோரை மகிழ்வித்தனர்.

தொடர்ந்து பேராசிரியர் வ. மகேஸ்வரன் தலைமையில் கருத்தரங்கம் இடம்பெற்றது. தொடக்கவுரையை திரு.அந்தனி ஜீவாவும் வரவேற்புரையை திரு. கவிமாமணி துரை இராசமாணிக்கம் அவர்களும் நிகழ்த்தினர். 'வழிகாட்டும் வள்ளுவம்' என்ற தலைப்பில்

இடம்பெற்ற கருத்தரங்கில் முனைவர் இரா சீனிவாசன், முனைவர் கனல்மைந்தன், முனைவர் வே.சேதுராமன், புலவர் இர புருடோத்தமன் திரு. துணவியூர் கேசவன், திரு.வே.தட்சணாமூர்த்தி, கவிஞர் தாமரைப்பூவண்ணன், திரு. பெ. காப்புசாமி ஆகியோர் கலந்து ஆய்வுரைகள் வழங்கினர்.

மதிய உணவின்பின் மாலை நிகழ்வாக திருவள்ளுவர் சிலை திறப்புவிழா தமிழ்ச்சங்கத் தலைவர் ஜீ.இரஜகுலேந்திரா தலைமையில் இடம்பெற்றது. மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து செல்வி வைஷாளினி தமிழ்த்தாய் வாழ்த்திசைத்தார். வரவேற்புரையை திரு.ஆ. குகமூர்த்தி அவர்களும் அறிமுக உரையை கவிஞர் உடையார்கோயில் குணாவும் நிகழ்த்தினர். முனைவர் சங்கரி சீனிவாசன் முன்னிலையில் தினமணி ஆசிரியர் கி.வைத்தியநாதன் சிலையைத் திறந்து வைத்தார்.

திரு.த.ஹரிகரன் சிலைக்கு மாலை அணிவித்தார்.

இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா கலந்து சிறப்பித்த இந்நிகழ்வில், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் அயல்நாட்டு கல்வித் துறைத்தலைவர் இரா.குறிஞ்சிவேந்தன், முனைவர் சங்கரி சீனிவாசன், ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். திருக்குறள் புலவர் நாவை. சிவம், புதுவை தமிழ்ச்சங்கத் தலைவர் முனைவர்முத்து, திண்டிவனம் துரை ராஜமாணிக்கம் தம்பு சிவசுப்பிரமணியம், ஜின்னாஹ் ஷரிபுத்தீன், தி.ஞானசேகரன், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

தொடர்ந்து பட்டிமண்டபம் திருமதி சுகந்தி இராஜகுலேந்திரா தலைமையில் இடம்பெற்றது. 'வள்ளுவர் நெறியில் இன்றும் வாழ்வது ஆண்களா பெண்களா' என்ற தலைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் செல்வன் ந. கணஷியாம், செல்வி பி.அட்ஷயனி, செல்வன் வி.அபிலாஷ், செல்வன் சி.சஜிஷ்ணவன், செல்வி கி.அபிலாஷினி, செல்வி இ.தனுஷா ஆகியோர்பங்கு பற்றினர்.

திரு. மு.மனோகரன் நன்றியுரை வழங்கினார். திருமதி வளர்மதி சுமாதரன் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

தினமணி ஆசிரியர் கி.வைத்தியநாதன், தஞ்சை தமிழ்த்தாய் அறக்கட்டளையால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட திருவள்ளுவர் சிலையை திறந்துவைத்து பேசியபோது: "தமிழினத்தின் தனி அடையாளம் திருக்குறள்" என்றார்.

கடல் கடந்தும்கூட தமிழ்ச் சங்கங்களில் திருவள்ளுவருக்கு சிலைகள் அமைக்கப்பட்டு போற்றப்படுவது தமிழினத்தின் அடையாளமாக மாறியிருக்கிறது.

இலங்கையில் என்னை வியப்பிலும் மகிழ்ச்சியிலும் ஆழ்த்திய காட்சிகள் ஏராளம். வவுனியாவில் நடுநாயகமான பகுதியில் நான்கு முனைச்சாலையின் நடுவில் திருவள்ளுவருக்கு சிலை அமைக்கப் பட்டிருப்பதைப் பார்த்து வியந்தேன். நகர சபைத்தலைவராக இருந்தபோது அந்தச்சிலையை நிறுவிய, இப்போதைய மாகாண ஆட்சிமன்றக் குழு உறுப்பினர் திரு. லிங்கநாதன், இதேபோல கம்பர், பாரதி, இளங்கோ உள்ளிட்ட தமிழ் ஆளுமைகள் பலருக்கும் வவுனியாவில் சிலைகள் அமைக்கப்பட்டிருப்பதை தெரிவித்தபோது, வியப்பும் மகிழ்ச்சியும் மேலிட்டது.

இலங்கைத் தமிழர்கள் ஆங்கிலக் கலப்பில்லாமல் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துவதைக் கேட்டபோது சற்று வெட்கமாகத்தான் இருந்தது.

தாய்த் தமிழகத்தில் உரையாடும்போது அடிக்கடி ஆங்கில வார்த்தையான 'ஓகே' என்பதைப் பயன்படுத்தும் போதெல்லாம், இதற்குப் பொருத்தமான தமிழ் வார்த்தையே இல்லையா என்று மனம் வேதனைப்படும். இங்கே 'ஓகே' என்பதற்குப் பதிலாக 'ஓம்' என்று பயன்படுத்துவதைக் கேட்டபோது, மகிழ்ச்சியாக இருந்தது. நல்ல தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்தும் இலங்கைத் தமிழர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இப்போது தமிழர்கள் ஏறத்தாழ, 80-க்கும் அதிகமான நாடுகளில் புலம்பெயர்ந்து குடியேறி இருக்கிறார்கள். அதில் பெரும்பாலானோர் இலங்கைத் தமிழர்கள்தான். அவர்கள் குடியேறிய நாடுகளில் எல்லாம் தமிழையும், தமிழ்ப்பண்பாட்டு விழுமியங்களையும் போற்றிப் பாதுகாப்பதற்கு தமிழினம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. திருவள்ளுவருக்குச் சிலை அமைத்து போற்றுவது என்பது தமிழைப் போற்றுவதாகும். தமிழினத்தின் தனிஅடையாளம் திருக்குறள்.













தமிழர்கள் வாழும் ஊர்களில் எல்லாம் திருவள்ளுவருக்குச் சிலை அமைப்பது என்பது தமிழையும் தமிழினத்தையும் அடையாளப் படுத்துவதாகும். தமிழினத்தின் வாழ்வியல் நெறி வள்ளுவம் என்றார் அவர்.

இவ்விழாவில் தஞ்சாவூர் தமிழ்த்தாய் அறக்கட்டளையின் பொதுச்செயலர் உடையார் கோயில் குணா பேசியது:

இந்த அறக்கட்டளையின் சார்பில் இதுவரை மலேசியாவில் சிம்பாங்லீமா தமிழ்ப் பள்ளிக்கும், செபஸ்தியார் கலைக்கூடத்துக்கும், அந்தமான் தமிழர் சங்கத்துக்கும், தருண்விஜய்க்கும், மோரீஷியஸ் நாட்டின் மகாத்மா காந்தி கல்வி நிறுவனத்துக்கும், மணிப்பூர் மாநிலத்தில் உள்ள மோரே தமிழ்ச் சங்கத்துக்கும் என மொத்தம் 6 சிலைகளை அன்பளிப்பாக வழங்கி இருக்கிறோம். தற்போது இலங்கை, கொழும்புத் தமிழ்ச் சங்கத்துக்குத் திருவள்ளுவர் சிலையை வழங்கியுள்ளோம்.

அடுத்த முயற்சியாக, மலேசியாவில் 2019ஆம் ஆண்டு பிப்ரவரி 22, 23, 24-ஆம் தேதிகளில் உலகத் திருக்குறள் மாநாட்டை நடத்த இருக்கிறோம். ஆஸ்திரேலியாவில் தமிழ் இலக்கியக் கலைமன்றத்துக்கு மார்ச் மாதம் முதல் வாரம் இளங்கோவடிகள் சிலையையும், தைவான் தமிழ்ச்சங்கத்துக்கு மே மாதம் 18-ம்தேதி திருவள்ளுவர் சிலையையும் அன்பளிப்பாக வழங்க இருக்கிறோம் என்றார்.

●●●

# வாசகர் பேசுகிறார்

கனடா இந்துக் குருமார் ஒன்றியம் வழங்கிய கலாரத்னா விருது, கனடா இலக்கியத் தோட்டம் வழங்கிய தமிழ் இலக்கிய சிறப்பு விருது, முஸ்லிம் மீடியா போரம் அமைப்பால் வழங்கப்பட்ட விருது, சித்தி லெப்பை ஆய்வுப் பேரவையால் வழங்கப்பட்ட சிறப்பு விருது, மற்றும் கலாபூஷணம் போன்ற விருதுகள், பட்டங்கள் ஆகியவற்றின் சொந்தக்காரரும் ஞானம் இலக்கிய சஞ்சிகையின் பிரதம ஆசிரியருமான டாக்டர் தி. ஞானசேகரன் அவர்கள் நீடூழி வாழ்ந்து, மென்மேலும் எழுத்துப்பணி செய்ய வாழ்த்துகின்றேன். **– கலாபூஷணம் கா. தவபாலன்**

❋❋❋

ஞானம் 220 இதழில் சாகித்தியரத்னா மு.பொ. வைப் பற்றிய கட்டுரையை வாசித்தேன். உண்மையில் மு.பொ.விற்கு இந்த விருது மிகவும் காலந்தாழ்த்தியே வழங்கப்பட்டுள்ளது. ஈழத்து தமிழ் இலக்கிய உலகில் நடந்த வெட்கக் கேடான செயல்களால் சில ஆண்டுகளுக்கு முன்னர் மு.பொ.விற்கு வழங்கப்படவிருந்த இந்தவிருது தடுக்கப்பட்டதாக பலகதைகள் அப்போது உலவியது நினைவிற்கு வருகின்றது.

சமரபாகு சீனா உதயகுமார் எழுதிய 'ஆங்கிலமொழி ஓர் ஒட்டுமொழி' என்ற கட்டுரை பல புதிய தகவல்களைத் தருகின்றது. ஆனால் இக்கருத்துக்கள் சீனாவின் சொந்தக் கருத்துக்களா? அல்லது அவர் வேறு நூல்களில் இருந்து படித்தவற்றைக் குறிப்பிடுகின்றாரா? என்பதில் வாசகர்களுக்கு மயக்கம் ஏற்படுகின்றது. எதிர்காலத்தில் சீனாஉதயகுமார் எழுதும் இத்தகைய கட்டுரைகளில் இதனைத் தவிர்க்க மூலநூல்களைக் குறிப்பிடல் நன்று.

**தேவமுகுந்தன், கொழும்பு–6**

❋❋❋

சென்ற 220ஆம் இலக்க ஞானம் சஞ்சிகையின் ஆசிரியர் பக்கம் தமிழர் பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் என்ற தலைப்பில் வந்தவைகள் யாவும் உண்மையான செய்திகளாகும். இவ்வாறான குடியேற்றங்கள் இலங்கை சுதந்திரமடைந்தபின் அதாவது டி.எஸ். காலம் முதல் இன்றுவரை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அரசாங்கங்கள் மாறி, மாறி வந்தாலும் இக்கொள்கை மாறாமல் இருக்கின்றது. சுருக்கமாகச் சொல்வதானால் குரங்குகளுக்கு எல்லாம் ஒருமுகமே. கேட்டால் புண்ணியபூமி,அல்லது புதைபொருள் ஆராய்ச்சியென இல்லாததை உண்டுபண்ணி சாதிக்கின்றனர்.

இறக்காமம் பிரதேசசெயலகத்துக்கு உட்பட்ட சிங்களமக்கள் அறவேயில்லாத முஸ்லிம் பிரதேசமான மாணிக்கமடு என்ற இடமிருக்கிறது. அங்கேயுள்ள மாயக்கல்லிமலையில் சுமார் இரண்டரை ஆண்டுகளுக்குமுன்பு புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது. சட்டத்தை நீதியையும் கைலெடுக்க முயலுகிறார்களா? சிந்திக்கவேண்டியுள்ளது.

பழைமையானசெய்திகளை அல்லது சம்பவங்களை நினைவு கூர்வதில் பலேகில்லாடி பேராசிரியர் துரை மனோகரன். பேராசிரியர் தமது பத்தியெழுத்துப் பகுதியில் தேவதாஸ் படத்தை நினைவூட்டினார். சாதாரண காதல் கதை இன்று காவியமாகிவிட்டது. பலமொழிகளில் அப்படம் திரைப்படமானது. தமிழில் கண்டசாலா கே.ராணியின் பாடல் இன்றும் செவிகளுக்கு விருந்து. தனிப்பாடல்களில் கே.ராணி, ஈ.எம்.ஹனிபாவுடன் சேர்ந்து பாடியபாடல்கள் மனதை விட்டகலாதது. மிக்கநன்றி நிவைூட்டுதலுக்கு.

ஆங்கிலமொழிபற்றி சமரபாகு சீனா உதயகுமார் வடித்துள்ள கட்டுரை வாசித்தேன். அந்நாளில் ஆங்கிலேயர் எங்கெல்லாம் ஆதிக்கம் செலுத்தினார்களோ, அங்கெல்லாம் ஆங்கிலமொழி செல்வாக்குப் பெற்றது. ஆங்கிலமொழியும் அந்தந்தநாட்டில் பேசும் மொழிகளை உள்வாங்கியது. உலகமொழிகளில் ஒன்றாகியது. இதனை நாம் எமது பாஷையில் சொல்வதானால் 'ஆங்கிலம் ஓர் அச்சாறுமொழி' எனக் குறிப்பிடலாம். 'மனிதனுக்காகவே மொழியேதவிர, மொழிக்காக மனிதனில்லை.....' என்பதை புரிந்தால் நலமென நினைக்கிறேன்.

உ.நிசாரின் 'திருப்பம்' என்ற சிறுகதை நன்றாக இருந்தது. பணம், பொருள், அந்தஸ்து, பாசம், நேசம், இவைகளில் பாசமும் நேசமும் வெற்றிபெறும் என்பதை சொல்லாமல் சொல்லும் ஒருகதை. நன்றி. **– பாணந்துறை, எம்.பி.எம்.நிஸ்வான்**

❋❋❋

ஞானம் செப்ரெம்பர் 2018 இதழ் கிடைத்தது. மு.பொ. பற்றி நானே அறியாத பல தரவுகளைத் தந்தமைக்கு ஞானசேகரனுக்கு என் நன்றிகள். மு.பொ.வுக்கு சாகித்தியரத்னா விருது நீண்ட காலத்துக்கு முன்னரே கொடுக்கப்பட்டிருக்கவேண்டும். நோய்களின் மத்தியில் முதுமையையும்

பொருட்படுத்தாமல் தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கும் மு.பொ. இன்னும் பலகாலம் வாழ்ந்து பல சாதனைகளைப் படைக்கவேண்டும்.

பவனீதா லோகநாதனின் சினிமா விமர்சனம் குருதிச் சுவையில் பெருகும் சாக்லெட் உலகம் வாசித்தேன். அவ் ஆவணத் திரைப்பட விமர்சனம் உலகெங்கும் நடந்துகொண்டிருக்கும் அநியாயங்களின் அட்டூழியங்களின் ஒரு வகைமாதிரியை - ஐஸ்வரிகோஸ்ற் கொக்கோ உற்பத்தியில் சிறுவர்கள் கொடுமைக்குள்ளாவதை - அழகாகத் தந்திருக்கிறார். பவநீதா ஒரு சிறந்த படைப்பாளி என்பது அவரது நுட்பமான மொழிநடையினூடாக சொல்லாமலே வெளிப்படுகிறது.

**– இ.ஜீவகாருண்யன்**

✸✸✸

220ஆம் இலக்க ஞானம் சஞ்சிகையில் வாசகர் பேசுகிறார் பகுதியில் றிஸ்வான் என்பவர் ஞானம் அருள்வாக்கி அவர்களுக்கு நினைவுமலர் வெளியிட்டமைக்காக வாழ்த்துத் தெரிவித்திருந்தார். அத்தோடு அவசியமற்று உலக இஸ்லாமிய மாநாட்டையும் கொச்சைப்படுத்தி எழுதி இருந்தார். அவற்றை நடாத்திய இஸ்லாமிய இலக்கிய ஆய்வகத்தின் தலைவர் என்றவகையில் நான் அதனை வன்மையாகக் கண்டிக்கின்றேன். மேற்படி நபர் முன்னர் ஒருமுறை வகவக் கவியரங்கிலும் அமைப்பின் மீது அவருக்குள்ள காழ்ப்புணர்வைக் கொட்டி எம்மால் கண்டிக்கப்பட்டவர். இருந்தும், இரண்டாவது மாநாட்டில் படைப்பிலக்கியத்தில் கற்றுக்குட்டியான அவரையும் நாம் பொன்னாடை போர்த்து, நினைவுப்பரிசிலளித்து ஊக்குவித்தோம். இன்னிலையில் நடுவுநிலை பேணும் தங்களது சஞ்சிகை இவ்வாறானவர்களின் காழ்ப்புணர்வை வெளிப்படுத்த மேடையமைத்துக்கொடுத்தது மற்றொரு அமைப்பைக் கிண்டல்செய்ய வாய்ப்பளித்ததாகவே கருதுகின்றோம். இது நேர்மையான ஒரு பத்திரிகையின் விசனிக்கத்தக்க செயற்பாடு என வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**– ஜின்னாஹ் ஷரிபுத்தீன்**

✸✸✸

அருள்வாக்கி அப்தல்காதிர் புலவர் சிறப்பிதழ் வெளியீட்டு விழாவில் பேராசியர் நு.்.மான் பேசியபோது ஆடம்பர இஸ்லாமிய மாநாடுகள் நடாத்துவோர் ஆய்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்று கூறினார். சென்ற இதழில் பாணந்துறை நிஸ்வான் வாசகர் கடிதத்திலும் அதனை எழுதியுள்ளார். ஏட்டிக்குப் போட்டியாக இஸ்லாமிய மாநாடுகள் நடத்துவோர் இனிவரும் காலங்களில் இதனைக் கவனத்தில் எடுப்பார்களா?

**– எம்.ஐ.எம்.மும்தாஸ்கபீர், நாரகன்பிட்டி**



# கண்ணீர் அஞ்சலி



**கெகிறாவ ஸஹானா**
**மறைவு**

தமிழ் இலக்கியப் பரப்பில் ஆழமான தடத்தினைப் பதித்த கெக்கிறாவ ஸஹானாவின் திடீர் மறைவு ஈழத்து இலக்கிய உலகில் அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. ஈழத்து இலக்கியப் பரப்பையும் தாண்டி சர்வதேச மட்டத்திலும் நன்கு அறியப்பட்டவர் ஸஹானா.

இவரது முதலாவது சிறுகதைத்தொகுதி 'ஒரு தேவதைக் கனவு' 1992இல் வெளியானது. இதனை வெளியிட்டதன்மூலம் அனுராதபுரம் தமிழ் இலக்கியப் பரப்பில் முதற் சிறுகதைத் தொகுதியை வெளியிட்ட பெருமையை கெக்கிறாவ ஸஹானா தனதாக்கிக்கொண்டார். இவரை இலக்கியத் துறையில் வளர்த்தெடுத்த பெருமை மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவையே சாரும். ஆசிரியையாகத் தொழில்புரிந்த இவர், 10 நூல்களை வெளியிட்டுள்ளார். 'சூழ ஓடும்நதி' என்ற நூலுக்கு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் தமிழியல் விருது வழங்கிக் கௌரவித்தது. 2002ஆம் ஆண்டு இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகம் நடத்திய உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் சிறந்த இலக்கியச் செயற்பாட்டுக்கான விருதினைப் பெற்றுக்கொண்டார்

பிற்பட்ட காலத்தில் இவர் ஞானம் சஞ்சிகையில் தொடர்ந்து எழுதிவந்தார். இவர் எழுதிய 'வெம்மையின் நீட்சி' என்ற சிறுகதை 2018 ஜூலை மாத ஞானம் இதழில் பிரசுரமானது. அக்கதையே அவரது இறுதியான இலக்கியப் படைப்பாகவும் அமைந்துவிட்டது. அவரது பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கும் இலக்கிய நெஞ்சங்களுக்கும் அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து ஞானம் அஞ்சலி செலுத்துகிறது.